Registered as a News Paper

பொழிவு - 15
குவிப்பு -10
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
ஒக்ரோபர் 2012
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/ 023 - 3233276 / 0777420811 Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/ 159 / News / 2012"

# மனிதன் இறை உருவிலே படைக்கப்பட்டிருக்கின்றான்
# ஆதலால் அவன் மரியாதையுடனும், மாண்புடனும் நடத்தப்பட வேண்டும்

### சிறைக்கைதிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்கள், அவர்களுக்கு ஏற்பட்ட உடல் உபாதைகள், சம்பவித்த மரணங்கள் தொடர்பாக

## கத்தோலிக்க ஆயர் பேரவை அறிக்கை

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் கூட்டத்தின்போது எமது சமுதாயத்தில் மனித, சமய மதிப்பீடுகள் குறைந்துகொண்டு போகும் விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. சிறைக்கைதிகள் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டமை, அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட உடல் உபாதைகள், மரணம் அதுவும் சிறைக்குள்ளேயே இத்தனையும் நடைபெற்றமை வருந்தத்தக்கதாகும். சிறைக்கைதிகள் மாண்புடன் கவனிக்கப்பட வேண்டும், அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என தேசிய சட்டம் கூறுகிறது. எனவே இத்தகைய அசம்பாவிதங்களை ஆயர் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது என ஆயர் பேரவை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## ஒக்ரோபர் செபமாலை மாதம்

ஒக்ரோபர் மாதம் செபமாலை மாதம் ஆகும். இந்த மாதத்தில் சிறப்பான முறையில் இறைமக்கள் வீடுகளிலும், அன்பியங்களிலும் இன்னும் ஏனைய குழுக்களிலும் செபமாலை செபித்து செபமாலைப் பக்தியை வளர்க்கவும், வலுப்படுத்தவும் அன்னையாம் திருச்சபை ஊக்குவிக்கின்றது.



"இருட்டிலும் நோயிலும்,
சிறையிலும் செபிக்கக்கூடிய
செபம் செபமாலை" -
(வண தோமஸ் அடிகள்)

"செபமாலை செபிக்கும்
நேரம் மரியாளின்
தோழமையுடன் மூவொரு
இறைவனுடன்
கொள்ளும் ஒன்றிப்புப்
பொழுது ஆகும் -
(புனித குழந்தை தெரேசா)

### லெபனான் நாட்டுக்கும் அனைத்து மத்திய கிழக்கு பகுதிக்கும்

# அமைதியின் திருப்பயணியாக வந்துள்ளேன்

### லெபனான் தலைநகர் பெய்ரூட் விமான நிலையத்தில் திருத்தந்தை



லெபனான் நாட்டுக்கும் அனைத்து மத்திய கிழக்கு பகுதிக்கும் அமைதியின் திருப்பயணியாக, இப்பகுதி மக்களின் நண்பராக வந்துள்ளேன் என லெபனான் தலைநகர் பெய்ரூட் விமான நிலையத்தில் வந்திறங்கிய திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் தெரிவித்தார். லெபனான் நாட்டுக்கும் அனைத்து மத்திய கிழக்கு பகுதிக்கும் அமைதியையும் ஒப்புரவையும், ஒன்றிப்பையும் வழங்கும் நோக்கில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் லெபனான் நாட்டிற்கான தனது முதல் திருப்பயணத்தை செப்ரம்பர் 14ஆம் திகதி வெள்ளிக் கிழமை மேற்கொண்டிருந்தார். விமானம் தரையிறங்குவதைக் கண்ட மக்கள் குறிப்பாக இளையோர் லெபனான் மற்றும் வத்திக்கான் நாடுகளின் கொடிகளை அசைத்தவாறு 'பெனதெத்தே பெனதெத்தே' என ஆரவாரித்தனர்.


(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

### உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும்

## விசுவாச ஆண்டு ஆரம்பமாகிறது

2012 ஒக்ரோபர் 11 தொடக்கம் 2013 நவம்பர் 24ஆம் திகதி வரையான காலப்பகுதியை விசுவாச ஆண்டாக (Year of Faith) கொண்டாட வேண்டும் எனத் திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார். விசுவாச ஆண்டு அருளின் காலமாகவும், அர்ப்பணத்தின் காலமாகவும் அமையும் என்றும் முழு மனதுடன் கடவுளிடம் திரும்பி வந்து அவரில் கொண்டுள்ள விசுவாசத்தை ஆழப்படுத்தும் காலமாக அமையும் என்றும் திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

## மகிழ்ச்சியில் திழைக்கும் மட்டக்களப்பு



புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முதல் ஆயராக மேதகு பொன்னையா ஜோசப் ஆண்டகை கடந்த செப்ரம்பர் 23ஆம் திகதி தனது பணிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். இதனால் மட்டக்களப்புத் திருச்சபை மகிழ்ச்சியில் திழைக்கின்றது. புதிய ஆயருக்கும் புதிய மறை மாவட்டத்திற்கும் மன்னார் மறை மாவட்டம் சார்பாக மன்னாவின் மனம்நிறைந்த வாழ்த்துக்களும் செபங்களும் உரித்தாகுக!

### ஆயர்த்துவப் பணியில் 20 ஆண்டுகளை நிறைவுசெய்யும்

## மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை




மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை ஆயராகத் திருப்பொழிவு பெற்ற 20 ஆண்டுகள் நிறைவை ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி நினைவுகூருகின்றார்.

1992ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20ஆம் திகதி மடுத்திருப்பதியில் மேதகு தோமஸ் ஆண்டகை அவர்களால் இவர் ஆயராக திருப்பொழிவு செய்யப்பட்டார்.

ஆயர்த்துவப் பணியில் 20 ஆண்டுகளை நினைவுகூரும் எமது அன்புக்குரிய ஆயருக்கு அனைத்து இறைமக்கள் சார்பாக மன்னா மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

# முகமது நபி குறித்த தெய்வநிந்தனைத் திரைப்படம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத செயல்

### இந்திய ஆயர் பேரவைத் தலைவர் கர்தினால் ஒஸ்வோல்ட் கிறாசியா



முகமது நபி குறித்த தெய்வநிந்தனைத் திரைப்படம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத செயல் எனினும் அச்செயலுக்கு எதிரான எதிர்ப்பை வன்முறை மூலமாக அல்ல மாறாக உரையாடல் மற்றும் சமாதானம் மூலமாகக் காட்டவேண்டும் என இந்திய ஆயர் பேரவைத் தலைவர் மும்பை பேராயர் கர்தினால் ஒஸ்வோல்ட்ட கிராசியாஸ் கூறினார். அமெரிக்க ஐக்கிய நாட்டில் வெளியான இஸ்லாத்தை கேலி செய்யும் திரைப்படத்திற்கு எதிராக பல முஸ்லிம் நாடுகளில் கடும் எதிர்ப்புக்களும் வன்முறைகளும் நடைபெற்று வரும்வேளை, இந்த எதிர்ப்புக்களில் சில இடங்களில் அப்பாவி மக்கள் காயமடைந்துள்ளதையும், இறந்துள்ளதையும் குறித்து ஆசிய செய்தி நிறுவனத்திடம் பேசிய கர்தினால் இவ்வாறு கூறினார்.

இந்தத் திரைப்படம் குறித்து கருத்துத் தெரிவித்த கர்தினால், ஊடகத் துறைக்கு சுதந்திரம் இருக்கின்றது, மற்றும் ஊடகத் துறையின் சுதந்திரத்தை நாம் மதிக்க வேண்டும். எனினும் அனைத்துச் சுதந்திரமும் பொறுப்பான விதத்தில் பயன்படுத்தப்படவேண்டும். அடுத்தவருக்குப் புனிதமாக இருப்பதை கேலி செய்வதற்கும், அவமதிப்பதற்கும் ஊடகத்தைப் பயன்படுத்துவது தவறானது என்றும் அவர் கூறினார். மற்றவர்களை [illegible] நம்பிக்கைகளை மதித்துப் போற்ற நாம் பழகவேண்டும் [illegible] ஒருபோதும் கடந்துசெல்லக்கூடாத சில எல்லைகள் உள்ளன என்றும் கூறினார்

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## புதிய மறைமாவட்டமும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளும்

மட்டக்களப்பு அம்பாறை ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதாக புதிய மட்டக்களப்பு மறைமாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் முதல் ஆயராக மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.

காலத்தின் தேவைக்கு ஏற்ப புதிய மறைமாவட்டங்கள் திருச்சபையில் ஏற்படுத்தப்படுகின்றன. இறைமக்களுடைய விசுவாச வாழ்வின் வளர்ச்சியை முதன்மையான இலக்காகக்கொண்டே புதிய மறைமாவட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. அதேவேளை அந்த தலத்திருச்சபையின் சமூக, பொருளாதார, அரசியல் பண்பாட்டு சூழ்நிலைகளும் அவற்றின் வளர்ச்சியும் இதில் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் புதிய மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் தோற்றம் மட்டக்களப்பு தலத்திருச்சபையின் விசுவாச வாழ்வில் இன்னும் அதிக வளத்தையும் செழிப்பையும் கொண்டுவரும் என்று திடமாக நம்பலாம். அதேபோன்று இம்மக்களின் சமூக, பொருளாதர, அரசியல், பண்பாட்டு சூழமைவிலும் முக்கிய மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாக மண்ணின் மைந்தராக ஆயர் பொன்னையா ஜோசவ் விளங்குவதால் இந்த எதிர்பார்ப்பு இயல்பாகவே இன்னும் அதிகமாக எழுகின்றது.

புதிய ஆயருக்கு முன்னால் உள்ள களநிலைச் சவால்களையும் ஈழத்தமிழரின் இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழ் மறைமாவட்ட ஆயர்களுக்கு முன்னால் உள்ள கடமைப்பாட்டையும் இவ்வேளையில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக அமையும். இவற்றின் பின்னணியில்தான் புதிய மறைமாவட்டத்திடமிருந்து தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு மேலெழுகின்றது.

மட்டக்களப்பு மறைமாவாட்டம் தன்னகத்தே பல இன, மத மக்களைக் கொண்டுள்ளது. இங்கு தமிழ் மக்கள் மட்டும் வாழவில்லை, முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களும் வாழ்கின்றார்கள். இங்கு கிறிஸ்தவர்கள் மட்டும் வாழவில்லை. இந்துக்கள் பெருமளவில் வாழ்கிறார்கள். அடுத்து இஸ்லாமியர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் 30 வீதமாக உள்ளனர். மேலும் பௌத்த மக்களும் வாழ்கிறார்கள். அம்பாறை மாவட்டத்தில் இவர்கள் பெருந்தொகையினராக உள்ளனர். அத்துடன் பல்வேறு பிரதான கிறிஸ்தவ சபைகள், கிறிஸ்தவ அடிப்படைவாதக் குழுக்கள் பலவும் உள்ளன.

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் மொத்த சனத்தொகை 1126,576 ஆகும். இதில் கத்தோலிக்கர் 'சிறு மந்தையாக' வெறும் 45,000 பேர் மட்டுமே உள்ளனர். எனவே மலர்ந்துள்ள புதிய மறைமாவட்டத்தின் முன்னால் சமயங்களுக் - கிடையிலான உரையாடலும், கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான உறவாடலும் முக்கிய விடயமாக அமையவேண்டி உள்ளன.

இந்தப் பல்லின, பல்சமய சூழலில் மட்டக்களப்புத் திருச்சபையின் பணி காத்திரமானதாகும். வேற்றுமையில் ஒற்றுமை (Unity in Diversity) என்ற கொள்கைக்கிணங்க திருச்சபையின் தனித்துவமான கோட்பாடுகளைக் காத்துக்கொண்டு அனைவரோடும் கைகோர்த்துச் செல்லவேண்டிய சவால் இப்புதிய மறைமாவட்டத்தின் முன் உள்ளது. கிழக்குமாகாண அரசியல் சூழ்நிலை இன்று வித்தியாசமான வடிவத்தைப் பெற்றுள்ளது. யாரும் எதிர்பார்க்காத வகையில் ஆழும் கட்சி கிழக்கு மாகாண ஆட்சியில் அமர்ந்துள்ளது. இந்நிலையில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அரசியல் நெருக்கடிகள் 'மத்தியில் திருச்சபையின் மத்தியஸ்தப் பணி அங்கு காத்திரமானதாக அமையவேண்டி உள்ளது.

இன்றைய அரசியல் சூழமையில் ஈழத்தமிழரின் இன்றைய நிலை கவலைக்கிடமானதாகும். அதிலும் எதிர்காலம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. யுத்தம் முடிந்த கையோடு எல்லாப்பிரச்சினைகளும் தீர்ந்து சுமுக நிலை தோன்றிவிடும் என்று எண்ணியவர்களின் எண்ணமெல்லாம் பகல் கனவாகவே உள்ளது.

இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களின் அக்கறைக்குரிய விடயங்களில் தமிழ் மறைமாவட்ட ஆயர்கள் ஒன்றுசேர்ந்து குரல்கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு பலகாலமாக உள்ளது. மேய்ப்புப் பணி சார்ந்த விடயங்களிலும் ஏனைய மக்கள் சார்ந்த சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு பிரச்சினைகளிலும் தமிழ் ஆயர்களின் ஒருமித்த குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

இப்படியான ஒரு சூழ்நிலையில் புதிய மறைமாவட்ட ஆயர் முன்னால் பல பணிகள், சவால்கள் காத்துக்கிடக்கின்றன. புதிய மறைமாவட்டத்திடமிருந்து தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் தொடர்பில் தேவையான வியூகங்களை, பொறிமுறைகளை அமைத்து செயற்படவேண்டுமென தமிழ் மக்கள் சார்பாக அன்புரிமையோடு வேண்டுகோள் விடுகின்றோம்.

***மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை***
***அன்புடன் அருட்பணியாளர் தமிழ் நேசன்,***
***மன்னா பதிப்பாசிரியர்***

# வாசகர் எண்ணங்கள்

### அனைத்துப் பக்கங்களும் அருமை

இனிய மன்னாவே உனது எளில்மிகு, தரம்மிகு சுவைமிகு வளர்ச்சிகண்டு மிக மிக சந்தோஷம்!
அனைத்துப் பக்கங்களும் அருமையிலும் அருமை.
உனது சேவைகள் தொடர்ந்திட வாழ்த்துக்கள்
***- டெய்சி ஜெயசீலன்,***
***சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.***

### தெளிவு, துணிவு, கனிவு நிறைந்த மனப்பொழிவு

மன்னா பத்திரிகையில் அதன் பதிப்பாசிரியர் பக்கச்சார்பின்றி எழுதிவரும் 'மனப்பொழிவு' உண்மையில் வரவேற்கத்தக்கது. அன்று ஆண்டவராம் இயேசு மொழிந்த "மலைப்பொழிவு" எப்படி மக்களை சிந்திக்கத் தூண்டியதோ அதேபோன்று இன்று அவருடைய மனப்பொழிவும் நிச்சயமாக மன்னா பத்திரிகையை வாசிக்கும் தமிழ் பேசும் மக்களையும் சிந்திக்க வைக்கும் என்பது உண்மையே.

"ஒரு எழுத்தாளனுக்கு தெளிவு வேண்டும். அதைத் தைரியமாக சொல்கிற துணிவு வேண்டும். அதை நாசூக்காக கனிவுடன் சொல்ல வேண்டும்" என்று ஒரு விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருந்தார். மன்னா பதிப்பாசிரியரிடமும் இந்தத் தெளிவு, துணிவு, கனிவு மூன்றும் கலந்துள்ளது என்பதை 'மனப்பொழிவு' எடுத்துக்காட்டுகின்றது.
தங்களின் பணி தொடர நல்வாழ்த்துக்கள்.
***- க. அருள்நேசன், குருநகர், யாழ்ப்பாணம்***

### மாண்புமிக்க மன்னா!

மாதமொரு முறை மலர்கின்ற மாண்புள்ள மன்னாவே!
சில்லறை விலையாம் எட்டைந்து விலையுடன்
சிறப்பாக, மாண்புறு மன்னாரில் பவனி வருகின்றாய்
நீ சுமந்து வரும் சுவையான செய்திக்காய்
வாசலில் போட்ட படிக்கல்போல காத்திருக்கின்றேன்.
ஆன்மீகம் முதல் அரசியல் வரைக்கும்
பங்குச் செய்திமுதல் பாப்புவின் செய்திவரைக்கும்
என அத்தனையும் அற்புதம்
அன்புராசாவின் அதிர்வுகள் எம்மையும்
அதிரவைக்கின்றன மாதமொரு புனிதரை
அறியும் அதிஷ்டம் கிடைக்கின்றது.
"நீ வளர வேண்டும் உன் புகழ் ஓங்க வேண்டும்"
***- தினேஸ் அகிலா, எமில் நகர், மன்னார்.***

### தயவுசெய்து கவனியுங்கள்

- மன்னாவை நேரடியாகப் பெறுவோர் பத்திரிகைப் பணத்தை காலம் தாழ்த்தாமல் கொடுத்து ஒத்துழையுங்கள்.
- தபால் மூலம் பெறும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர் மறக்காமல் உங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.


நன்றி. - மன்னா நிர்வாகம்

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2012

### கார்த்திகை

04 - அன்புக் கன்னியர் சபை விழா
05 - இறந்துபோன ஆயர்கள், குருக்கள், துறவிகள் ஆன்ம இளைப்பாற்றிக்காக மாலை 5.00 மணிக்கு தூய செபஸ்தியார் பேராலயத்தில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
22 - தூய சிசிலியம்மாள் - பாடகர் குழாமினரின் விழா
25 - கிறிஸ்து அரசர் திருவிழா - முருங்கன், நெடுங்கேணி, குருமன்காடு (காணிக்கைகள் ஆயர் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்படும்)
30 - தூய அந்திரேயா திருவிழா - தோட்டவெளி

### உண்மை உறைக்கும் கமிலஸ்



(நன்றி - தி. மெசஞ்சர்)

# செபமாலை சொல்ல வாறீங்களா?

## செபமாலையின் மகத்துவம்

"செபமாலை சொல்லும் படையணி ஒன்றை எனக்குக் கொடுங்கள். இந்த உலகத்தையே வெல்வேன்" என்றார். திருத்தந்தை 9ம் பத்திநாதர். செபம் + மாலை = செபமாலை. செபங்கள் நிறைந்த மணிமாலை, முத்துமாலை, ரோஜா மாலை இந்தச் செபமாலை.

இது கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் உயிர்நாடி. விண்ணகத்தின் ஈடேற்றம், குடும்பத்தின் ஒற்றுமை, தீய சக்திகளிலிருந்து விடுதலை. கிறிஸ்துவை அறிந்து அன்பு செய்யவும், அவரது பாஸ்கா மறைபொருளில் பங்குபெறுவதும் நம் ஒவ்வொருவரின் கடமை. இந்தப் பாஸ்கா மறைபொருளைத் தன்னிலே உள்ளடக்கி, நம் விசுவாச வாழ்வுக்கு ஒளியூட்டுவதே இந்தச் செபமாலை. இது செபிக்கும் மனுக்குலத்தின் முன்னோடியும், மாதிரியுமான கன்னிமரியாளின் செபம். இறைவனின் ஆசீர்வாதத்தை அதிகமாக அன்னையின் பரிந்துரையிலே திருச்சபை கெஞ்சிக் கேட்கும் செபம். இந்தச் செபமாலை தட்டுத்தடுமாறித் தவிக்கும் தனி மனிதனைக் கரைசேர்க்கும் கலங்கரை விளக்கு. உடைந்துபோன உள்ளங்களை உருக் கொடுப்பதற்கும், சிதறிய குடும்பங்களை ஒன்றுசேர்ப்பதற்கும் வல்லமை கொண்ட செபம் இந்தச் செபமாலை.

நம்மைப் பெற்றெடுத்த ஒவ்வொரு தாயும் கடவுளின் உருவம். ஒரு நாளைக்கு ஆயிரம் முறைகள் **'அம்மா'** என்று அழைத்தாலும், சலிப்படையாது. ஒவ்வொரு முறையும் ஓடிவந்து நம்மை அரவணைக்கும் மண்ணின் தெய்வம் அவள். **'என் வாழ்வின் பெரிய பாடங்கள் எல்லாம் என்னுடைய தாயின் காலடியில்தான் கற்றேன்"** என்கின்றார் ஆபிரகாம் லிங்கன். இதைப்போல ஒவ்வொரு முறையும் **'அருள் நிறைந்த மரியே வாழ்க'** என்று தொடர்ந்து அன்னை மரியாவை வாழ்த்தும்போது நாமும் அருள் நிறைந்தவர்களாக மாறுகின்றோம்.

மீட்புக்கான பர்டங்களை நாம் அன்னையிடம் கற்கின்றோம். இறைவனுடன் மிக நெருக்கமாக இருந்த, கடவுளாயிருந்து மனித அவதாரம் எடுத்தவரின் தாயாகிய கன்னி மரியாவின் இருதயத்தைக்கொண்டு நாம் இறைவனைத் தியானிக்கின்றோம். நாம் எதைப்பற்றித் தியானிக்கின்றோமோ அதுவாகவே மாறுகின்றோம். நம் அன்னையின் ஆன்மீக அழகைத்தியானிக்க தியானிக்க நமது ஆன்மாவும் அழகாகிறது. கன்னிமரியாவின் வழியாக தம்மையே இறைவனுடன் பிணைக்கும் அன்புச் சங்கிலிதான் இந்தச் செபமாலை.

## செபமாலையின் மகிமை

### இந்த உரையாடலைப் பார்ப்போமா?

"ராஜா எல்லா சாமான்களையும் எடுத்து வைத்துவிட்டாயா?' "ஆமா அம்மா". "மகனே, காந்திஜி வெளிநாட்டுக்குப் போகும்போது அவுங்க அம்மா மூன்று சத்தியம் வாங்கினார்களாம்." "அம்மா, அதை நான் முன்பே படித்திருக்கின்றேன். இதைப்போல் நீங்களும் சொல்லப் போறீங்களா?" 1.போனவுடனே போன் பண்ணு 2. நல்லா சாப்பிடு 3. வெளியே அங்க இங்க என்று சுத்தாதே என்றுதானே சொல்லப்போறீங்க" "இல்லடா இது வேறு சத்தியம்" "என்னம்மா சொல்லுங்க" "தினமும் செபமாலை சொல்லு. சட்டைப்பையில் செபமாலையை வைத்துக்கொள். அங்கு நேரம் சூழ்நிலை எப்படியோ தெரியாது. பூசைக்குப்போக வசதி உண்டா தெரியாது? செபமாலை உனக்குப் பாதுகாப்பும் கேடயமுமாகும். என்னுடைய அம்மா எனக்கு இவற்றை சொல்லி தந்தார். நான் இதை உனக்குச் சொல்லித் தருகிறேன். நானும் தினமும் செபமாலை சொல்லிவருகிறேன். மாதா நம்மை எல்லா வகையிலும் காப்பாற்றி வழிநடத்தி வருகின்றாள்"

"கண்டிப்பா நான் செபமாலை சொல்லுவேன் அம்மா, நான் மாதாவின் பிள்ளை"

மகனை விமானத்தில் அனுப்பிவிட்டு இரு நாட்களாக போனை எதிர்பார்த்து காத்திருந்தார். மாலையில் செல்போன் ஒலிக்கவும், அவசரமாக எடுத்தார். மகனின் குரல் கேட்கவும், "பத்திரமாய் போய் சேர்ந்தாயா? என்று கேட்டார்.

"அம்மா விமானம் தரையிறங்க பத்து நிமிடத்திற்கு முன் என்ஜினில் கோளாறு என்று சொன்னார்கள். எல்லோரும் பயந்து அவுங்க, அவுங்க தெய்வத்தை வேண்டினார்கள். நானும் செபமாலையை எடுத்து "தாயே என்னையும் விமானத்திலுள்ள அனைவரையும் காப்பாற்று, என்று செபித்தேன், எந்த ஆபத்துமின்றி அனைவரும் பத்திரமாக வந்து சேர்ந்தோம். மாதாவுக்கு நன்றி சொன்னேன் செபமாலை ஒப்புக்கொடுத்தேன்" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புரவு, மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக

# மன்னார் ஆயர் ஜனாதிபதிக்கு அறிக்கை

மன்னார் மறைமாவட்டத்தில் காணப்படும் ஒப்புரவு, மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் ஜனாதிபதி மகிந்த இராஜபக்ச அவர்களுக்கு நீண்ட அறிக்கையொன்றை கையளித்துள்ளார். கடந்த செப்ரம்பர் மாதம் 13ஆம் திகதி கொழும்பில் உள்ள பேராயர் இல்லத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரிடம் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டது. ஜனாதிபதியின் சார்பில் இந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்ட அரச தரப்பினர் இதில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தனர். இந்த அறிக்கையோடு இணைந்ததாக ஆயர் அவர்கள் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

போர் முடிவடைந்த நிலையில் பல்வேறு விடயங்களில் தமக்கு சிறப்பான வாழ்வு கிடைக்கும் என மன்னார் மறைமாவட்ட மக்கள் எதிர்பார்த்திருந்தனர். அத்துடன் நிலையான சமாதானம் மற்றும் நீதியை நோக்கிய ஒப்புரவு நடவடிக்கைகளும் இடம்பெறும் என எதிர்பார்த்தனர்.

திருச்சபைத் தலைவர்கள் என்ற ரீதியில், நாம் ஏனைய சமயத் தலைவர்களோடும், சிவில் சமூகத்தோடும், அரசாங்க அதிகாரிகளோடும் சேர்ந்து நிலையான சமாதானத்தையும், ஒப்புரவையும் அடையும் நோக்கத்தோடு மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளை தீர்த்துவைக்க முயன்றோம்.

மக்களுடைய மனங்களை வென்றெடுத்து நிலையான சமாதானத்தையும், ஒப்புரவையும் ஏற்படுத்தும் எமது பயணத்தில் தொடர்ந்து நாம் முக்கியமான மனிதாபிமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றோம். எனவே அப்படியான சில பிரச்சினைகள் தொடர்பாக தாங்கள் தேவையான நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் தங்களுக்கு இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன். நான் முன்வைக்கும் இந்த அக்கறைக்குரிய விடயங்கள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பொதுவானவையாகும் என மன்னார் ஆயர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

11 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில் 16 விடயங்கள் விரிவாக சுட்டிக்காட்டப்பட்டு ஒவ்வொரு விடயம் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்கு உதவியாக ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அவ்வறிக்கையில் முன்வைக்கப்படடுள்ள 16 விடயங்களும் பின்வருமாறு:

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## நம்மட பாதருக்கும் மாற்றமா?

### மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான சில புதிய நியமனங்கள்

அருட்பணி. ரி. நவரட்ணம் - பொறுப்பாளர், புனித சூசையப்பர் பண்ணை, கன்னாட்டி
அருட்பணி. அற்புதராஜா (அ.ம.தி) – பங்குத்தந்தை, இலுப்பைக்குளம்
அருட்பணி. ஏ. ஆரோக்கியம் - பங்குத்தந்தை, பண்டிவிரிச்சான்.
அருட்பணி. எம். செல்வநாதன் பீரீஸ் - காலி மறைமாவட்டம்.
அருட்பணி. மில்ரன் தேவராஜ் (நியூட்டன்) – பங்குத்தந்தை, கனகராயன்குளம்.
அருட்பணி. வி. எமில் எழில்ராஜ் - உதவிப் பங்குத்தந்தை, வங்காலை.
அருட்பணி. எஸ். தவராஜ் - உதவிப் பங்குத்தந்தை, மன்னார் பேராலயம்
அருட்பணி. ஏ. டெஸ்மன் ஆஞ்சலோ – உதவிப் பங்குத்தந்தை் மன்னார் பேராலயம்
அருட்பணி. எஸ். அருட்குமரன் - உதவிப் பங்குத்தந்தை, வவுனியா.

## பெங்களூர் விவிலியப் பயிற்சியில் மன்னார் குருக்கள்

முருங்கன் பங்குத்தந்தை அருட்பணி. அருள்ராஜ் குரூஸ் அவர்களும், ஓமந்தை பங்குத்தந்தை அருட்பணி. அசிசி யூட் அவர்களும், இந்தியாவின் பெங்களூர் நகரில் அமைந்துள்ள தேசிய விவிலிய, மறைக்கல்வி மற்றும் திருவழிபாட்டு மையத்தில் இடம்பெற்ற ஒரு மாத விவிலியம் மற்றும் ஆன்மீகம் தொடர்பான பயிற்சிக்கருத்தரங்கில் கலந்துகொண்டபின்னர் நாடு திரும்பியுள்ளனர்.

## உலக மறைபரப்பு தினம்

### அர்த்தத்தோடும் ஆர்வத்தோடும் கொண்டாடுவோமா?

உலக மறைபரப்பு தினம் இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தை முன்னிட்டு 'செபச் செண்டு' போன்ற ஆன்மீக முயற்சிகளில் ஈடுபடும்படியாகவும், வழமைபோன்று மறைபரப்பு நிதியை சேகரிக்க பங்குகளில் வெவ்வேறு குழுக்களை அமைத்து ஒரு மாதத்திற்கு முன்னரே திட்டமிட்டு செயலாற்றும்படியாகவும் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து குருக்களையும் பங்கு மக்களையும் மன்னார் ஆயர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

## டிவைன் தியானத்தில் மன்னார் குருக்கள்

மன்னார் மறைமாவட்டத்தைச் சார்ந்த 6 குருக்கள் இந்தியாவின் கேரள மானிலத்தில் ஒள்ள போட்டா டிவைன் தியான இல்லத்தில் நடைபெற்ற 5 நாள் தியானத்தில் கலந்துகொண்டு நாடுதிரும்பியுள்ளனர். கண்டி தேசிய குருமடத்தின் விரிவுரையாளர் அருட்பணி. பி. கிறிஸ்துநாயகம், ஆட்காட்டிவெளி பங்குத்தந்தை அருட்பணி. எஸ். ஜெயபாலன், பண்டிவிரிச்சான் பங்குத்தந்தை அருட்பணி. ஏ. ஆரோக்கியம், பம்பை மடு பங்குத்தந்தை அருட்பணி. ஈ. டெனி கலிஸ்ரஸ், அன்பிய இயக்குனர் அருட்பணி. எஸ். மில்டன் டக்ளஸ் லோகு, கோமரசன்குளம் பங்குத்தந்தை அருட்பணி. சுகுனராஜ் குரூஸ் ஆகியோரே இத்தியானத்தில் பங்கெடுத்தவர்களாவர்.

கொழும்பைச்சேர்ந்த பொதுநிலையினர் ஐவன் அவர்களின் நிதி அனுசரணையிலேயே இந்தியாவுக்கான இப்பயணத்தை இக்குருக்கள் மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. ஐவன் அவர்களுக்கு மன்னார் மறைமாவட்டம் செபத்தோடுகூடிய நன்றியைத் தெரிவிக்கின்றது.

### இசைத்துறையில் பட்டம் பெற்று நாடு திரும்பியுள்ள

## நிர்மலராஜ் அடிகளார்



முருங்கன் கிராமத்தைச் சேர்ந்த செபமாலை மாதா துறவற சபைக் குரு அருட்பணி. எம். நிர்மலராஜ் C.R அவர்கள் இந்தியாவில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் அனுசரணையில் இயங்கும் கலைக்காவேரி கல்லூரியில் ஆறு வருடங்கள் கர்நாடக சங்கீதத்தை பயின்று B.F.A (கலைமாணிப் பட்டம்) M.F.A (முதுமாணிப் பட்டம்) மற்றும் M.Phil (கலை ஆய்வியல் நிறைஞர்) ஆகிய பட்டங்களைப் பெற்று தாயகம் திரும்பியுள்ளார்.

இவர் தனது இசைக்கல்வி பயிலும் காலத்தில் 'நெஞ்சத்தின் சந்தங்கள்' எனும் ஒலி நாடாவையும் 'அஞ்சாதே நீ' என்னும் ஒளி, ஒலி இறுவெட்டினையும் வெளியிட்டுள்ளார். மேலும் இவர் 'ஆன்மீக அலைகள்' என்ற நூலையும் வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் தற்போது கண்டியில் உள்ள செபமாலை மாதா துறவற சபையின் குருமட அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இசை ஆய்வுகள் மற்றும் இசை பற்றிய கருத்தரங்கு போன்றவற்றையும் நெறிப்படுத்த ஆவலாய் உள்ளார்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :
Rosarian Scholasticate,
226/5, Meekanuwa,
Ampitiya - 20160, Sri Lanka.
Tel. 081 - 2219679,
Mobile . 075 - 4412181
E.mail
nirmalarj_raj@yahoo.com


## விருட்சமே வெளியே வா

## மன்னாரில் நூல் வெளியீட்டு விழா

### மாணவர்களுக்கு வழிகாட்டும் வித்தியாசமான நூல்

'விருட்சமே வெளியே வா' என்ற பெயரில் பல்துறை வித்தகன் ஆசிரியர் அ. நிசாந்தன் எழுதிய நூல் வெளியீட்டு விழா கடந்த செப்ரம்பர் மாதம் 18ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது. 'திருப்புமுனை' வெளியீடான இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு தமிழ் நேசன் அடிகளார் தலைமை தாங்கினார். மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். சியான் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். பாடசாலை மாணவர்களுக்கு உந்துசக்தியையும் உற்சாகத்தையும் வழங்குகின்ற ஒரு நூலாக இது வெளிவந்துள்ளது. இதன் விலை 300.00 ரூபா ஆகும். இந்நூல் பற்றிய கருத்துரையை அடுத்த மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## உரோமில் உயர் கல்வியை நிறைவுசெய்த சத்தியராஜ் அடிகளார் நாடு திரும்பினார்



மன்னார் மறைமாவட்டக் குரு அருட்பணி. சத்தியராஜ் அடிகளார் மறைபரப்பியலில் (Missiology) 3 வருட (2009 யூன் - 2012 யூன்) உயர் கல்வியை நிறைவுசெய்து நாடு திரும்பியுள்ளார். இவர் உரோமில் உள்ள ஊர்பானியா பல்கலைக்கழகத்தில் (Urbaniana University) licentiate எனப்படும் முதுமாணிப் பட்டத்தை நிறைவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவருடைய புதிய பணித்தளம் பற்றிய செய்திகள் இதுவரை மன்னாவுக்கு எட்டவில்லை.

உயர் கல்வியை நிறைவுசெய்து நாடு திரும்பியுள்ள சத்தியராஜ் அடிகளாரை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்தி வரவேற்கின்றது.

## மருங்கோடி ஓய்வகத்தில் முதியோர் ஒன்றுகூடல்



மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராமங்களின் முதியோர்கள் 30ற்கும் மேற்பட்டோருக்கு கடந்த 12.09.2012 அன்று புதன்கிழமை மருங்கோடி முதியோர் இல்லத்தில் அமைந்துள்ள செப இல்லத்தில், அருட்பணி. ஜே. பி. தேவராஜா அடிகளார் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அவர் தம் மறையுரையில் முதுமையில் தனிச்செபத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி அமைதியாக இருந்து செபிப்பதற்கு இவ்வில்லம் அமைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

அதைத் தொடர்ந்து முதியோர் தங்களிடையே கலந்துரையாடினர். மதிய உணவு வழங்கப்பட்டது. மத பேதமின்றி எல்லோரும் ஒன்றாகக் கலந்துகொண்டு மகிழ்ச்சியாக இந்நாளைக் களித்தனர். பிற்பகல் தேனீர் அருந்தி முதுமையில் ஒன்றுகூடலின் மகத்துவத்தை உணர்ந்தவர்களாக மனநிறைவுடன் தம் இல்லம் சென்றனர்.

### மன்னார் மண்ணின் மைந்தர்கள்

## கிளறிசியன் சபையில் நித்திய வாக்குத்தத்தம்

கிளறிசியன் துறவற சபையைச் சேர்ந்த செபமாலை யூட் சைலன் (முருங்கன், சுண்டிக்குளி), அந்தோனி கொடுதோர் சூசைநாயகம் (முருங்கன், கற்கடந்தகுளம்) ஆகியோர் கடந்த 08.09.2012 அன்று காலை 10.30 மணிக்கு கண்டி குருதெனிய கிளாறட் நிவாஸ் இல்லத்தில் தமது தறவற வாழ்வுக்கான நித்திய வாக்குத்தத்தை இறைவனுக்கு அளித்தனர். அருட்சகோதரர் யூட் சைலன் அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு வசந்தக்குமார் அடிகளாரின் சகோதரர் ஆவார்.

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

### மன்னார் மாவட்டத்தில்

## சிறந்த பிரதேச மட்ட முதியோர் அமைப்பாக வங்காலை முதியோர் சங்கம் தேரிவு

சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகம் 2012ம் ஆண்டுக்கான பிரதேசங்களில் மேற்கொண்ட சிறந்த பிரதேச மட்ட அமைப்புக்களைத் தெரிவுசெய்வதற்காக நடாத்திய தெரிவில் மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலகப் பிரிவில் நானாட்டான் செயலகப்பிரிவு தெரிவுசெய்யப்பட்டது. இந்தத் தெரிவில் வங்காலை புனித சூசையப்பர் முதியோர் சங்கம் பிரதேச மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் சிறந்த அமைப்பென அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச முதியோர் தின வைபவம் 2012 ஒக்ரோபர் 01 திகதிகளில் சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவுசெய்யப்பட்ட முதியோர் அமைப்புக்களுக்கு அன்றைய தினம் சான்றிதழும் பரிசும் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்காலை புனித சூசையப்பர் முதியோர் சங்கம் 2005, 2006ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட மாகாண மட்ட நிகழ்வுகளில் 1ம் இடத்தை தொடர்ந்து பெற்றுக்கொண்டமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலித்தனமும் பொய்களும் ஒருபோதும் சமாதானத்தை உருவாக்கிவிடாது

# தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர் யுவதிகளின் விபரத்தினை அரசாங்கம் வெளியிட வேண்டும்

## நெடுங்கேணியில் இடம்பெற்ற சர்வதேச சமாதானதின வைபவத்தில் அநுராதபுர ஆயர் நோபேட் அன்ராடி ஆண்டகை கோரிக்கை



தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர் யுவதிகளின் விபரத்தினை அரசாங்கம் வெளியிட வேண்டும். கைதாகி காணாமல்போனோர் விடயத்தில் அரசாங்கம் பொறுப்புக்கூறவேண்டியது அவசியமாகும் என அநுராதபுர மறைமாவட்ட ஆயரும், கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் செயலாளருமான மேதகு நோபேட் அன்ராடி ஆண்டகை கோரிக்கை விடுத்தார். வவுனியா நெடுங்கேணி மகாவித்தியாலய மைதானத்தில் சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு கடந்த செப்ரம்பர் 21ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இந்தக் கோரிக்கையினை விடுத்தார்.

அங்கு உரையாற்றிய ஆயர் மேலும் தெரிவித்ததாவது, போலித்தனமும் பொய்களும் ஒருபோதும் சமாதானத்தை உருவாக்கிவிடாது; மாறாக உண்மை மட்டுமே சமாதானத்தை உருவாக்கும். இந்த வகையில் சம்மந்தப்பட்ட அனைவரும் உண்மையாகச் செயற்பட்டு நல்லெண்ணத்தை ஏற்பாடுத்துவதற்கான பயணத்தில் ஈடுபடவேண்டும். இதன் மூலமே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும். யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் கைதுசெய்யப்பட்டவர்கள் மற்றும் சரணடைந்தவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இந்தத் தமிழ் இளைஞர் யுவதிகளின் விபரங்களை அரசாங்கம் வெளியிட வேண்டும். கைதாகி காணாமல்போனோர் விடயத்தில் அரசாங்கம் பொறுப்புக்கூறுவது அவசியமானதாகும். தமது அன்புக்-குரியவர்களின் நிலை தொடர்பில் அறிந்துகொள்வதற்கு ஒவ்வொரு உறவினர்களுக்கும் உரிமை உள்ளது. இதனை நாம் மறந்துபோகக்கூடாது. யுத்தத்தின்போது உயிரிழந்த உறவினர்களுக்கு அஞ்சலி செலுத்தும் உரிமை சகல மக்களுக்கும் உள்ளது. போலித்தனமும் பொய்களும் சமாதானத்தை உருவாக்கிவிடாது. இந்த வகையில் உண்மையாகச் செயற்பட்டு நல்லிணக்கத்தை கட்டி எழுப்பவேண்டியதே இன்றைய தேவையாக உள்ளது என்றார்.

## வங்காலை ஆனாள் அன்னைக்கு புதிய சிம்மாசனம்



வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் உள்ள அன்னம்மாள் திருச்சுருபம் தற்போது புதிதாகக் கட்டப்பட்ட சிம்மாசனத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த சிம்மாசனத்தின் அமைப்புக்கான வரைபடத்தை வங்காலை ஓவியர் ஜெரோமி அவர்கள் வரைந்துள்ளார். இந்த சிம்மாசனத்திற்கான செலவை வங்காலையைச் சேர்ந்த திரு. பிலிப் டார்வின் சில்வா அவர்கள் பொறுப்பேற்றிருந்தார். புதிய இடத்தில் கொலுவீற்றிருக்கும் ஆனாள் அன்னையின் இருப்பிடம் தொடர்பாக மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

"ஆடுங்கள், பாடுங்கள், விளையாடுங்கள்; ஆனால் பாவம் மட்டும் செய்யாதீர்கள்"

# முருங்கன் சலேசிய சபையினரின் கோடை கொண்டாட்ட விழா

## Don Bosco Summer Fest - 2012

முதன்முறையாக பாடசாலை செல்லும் மாணவச் செல்வங்களின் நன்மை கருதி முருங்கன் தொன் போஸ்கோ இல்லத்தின் அதிபர் அருட்பணி. போல் அவர்களின் வழிநடத்துதலின் கீழும் அருட்பணி. மெல்வின் அவர்களின் ஒழுங்கமைவின் கீழும் கோடை கொண்டாட்ட விழா நடாத்தப்பட்டது.

"ஆடுங்கள், பாடுங்கள், விளையாடுங்கள் ஆனால் பாவம் மட்டும் செய்யாதீர்கள்." எனும் புனித ஜோன் போஸ்கோவின் புனித வாக்கை பிரதான கருத்தாகக் கொண்டு ஆவணி 21-30 வரை நடாத்தப்பட்ட இவ்விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். ஆங்கில வகுப்புக்கள், விளையாட்டுக்கள், ஆடல் பாடல்கள், ஆற்றுப்படுத்துதல் உட்பட பல நிகழ்வுகள் இதில் இடம்பெற்றன. பிற்பகல் 2.00 – 6.00 மணி வரை நிகழ்ந்த இவ்விழாவில் 6-11 வரையுள்ள மாணவர்கள் பல இடங்களிலிருந்து வந்து பங்குபற்றினர்.

இவ்விழாவின் நிறைவுநாளில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன. குறிப்பாக மாணவர்கள் ஆங்கிலத்தில் பல நிகழ்வுகளைச் செய்தனர். சிறப்பு விருந்தினராக நானாட்டான் பிரதேச செயலாளர் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டு தெரிவித்தார். இத்தகைய நிகழ்வுகளை தொடந்து முன்னெடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார். மாணவச் செல்வங்களின் பெற்றோர்களும் விழாவில் பங்கேற்று தங்களின் இதயங்கனிந்த நன்றியினை தெரிவித்தனர்.

இவ்விழா மாணவர்களின் அமோக வரவேற்பை பெற்றதோடு அவர்கள் மத்தியில் புதிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்விழாவானது அனுபவமிக்க ஆசிரியர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களைக் கொண்டு நடாத்தப்பட்டது. மேலும் மாணவர்களின் கல்விக்காக ஆங்கிலம், கணிதம் போன்ற வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.









# யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள தூய வேளாங்கண்ணி அன்னைஆலயம்

## ஓர் வரலாற்றுப் பார்வை

அருட்தந்தை யோண் பற்றிக் அ.ம.தி
ஆன்ம குரு, யாழ் போதனா வைத்தியசாலை.

பல்வேறுபட்ட உடல் உள நோய்களினால் வருந்தி அவதிப்படுகின்ற நோயாளிகளுக்கு ஆன்மீக தேவைகளை நிறைவேற்றுவதற்கும், வழிபாட்டிலே பங்கெடுப்பதற்கும், இறை அமைதி பெறுவதற்கும், புனித யூதாததேயுவை துணையாளராகவும் வழிகாட்டியாகவும் ஆறுதல் தருபவராகவும் கொண்டு ஒரு சிறிய ஆலயம் யாழ் போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் 1973ம் ஆண்டு அமைக்கப்பட்டது.

இந்த ஆலயத்திற்கு பொறுப்பாக தேவதாசன் அடிகளார் தன்னுடைய பணியை முதலில் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். யாழ் புனித அடைக்கல அன்னை பங்கில் உதவிப் பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார். இவருடைய காலத்தில் இவ்வைத்தியசாலையில் புனித யூதாதேயுவின் திருவிழா இரண்டு தடவைகள் மாத்திரமே கொண்டாடப்பட்டது. பின்னர் நோயாளிகளை அரவணைத்து பரிந்து பேசுபவளான எமது அன்னையை பாதுகாவலராகக் கொள்வதே சாலப்பொருத்தம் எனப் பலராலும் அறியப்பட்டதனால், அன்னையினுடைய பெயருக்கு இச்சிற்றாலயம் மாற்றப்பட்டு, தூய வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையினுடைய சிற்றாலயமாக தற்போது விளங்குகிறது. இவரைத்தொடர்ந்து அருட்தந்தையர்கள் குணசீலன், கிறிஸ்ரியன் வாஸ், மங்களராஜா போன்றோர் வைத்தியசாலை ஆன்ம குருக்களாக பணியாற்றி நோயாளிகளுடைய ஆன்ம தேவைகளை பூர்த்திசெய்தார்கள். 1979ம் ஆண்டு யூலை மாதம் 1ம் திகதி மறைந்த யாழ் ஆயர் பேரருட்திரு. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களினால் அமல மரித்தியாகிகளிடம் இந்த வைத்தியசாலை ஆன்மீகப்பணி ஒப்படைக்கப்பட்டது. அருட்திரு பிரான்சிஸ் டானியல் அ.ம.தி. அடிகளார் முதல் அமதியாக தன்னுடைய பணியை இங்கு ஆற்றத்தொடங்கினார். இவரது காலத்தில் ஆலயம்



விஸ்தரிக்கப்பட்டது. இவரைத் தொடர்ந்து அருட்தந்தையர்கள் மரிய செபஸ்ரியன் அ.ம.தி, லீனஸ் சொய்சா அ.ம.தி, எட்மண்ட் றெஜினோல்ட் அ.ம.தி, யோகராசா அ.ம.தி, செலஸ்ரின் அ.ம.தி, ஜீவேந்திரா போல் அ.ம.தி, ஸ்ரனிஸ்லொஸ் அ.ம.தி, அன்புராசா அ.ம.தி, ரட்ணராஜா அ.ம.தி, வின்சன்ட் அ.ம.தி, ஜெயபாலன் அ.ம.தி, அந்தோனிமுத்து குருஸ் அ.ம.தி, செபமாலை பெரேரா அ.ம.தி, ஆகியோர் ஆன்ம குருக்களாக பணியாற்றி நோயாளர்களின் ஆன்ம தேவைகளை பூர்த்திசெய்துள்ளனர். அருட்திரு அன்புராசா அ.ம.தி. அவர்களின் காலப்பகுதியில் அன்னையின் ஆலயம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு மெருகூட்டப்பட்டு கட்டப்பட்டது. வைத்தியசாலை வளாகத்திலுள் அமைந்துள்ள அன்னைக்கு புரட்டாதி மாதத்தில் இறுதி ஞாயிறு தினத்தில் [illegible]

## திருவுளப் பணியாளர் சபையின் புதிய குரு பேசாலை உதவிப் பங்குத்தந்தையாக நியமனம்



இறைவனின் திருவுளச் சபையைச் சேர்ந்த அருட்பணி வரப்பிரகாசம் அலன் (IVD) அவர்கள் கடந்த 09.09.2012 அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களால் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்திற்கு உதவிப் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை காலமும் அங்கு உதவிப் பங்குத் தந்தையாகக் கடமையாற்றிய அருட்பணி டெஸ்மன் அஞ்சலோ அவர்கள் மன்னார் பேராலயத்திற்கு உதவிப் பங்குத்தந்தையாக மாற்றலாகிச்சென்றுள்ளார்.

அருட்பணி வ. அலன் (IVD) அவர்கள் கடந்த 22.08.2012 அன்று யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் யாழ் அடைக்கலநாயகி ஆலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் இத்தாவில் புனித பார்பரம்மாள் பங்குத் திருச்சபையைச் சேர்ந்தவர். இவர் திரு. ஆ. வரப்பிரகாசம் மனோகரசீலி தம்பதியினருக்கு நான்காவது பிள்ளையாக 01.01.1987 அன்று பிறந்தார். 1999.08.2002ல் கொழும்புத்துறை IVD சிறிய குருமடத்தில் இணைந்தார்.

2005ம் ஆண்டில் பெரிய குருமடம் இணைந்து தனது மெய்யியல், இறையியல் கல்வியினை கண்டி தேசிய குருமடத்தில் நிறைவுசெய்தார். தனது இறையியல் கல்வியினை நிறைவுசெய்து 20.02.2012 திகதி திருத்தொண்டராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் 22.08.2012 அன்று குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு தனது முதல் நன்றித்திருப்பலியை இத்தாவில் புனித பார்பரம்மாள் ஆலயத்தில் கடந்த 25.08.2012 அன்று ஒப்புக் கொடுத்தார். அதன் பின்னர் கடந்த 09.09.2012 அன்று பேசாலைப் பங்கின் உதவிப் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றுள்ளார்.

தகவல் : பங்குத் திருச்சபை, பேசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

### இயேசு பெருமான் வாழ்ந்து காட்டிய அடிச்சுவட்டில் பயணிக்கிறேன்!

# எந்தத் தடைகள் எங்கிருந்து வந்தாலும்

## என் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வேன்

### – மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை –

மனிதம் வாழ்வதற்காக மனித நேய விழுமியங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதற்காக எம்பெருமான் இயேசு வாழ்ந்து காட்டிய அடிச்சுவட்டில் பயணம் செய்யும் எனது பாதையில் எந்தத் தடைகள் வந்தாலும் இறைவனின் பராமரிப்பை நம்பி என் பணிகளை முன்னெடுத்துச் செல்வேன் என மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தெரிவித்தார். மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசம் ஒழுங்கு செய்த "மன்னார் ஆயருக்கு ஆதரவு அளித்தலும் இறையாசீர் வேண்டுதலும்" என்ற நோக்கத்தைக்கொண்ட விசேட பொதுக்கூட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஆயர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, பல்வேறு அசம்பாவிதங்களாலும் அனர்த்தங்களாலும் வாடும் தமிழ் மக்கள் தமது உடலாலும், உள்ளத்தாலும் நொந்து வாடி நடைப்பிணங்களாக வாழ்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலைகண்டு மனம் வேதனையடைகின்றது. நீதியற்ற நிர்வாக நடைமுறைகள், மீள்குடியேற்றம் எனச் சொல்லி அம்மக்களுக்கான நிவாரணப் பொருள்கள் விநியோக ஊழல்கள், பரம்பரையாக வாழ்ந்த நிலங்களை அபகரிக்கும் நீதியற்ற செயற்றிட்டங்கள் போன்றவை எல்லாமிழந்து உயிரை மட்டும் வைத்துக்கொண்டு வாழும் மக்களுக்கு வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவதாய் அமைந்துள்ளது. இவற்றைக்கண்டு வாளாவிருந்தால் அது எனது சமயம் சார்ந்த விழுமியங்களுக்கும், மனித நேய உணர்வுகளுக்கும் பாதகம் செய்வதாக அமையும். இதனைத் தட்டிக்கேட்கும் தார்மீகக் கடமையைச் செய்ய நான் முற்படும்போது பல்வேறு விமர்சனங்கள், தடைகள் ஏற்படுகின்றன. இவற்றைப் பொருட்படுத்தாது எனது பணிகளில் இறைவன் பராமரிப்பை நம்பி நான் தொடர்ந்து பயணிப்பேன் என்றார்.








"மன்னார் ஆயருக்கு ஆதரவு தெரிவித்தலும் இறையாசி வேண்டுதலும்" என்ற தலைப்பில் மன்னார் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசத்தினால் சிறப்புக் கூட்டமும் நற்கருணை வழிபாடும் இடம்பெற்றன. சமாசத் தலைவர் திரு. எஸ். எஸ். லெம்பேட் அவர்களது தலைமையுரையினைத் தொடர்ந்து அருட்சகோதரி சேவியர் (CIC) அவர்களின் தியான உரை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து செயலாளர் திரு ஏ. அந்தோனிமுத்து அவர்களால் ஆறு உறுதியுரைகள் அடங்கிய மகஜர் வாசித்துக் கையளிக்கப்பட்டது. திரு. எஸ். ஏ. மிராண்டா (ஓய்வு பெற்ற அதிபர்) நன்றியுரை நவின்றார். குடும்பநலப் பணியக தற்காலிக இயக்குனர் அருட்பணி. நெவின்ஸ் யோகராஜ் அடிகளார் நற்கருணை எழுந்தேற்றம் செய்து வைத்தார். ஒருமணி ஆராதனையின்பின் ஆயர் அவர்களின் நற்கருணை ஆசீர்வாதத்துடன் நிகழ்வுகள் யாவும் நிறைவுபெற்றன.

தகவல் : அ. அந்தோனிமுத்து, செயலாளர்.

## காத்தான்குளப் பங்கின் முக்கிய நிகழ்வுகள்



அருட்திரு
எஸ். வசந்தகுமார்

காத்தான்குளம் பங்கு புதிதாக உதயமாகிய பின்னர் முதல் தடவையாக அப்பங்கிலுள்ள முன்பள்ளி சிறார்களின் இவ்வருடத்துக்கான விளையாட்டு நிகழ்வுகள் புனித சூசையப்பர் ஆலயத்தில் நடந்தேறியது. இந்நிகழ்வை பங்குத்தந்தை எஸ். வசந்தகுமார் அடிகளாரும், அருட்சகோதரிகளும், முன்பள்ளி சிறார்களும், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இவர்களுடன் அழைக்கப்பட்ட விருந்தினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கடந்த வைகாசி 1ம் திகதி தொழிலாளர் தினத்தையொட்டி பங்கு ஆலயத்தில் திருப்பலியும், தொடர்ந்து போட்டி நிகழ்வுகளாக வீதியோட்டம், பலூன் உடைத்தல், பிஸ்கட் சாப்பிடுதல், சமநிலை ஓட்டம், சங்கீதக்கதிரை, ஊசி நூல் கோர்த்தல், கிடுகு பின்னுதல், தலையணைச்சண்டை, முட்டி உடைத்தல் ஆகியனவும் சிறப்பு நிகழ்வாக கயிறிழுத்தல் போட்டியும் இடம்பெற்றன. வெற்றியீட்டிய அனைவரும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இன்னும் இப்பங்கு ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு நிறைவு விழா கடந்த 28ம் திகதி கொண்டாடப்பட்டது. குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் திருப்பலியும் திருப்பலியைத் தொடர்ந்து பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. சிறப்பு நிகழ்வாக தாழ்வுபாடு பங்கின் பிளசம் இசைக்கலைஞர்களின் கிறிஸ்தவ கீதங்கள் இசைக்கப்பட்டன.

ஆடி மாதம் 14, 15 ஆகிய தினங்களில் இளைஞர்களுக்கான கருத்தமர்வும், நாடகப்பட்டறையும் அருட்தந்தை நெவின்ஸ் பீரிஸ் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. அத்தோடு 20ம் திகதி மறையாசிரியர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் மறைக்கல்வி இயக்குனர் தலைமையில் நடைபெற்றது.

தொகுப்பு :-
எஸ். சுபோ கெலன்ரினி.

## முருங்கன் பங்கு களிமோட்டையில் சந்தோமையார் வாசாப்பு

முருங்கன் பங்கு களிமோட்டை புனித அன்னை வேளாங்கண்ணி ஆலய சபையினால் புனித சந்தோமையார் வாசாப்பு கடந்த ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு பல பார்வையாளர்கள் மத்தியில் அரங்கேற்றப்பட்டது. இதில் முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் வண. விக்ரர் சோசை அடிகளார் கலந்துகொண்டார்.

பங்குத்தந்தை இல்லாதபோது அருட்தந்தை ரூபன் பெனாண்டோ அடிகளார் இந்நிகழ்வுக்கு தலைமை தாங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கலந்துகொள்ள முயாத நிலையிலும்கூட மன்னா பதிப்பாசிரியரும் கலையருவி இயக்குனருமான அருட்பணி தமிழ் நேசன் அடிகளார் எமது கிராமத்திற்கு வருகை தந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து எமக்கு தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**தே. அனஸ்ரீன் டயஸ் (வதனன்), களிமோட்டை, முருங்கன்.**

## முருங்கன் நாட்டுக்கூத்து நிகழ்வில் ....

16ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக இடம்பெற்ற கலைஞர் கௌரவிப்பு நிகழ்வை அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமை தாங்கி நெறிப்படுத்தினார். இந்நிகழ்வின்போது தேசிய மட்டக் கலைஞர்கள் மூவர் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கொழும்பு கலாசுரபி கவின் கலைகள் பயிலகத்தின் இயக்குனர் திரு. அம்புரோஸ் பீற்றர் அவர்கள் 'இறை இசைச் செல்வர்' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். யாழ் திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குனர் திரு. ஜோண்சன் ராஜ்குமார் அவர்கள் 'நாடக வித்தகர்' என்ற சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். மட்டக்களப்பு அரங்க ஆய்வுகூடத்தின் ஸ்தாபகர் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் 'கூத்தியல் காவலர்' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இக்கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி விருதுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்.

இவ்வரங்க நிகழ்வின்போது மாவட்டமட்டக் கலைஞர்கள் மூவர் கௌரவிக்கப்பட்டனர். மன்/ முருங்கன் மகா வித்தியாலய அதிபர் திரு. ப. சந்தியோகு (மனோகரன்) அவர்களும், இந்நாடகத்தை நெறியாள்கை செய்த நானாட்டான் ஆவணத்தைச் சேர்ந்த கலாபூசணம் செ. மாசில்லாமணி (பிலேந்திரன்) அவர்களும், முருங்கன் கலைஞர் குழந்தை அவர்களின் மகன் அருட்திரு. செ. அன்புராசா (அமதி) அவர்களும் மன்னார் ஆயரினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

### மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவையின் ஏற்பாட்டில்

# மாபெரும் போட்டி நிகழ்வு

பொதுநிலையினரின் பொற்காலம் பற்றிய முன்மொழிவினை எடுத்தியம்பிய 2ம் வத்திக்கான் சங்கம் உதயமாகிய 50 ஆண்டுகள் நிறைவினை நினைவுகூரவும், மறைக்கல்வி ஆண்டினை சிறப்பிக்கவும் நடாத்தப்படுகிற போட்டி நிகழ்வுகள்:

**01) கட்டுரைப்போட்டி:-**

| பங்குபெறுவோர் | விடயத்தலைப்பு | சொற்கள்/ நேரம் |
| --- | --- | --- |
| அ) மாணவர்கள் | இன்றைய மாணவர்கள் நாளைய திருச்சபையின் வழிகாட்டிகள். | 400 - 450 |
| ஆ) இளைஞர்கள் | சாட்சிய வாழ்வை முன்னெடுக்க இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள். | 450 - 500 |
| இ) வளர்ந்தோர் | திருச்சபை மட்டில் பொதுநிலைப்பணியாளர், திருநிலைப் பணியாளர்களுக்கான அழைப்பும் சவால்களும். | 500 - 550 |

**02) பேச்சுப் போட்டி:-**

| | | |
| --- | --- | --- |
| அ) மாணவர்கள் | கிறிஸ்தவ வாழ்வை முன்னெடுக்க வழிபாடுகள் வழி அமைக்கின்றன. | 4 - 5 நிமிடம் |
| ஆ) ஏனையோர் | 2ம் வத்திகான் சங்கத்தின் அழைப்பின் பின்னணியில் பொதுநிலையினரின் பணியும் வாழ்வும். | 6 - 7 நிமிடம் |

**பொதுவான அறிவுறுத்தல்கள் :**

1. போட்டியாளர்கள் பங்குத்தந்தையின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் போட்டியில் பங்குகொள்ள அனுமதிக்கப்படுவர்.
2. மறைக்கோட்ட மட்டத்தில் தெரிவாகும் முதல் 03 இடங்களைப் பெற்றோர் மாவட்ட மட்ட போட்டிக்கு அனுமதிக்கப்படுவர்.
3. பெறுமதியான பரிசில்கள் கோட்ட மட்டம் மற்றும் மாவட்ட மட்டத்திற்கென தனித்தனியே வழங்கப்படும்.
4. கட்டுரைகள் யாவும் பங்குத்தந்தையின் சிபார்சுடன் 20/09/2012 ம் திகதிக்கு முன்பதாக இயக்குனர், பொது நிலையினர் குடும்ப நலப்பணி மையம், தாழ்வுபாடு வீதி, மன்னார் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.
5. கோட்ட மட்ட பேச்சுப்போட்டி, செப்ரம்பர் 3ம் வாரத்தில் நடைபெறும். இது பற்றிய விபரங்கள் பங்குத் தந்தையூடாக பின்னர் அறியத்தரப்படும். பங்குபெற விரும்புவோர் விபரங்கள் யாவற்றையும் பங்குத்தந்தையூடாக 15/09/2012 ம் திகதிக்கு பிந்தாமல் மேற்குறித்த முகவரிக்கு அறியத்தரவும்.
6. மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி இல: 023 2223138 நன்றி.

*இயக்குனர், பொதுநிலையினர் பேரவை, குடும்ப நலப் பொதுநிலையினர் பணி மையம், தாழ்வுபாடு வீதி, மன்னார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்விப் பொழிவு

மறைக்கல்வி ஆண்டு சிறப்புக் கட்டுரை

## உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகின்றேன் ......

செ.சோபிக்கா பிறின்சி
இல 57,பெரிய உப்போடை
மட்டக்களப்பு.

இறைவன் என்னை தனது திட்டங்களை நிறைவேற்ற அழைக்கிறார். ஆம், இது ஓர் அழைப்பு. அழைப்பு என்பது தன்னிலே புனிதமானது. அழைப்பு வெறும் பிழைப்பு என விமர்சிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

தொடக்கநூல் 12:1இல் முதுபெரும் தந்தை, விசுவாசத்தின் தந்தை என அழைக்கப்பட்ட ஆபிரகாம் இறை அழைப்பைப் பெற்றார். "நீ உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும். உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்கு காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன், உனக்கு ஆசி வழங்குவேன், உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன். நீ ஆசியாக விளங்குவாய். உனக்கு ஆசி கூறுவோருக்கு நான் ஆசி வழங்குவேன். உன்னை சபிப்போரை நானும் சபிப்பேன். உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்" என இறைவன் கூறினார். அஞ்ஞானியான ஆபிரகாமை இறைவன் தெரிந்தெடுத்து அழைத்து வாக்குறுதிகள் கொடுக்கிறார். இவற்றிற்கு ஆபிரகாம் பணிந்தார்; பணிவிடை புரிந்தார்.

விடுதலைப்பயணம் 3:10இல் ஒரேபு மலையில் எரியும் முட்புதரில் இறைவன் மோசேக்கு தோன்றி "நீ வா, இஸ்ரேயல் மக்களை எகிப்திநின்று புறப்படும் பொருட்டு நான் உன்னை பார்வோனிடம் அனுப்புவேன்" என்று கூறுகின்றார். இருவரும் இறைவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து பணிபுரிந்தனர்.

எசேயா 6:1-10இல் இறைவன் "யாரை நான் அனுப்புவேன்?" நமது பணிக்காக யார் போவார்? என கவலையுற்றபோது, எசாயா எவ்வித தயக்கமுமின்றி முழு விருப்பத்துடன், "இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்" எனக் கூறி அவ்வழைத்தலை ஏற்றுக்கொள்கிறார்.

எரேமியா 1:1-7இல் 'செல்' என்று எரேமியா பணிக்கப்படுகிறார். எளியோரையும் அனாதைகளையும் நசுக்கி வதைத்தலும், விபசாரமும் அன்றாட நடைமுறையாகிவிட்ட ஒரு குழப்பமான அரசியல், சமய, சமூகப் பின்னணியில்தான் எரேமியா இறைவாக்குரைக்கும் பணிக்கு அழைக்கப்பட்டார். இறைவனின் அழைப்பானது எரேமியாவிற்கு கி. மு. 627 – 626ல் கிடைத்தது.

எசேக்கியேல் 2: 3-4இல் "மானிடா! எனக்கெதிராகக் கிளர்ச்சி செய்த இனத்தவராகிய இஸ்ராயேல் மக்களிடையே நான் உன்னை அனுப்புவேன். வன் கண்ணும், கடின இதயமும் கொண்ட அம்மக்களிடம் நான் உன்னை அனுப்புவேன். நீ அவர்களிடம் போய் தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே, என்று சொல்... நீ அவர்களுக்கு அஞ்சாதே" என்றார். பின்பு இறைவனின் செய்தி எழுதப்பட்டிருந்த சுருளேட்டை உண்ணும்படி கொடுத்தார். இச்செயல் எசேக்கியேல் அப்பணியை ஏற்றுக்கொள்வதைக் குறிக்கும் ஒரு அடையாளச் செயலாகவிருக்கிறது. எசேக்கியேலை இறைவன் தைரியப்படுத்தி பணிபுரிய அனுப்பினார்.

இவ்வாறு இறைவனின் அன்புப்பணி தொடர இறைவாக்கினர்கள் அழைக்கப்பட்டார்கள். இறைவன் இறைவாக்கினர்களை ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு, ஒரு குறிப்பிட்ட மக்களிடம், ஒரு குறிப்பிட்ட செய்தியோடு அனுப்பிவைக்கிறார். சில சந்தர்பங்களில் இறைவாக்கினருடைய விருப்பத்திற்கு மாறாக இறைவன் அவர்களை அனுப்பிவைப்பதையும் காண்கிறோம்.

"என்னைப் பின்பற்றி வா" (லூக் 5:27) என்ற திருவசனத்தில் நம் ஒவ்வொருவருக்கும் இப்புனித அழைப்பை இறைவன் கொடுத்து நிற்கிறார். திருமுழுக்கின்மூலம் இந்த அழைப்பு நமக்குத் தரப்படுகின்றது. இறைவாக்கினர்கள் அழைக்கப்பட்டபோது அவர்களில் சிலர் "எனக்கு



பேசத்தெரியாது, நான் திக்குவாயன்" என்றெல்லாம் பல சாக்குப்போக்குகள் சொன்னார்கள். இறைவனின் புனித அழைப்பிற்கு இன்று நாம் சொல்லும் சாக்குப்போக்குகள் எவை? "இறைவனின் பார்வையில் எவ்வாறு செய்தோம் என்பதை விட எவ்வளவு அன்பாகச் செய்தோம் என்பதே முக்கியமாகும்." என்கிறார் அன்னை திரேசா. இறைவனின் அழைப்பிற்கு செவிமடுத்து அவற்றிற்கு செயல்வடிவம் கொடுக்க முற்படும்போது நாம் பல துன்பங்களை ஏற்கத்தான் வேண்டும். "என்னைப் பின்பற்ற விரும்புகிறவன் தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" என்கிறார் யேசு.

பொதுநிலையினரின் அழைப்பும் அருட்பணியும் என்ற திருத்தந்தையின் சுற்றுமடலில் பொதுநிலையினரின் அழைப்புப் பற்றி தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது. லூக் 14: 25-33 இல் "என்னிடம் வருபவன் தன் தாய், தந்தை, மனைவி, சகோதர சகோதரிகள் தம் உயிரையும் மேலாக விரும்பினால் என் சீடனாய் இருக்க முடியாது. அனைத்தையும் துறந்து என்னைப் பின்பற்றட்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

இந்த உலகின் கவர்ச்சியில் ஏமாந்தநிலையில் இயேசுவை நாம் பின்பற்ற முடியாது. பற்றற்ற சீடத்துவம் இந்த புனித அழைப்பிற்கு இன்றியமையாதது. தாமரை தண்ணீரில் வாழ்ந்தாலும் தாமரை இலையில் தண்ணீர் ஒட்டுவதில்லை. உலகம் எம்மை ஆழாமல் நாம் உலகை ஆழ வேண்டும் என்ற உண்மையை இது வெளிக்காட்டுகின்றது.

எமது வாழ்வை செபம் நிறைந்த வாழ்வாக மாற்றி இறை பணிபுரிய எம்மை நாம் தயார் செய்ய வேண்டும். அழைப்பு வாழ்க்கை அப்படி, இப்படி என்று இருக்க முடியாது. இப்படித்தான் இருக்க முடியும். பரித்தியாகங்கள், அர்ப்பணிப்புகள், பொறுப்புணர்வுகள், பிரமாணிக்கம் நிறைந்தவையாக அமைய வேண்டும். அழைப்பு வாழ்க்கை புனிதமானது. உண்மையே உன் விலை என்ன? என்று உண்மை விலை பேசப்படும் இக்காலகட்டத்தில் அழைப்பு வாழ்க்கை கடினமானது. விதை மடிந்தால்தான் நல்ல மரமாக முடியும். பாறை உடைந்தால்தான் அழகிய சிற்பங்கள் உருவாக்க முடியும். நாம் இறைவனின் பணிக்காக நம்மை ஒப்படைக்கும்போது நாம் எதையும் இழக்கத் தயாராக இருக்க வேண்டும். "பணத்தை இழந்தான் சக்கேயு, பதவியை இழந்தான் மத்தேயு, பட்டத்தை இழந்தார் பவுல் திருத்தூதர்". நாம் எதை இழக்கப்போகின்றோம்? நாம் இறைவனுக்காக எம்மை அர்பணிக்கும்போது நாம் எம்மையே இழக்கத் தயாராக இருக்க வேண்டும். எதனையும் இழந்தால்தான் பெற முடியும். ஆனால் எமக்கு இறையன்பு முக்கியமாகும். "மண் தன்னை இழந்தால் நல்ல பாத்திரம், பாறை தன்னை இழந்தால் நல்ல சிற்பம், சிற்பி தன்னை இழந்தால் நல்ல முத்து" இறை அழைப்பிற்கு செவிமெடுத்து நம்மை இழந்தால் நமக்கு வருவது இறையாசீர்.

எனவே இவ் இறையாசீரைப் பெற இறைவனின் குரலுக்கு செவிசாய்க வேண்டும். இறைவனின் குரல் வெறுமனே ஒரு சாதாரண குரல் அல்ல, மாறாக அது ஓர் இறை அழைப்பிற்கான குரல். எமது அன்றாட வாழ்வில் நமக்கு முன்செல்லும் பாதைகளோ ஏராளம். நன்மை எது? தீமை எது? என்பது நமது போராட்டம். இவற்றில் தீமையும் பொய்யும் நம்மை மேற்கொள்ளும் அபாயம் உள்ளது.

"தந்தையாய் தாயாய் தன்னைத் தந்தான். அனைத்துமாய் என் வாழ்வில் உள் வந்தான். தகுதியைப் பாராமல் என்னை அழைத்தான். தன்னரசின் பணிக்கென என்னைக் குறித்தான்" என்கிறார் ஓர் கவிஞர். இறை பணிசெய்ய நாம் எம்மை அர்பணிக்கும்போது நாம் அவரது அன்பையும் அவரது மகிமையையும், மனித மாண்பையும் உணர முடியும். "இயேசுவே என் வாழ்வின் செல்வம் என்றும் அவரே என் வாழ்வின் இன்பம்" என்றும் எமது மனதிற்கொண்டு வாழ வேண்டும்.

முழு மனித வாழ்வே இறைவனின் நோக்கம். அதனை நிறைவுசெய்ய வேண்டும் என்பதே நமது ஏக்கமாக இருக்க வேண்டும். இதற்காக நாம் மனித உணர்வில் வாழ வேண்டும். எம்மை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். எமது தாயாகவும் தந்தையாகவும் இறைவனையே மனதிற் கொண்டு எம்மை அர்ப்பணிக்க வேண்டும். ஆன்ம காரியங்களில் அதிகமாக ஈடுபட வேண்டும். இவ்வாறு ஈடுபடும்போது தானாகவே இறையழைப்பு கிடைக்கும்.

ஏழை வாழ்வு மலர வேண்டும். ஏற்றத்தாழ்வு மறைய வேண்டும். இயேசுவின் கனவு பலிக்க வேண்டும். அவரது செய்தியை நாம் எங்கும் எவ்விடத்திலும் எந்நேரத்திலும் முழங்க வேண்டும். இதற்கு நாம் தயாரா?

உலகம் போகும் வழியிலே நாம் நடக்காமல் எதிர் நீச்சலிட்டு இறைவன் காட்டும் நல்ல பாதையில் நடக்க வேண்டும். நாம் யேசுவை உள்ளத்தில் கொண்டு வாழும்பொழுது இறையாசீரும் இறையன்பும் இறையருளும் நமக்கு முழுமையாகக் கிடைக்கும்.

எனவே இறை அழைப்பை ஏற்போம். கைமாறு கருதாது பணி செய்வோம். பிறர் துன்பங்களை பகிர்ந்துகொள்வோம். துன்புறுவோரின் துயர் துடைப்போம். வசை மொழிகளைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வோம். துன்பத்தில் ஆண்டவரில் இன்பம் காண்போம். துவண்டுபோகாது தொடர்ந்துவரும் துன்பச்சிலுவைகளைத் துணிவுடன் சுமப்போம். சுமப்பதில் சுகம் பெறுவோம். அன்பர் பணிக்கு அனைவரும் தங்களை ஆளாக்கிவிட்டால் இன்ப சுகம் தானாகவே வரும்!

"இறைவா! இதோ உம் திருவுளம் நிறைவேற்ற வருகின்றேன்"

## உங்கள் கவலைகள் எல்லாம் அவர்மீது வைத்து விடுங்கள்

பா. சுலியானம்மா. இத்திக்கண்டல். அடம்பன்.

மனித வாழ்க்கையில் பலவித பிரச்சினைகளோடு, கவலைகளோடு வாழ்கின்றவர்களைப் பார்த்து "உங்கள் கவலைகளெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்" என்று விவிலியம் கூறுகின்றது. நம்முடைய வாழ்விலுள்ள கவலைகளை ஆண்டவர்மேல் வைத்து எவ்வாறு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்? இந்த இரகசியங்களை விவிலியத்தின் அடிப்படையில் தியானிப்போம்.



யோவான் நற்செய்தி 2:1-10 இறைவார்த்தையில் இயேசு கானாவூர் திருமண வீட்டின் குறைகளை நீக்கி முதல் புதுமையைச் செய்தார். திருப்பாடல் 104:15இன்படி திராட்சை இரசம் மகிழ்ச்சியைக் குறிக்கின்றது. இந்நிகழ்ச்சியை உற்றுநோக்கி இந்நிகழ்ச்சியின் அடிப்படையில் நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்போது நாமும் கானாவூர் திருமண வீட்டினர் அனுபவித்த மகிழ்ச்சியை அனுபவிப்போம். இந்த வீட்டார் யேசுவை அழைத்தார்கள். அவரை ஏற்றுக்கொண்டார்கள். ஆம் பிரியமானவர்களே, கானாவூர் திருமண வீட்டிற்கு இயேசுவை அழைத்து அவரை ஏற்றுக்கொண்டதால் அத்திருமண வீட்டில் குறைவு நீங்கியது.

இதேபோல் விவிலியத்தில் சக்கேயு என்பவரின் வாழ்க்கையைப் பார்க்கின்றோம். பாவத்தில் வாழ்ந்த சக்கேயு யேசுவை விரும்பி மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டதால் அவ்வீட்டிற்கு மீட்பு உண்டானது என்று லூக். 19:1-10ல் வாசிக்கின்றோம். யேசுவை நாம் ஏற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும்? "யேசு ஆண்டவர் என வாயார அறிக்கையிட்டு இறந்த அவரை கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்புப் பெறுவீர்கள் (உரோ 16:9) இந்த நம்பிக்கையின் யேசுவை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு அவரை அழைக்கும்போது அவர் நம்மிடம் வந்து மகிழ்ச்சியால் நம்மை நிரப்புவார்.


உங்கள் வாழ்விலும் பிள்ளைகளின் படிப்பு திருமணம் குறித்த கவலையா? கடன் பிரச்சினைகள் வியாதிகள் குறித்த கவலையா? கலங்க வேண்டாம். "என் நெருக்கடி வேளையில் நான் ஆண்டவரிடம் மன்றாடினேன். என் கடவுளை நோக்கிக் கதறினேன். தமது கோவிலினின்று அவர் என் குரலைக் கேட்டார். என் கதறல் அவரது செவிகளுக்கு எட்டியது" (திருபா 18:6) என்ற இறைவார்த்தையின்படி இறைவனிடம் நம் குறைகளை முறையிட்டு ஆசீர்வாதங்களைப் பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# கருவில் இருக்கும் குழந்தைக்கும் வாழும் உரிமை உண்டு

## மாத்தறை மாதா திருத்தலத்தில் கண்டி ஆயர் வியானி ஆண்டகை



"இன்று கருக்கலைப்பானது நாட்டில் பரவலாக நடைபெற்று வருகின்றது. இது நரகத்திற்கு இட்டுச்செல்ல முழக்கமிடுகின்ற கனமான பாவமாகும். கருக்கலைப்பை அனுமதிக்கக்கேட்டு குரல்கள் அவ்வப்போது எழும்புகின்றன. இது மிகவும் பாரதூரமான ஒரு குற்றமாகும். உயிர் வாழ்கின்ற பிள்ளையைப்போலவே கருவில் இருக்கும் குழந்தைக்கும் வாழும் உரிமை உண்டு. இந்த உரிமையை பெற்றுத் தருதல் வேண்டும் என மாத்தறை மாதா திருத்தலத்தின் வருடாந்த திருவிழாவின்போது கண்டி ஆயர் மேதகு ஜோசப் வியானி ஆண்டகை கூறினார்.

மேலும் அங்கு அவர் கூறியதாவது, இன்று நாம் வாழும் சமுதாயத்தில் பொறுமையின்மை, கோபம், பொறாமை போன்றவை தலைதூக்கியுள்ளன. அன்பு, பாசம், கருணை அற்றுப்போய் இன்றைய இளைய சமுதாயத்தை அழிப்பதற்காக வயது முதிர்ந்தவர்கள் குறிபார்த்து வருகின்றனர் என்பதை நாம் ஊடகங்களினூடாக அறிகின்றோம். சமுதாயத்தில் நீதியும், ஒழுக்கமும் அழிந்துபோய் சுயநலம் ஆட்சி செய்கின்றது என்றார். திருவிழா திருப்பலிக்கு அன்னையைத் தேடிவந்த பக்தர்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது இவ்விழாவில் பக்தியுடன் பங்கேற்றனர்.

## கொழும்பு உயர் மறைமாவட்ட நற்கருணை மாநாடு

# சில இறையியலாளர் நினைப்பது போன்று நற்கருணையானது ஒரு அடையாளமல்ல, அது இறைமகன் இயேசுவே!

### மேதகு மெல்கம் கருதினால் ரஞ்சித் ஆண்டகை

சில இறையியலாளர் நினைப்பது போன்று நற்கருணையானது ஒரு அடையாளமல்ல, அது இறைமகன் இயேசுவே. அவரே நம்முன் - நம்முள் வருகிறார். அவரை நாம் ஒரு அரசனைப்போல் வரவேற்போம். ஆதிகாலத்திலிருந்தே திருச்சபையானது நற்கருணைக்கான விசுவாசத்தை அறிக்கையிட்டு வருகிறது. 'இது எனது சரீரம்' என்று குருவானவர் கூறும்போது அதுவே இறைவன் வாழும் உடலாக மாறுகிறது. இதை நம்புகிறவன் இறப்பினும் உயிர் வாழ்வான் என்று கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 31.08.2012 – 02.09.2012 வரையான 3 நாட்களில் மருதானை புனித சூசையப்பர் கல்லூரியில் நற்கருணை மாநாடு நடைபெற்றபோது அந்நாட்களில் இரண்டு நாட்கள் நற்கருணை ஆராதனையும் இறுதி நாளில் நற்கருணைப் பவனியும் நடைபெற்றது. முதல் 2 நாட்களிலும் நற்கருணை எழுந்தேற்றம், நற்கருணை ஆராதனையும் மறைக்கோட்டங்களால் பிரித்து நடாத்தப்பட்டது. 3ம் நாள் இறுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு, திருப்பலியின்பின் நற்கருணைப் பவனியும் ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது. இத்திருப்பலியில் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மறையுரை ஆற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் அங்கு கூறியதாவது, இம்மறைமாவட்டம் எனக்குரியதல்ல, இறைவனுக்கே உரியது. ஆகவே நாம் யாவரும் ஒருங்கிணைந்து அவரை மகிமைப்படுத்தி, அன்பு செய்வோம். நாம் அவரது ஊழியர்கள். நீங்கள் உங்கள் உள்ளங்களைத் திறந்து ஒரு அரசனை வரவேற்பதுபோல், நீங்கள் அவரை வரவேற்க வேண்டுமென அங்கு திரண்டிருந்த மாணவர், ஆண், பெண், பொதுநிலையினர், குருக்கள் முன்னிலையில் உரையாற்றினார். அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், பொது மக்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். அருட்பணி. ஸ்டேன்லி திலகரட்ண கலையரங்கில் மூன்றாவது நாளுக்கான தேவ அழைத்தல் ஊழியம் பற்றிய கண்காட்சி 70 சிறு கூடாரங்களில் அமைக்கப்பட்டிருந்தது. இறைவனது வார்த்தைகளடங்கிய சுவடிகள், பிரசுரங்கள் இன்னும் மக்களைக் கவரக்கூடிய பிரசுரங்கள் யாவும் விநியோகிக்கப்பட்டன. 31ந் திகதி வெள்ளிக்கிழமை தேவ அழைத்தலுக்கான கண்காட்சி துணை ஆயர்களான மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை, மேதகு மெக்ஷ்வல் சில்வா ஆண்டகை ஆகியோரினால் கோலாகலமாக திறந்துவைக்கப்பட்டது. 700 அங்கத்தினர்களைக் கொண்ட பாடகர் குழாமானது இறைவனைத் துதித்து பாடியது. இறுதியாக நற்கருணை ஆசீர்வாதத்தோடு நற்கருணை பேரணி நிறைவுபெற்றது.



ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குவின் பிரதிநிதிகள் யாழ் ஆயரைச் சந்தித்தபோது

## யாழ் ஆயர் இல்லத்தில் யப்பானிய சிறப்புத் தூதுவர் அகாசி

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த யப்பானிய சிறப்புத்தூதுவர் யசூசி அகாசி யாழ் ஆயர் இல்லத்தில் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவினரை 24.08.2012 அன்று சந்தித்து சமகால நிலைப்பாடு குறித்து கலந்துரையாடினார்.

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் நிறைவடைந்த நிலையிலும் தமிழ் மக்களது அடிப்படை வாழ்வியலில் எள்ளளவும் முன்னேற்றம் ஏற்படவில்லை. மாறாக இராணுவப் பிரசன்னம் அதிகரித்து வருகின்றது. இதனால் அரசாங்கம் கூறும் சமாதானத்தின் பயனாக மக்கள் எதனையும் அனுபவிக்க முடியவில்லை என இக்குழுவினர் தூதுவரிடம் எடுத்துக்கூறினர்.



யாழ் ஆயருடன் யப்பானியத் தூதுவர்

## குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக் காணும் குருக்கள்

தற்போது கண்டி மறைமாவட்டத்தில் பணிசெய்துகொண்டிருக்கும் வெவ்வேறு துறவற சபைகளைச் சார்ந்த இரண்டு குருக்கள் இவ்வருடம் தமது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளி விழாக் காண்கின்றனர்.

கட்டுகஸ்தோட்ட பங்குத்தந்தை அருட்திரு. டொம் மைக்கல் சந்தனம் OSB மற்றும் மாத்தளை பங்குத்தந்தை அருட்திரு. டிலான் பெர்னாண்டோ SSS ஆகிய குருக்களே வெள்ளிவிழாக் காணும் குருக்களாவர்.

## மாத்தறை மாதா திருவிழாவில் ஜனாதிபதி

மாத்தறை மாதா திருத்தலத் திருவிழாவின் மாலை ஆராதனையின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அவ்வேளையில் அவர் அங்கு கூடியிருந்த விசுவாசிகளுக்கு வணக்கம் செலுத்தினார்.

## நியூசிலாந்து வின்சன் டீ போல் சபைத் தலைவர் இலங்கைக்கு வருகை!

### மன்னார் தலைவரும் சந்தித்தார்



நியுசிலாந்து தலைவருடன் மன்னார் மத்திய சபைத் தலைவி திருமதி ஆபிரகாம் சோசை

கடந்த 25.08.2012 கொழும்பு ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இலங்கை புனித வின்சன் டீ போல் தேசிய சபைக் கூட்டத்திற்கு நியூசிலாந்து புனித வின்சன் டீ போல் தேசிய சபைத் தலைவரான திரு. பீற்றம் கொட்னி ( Mr. Peter Courtney J.P) அவர்கள் வருகை தந்திருந்தார். இலங்கை தேசிய சபை உறுப்பினர்கள் அனைவரும் அவரை மகிழ்வுடன் வரவேற்றனர். தலைவர் சகோதரி லியோனி பெர்னாண்டோ வரவேற்புரை நிகழ்த்தினார்.

மறை மாவட்டங்களின் மத்திய சபை, பிராந்திய சபைகளின் தலைவர்கள் முறையே தங்களை அறிமுகம் செய்துகொண்டார்கள். மன்னார் புனித வின்சன்டீபோல் சபைத் தலைவர் தன்னை அறிமுகம் செய்கையில் மறைமாவட்டத்தில் நடைபெற்ற, நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பணிகளை எடுத்துக்கூறினார். விசேடமாக போரினால் பாதிப்புற்ற மக்களுக்கு தங்களுடைய பணிகள் மேற்கொள்ளப்படுவதை குறிப்பிட்டார். கொழும்பு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மறைமாவட்டங்களில் இருந்து 17 உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர்.

தேசிய சபையின் ஆன்மீக இயக்குனரான அருட்தந்தை லியோ பெரேரா தன்னுடைய வழிநடத்தலில் இயங்கி வருகின்ற புனித வின்சன்டீபோல் தேசிய சபை இன மொழி வேறுபாடின்றி ஒற்றுமையாக இயங்கி வருகின்றது எனக்குறிப்பிட்டார்.

நியூலாந்து புனித வின்சன்டீபோல் தேசியசபைத் தலைவர் உரையாற்றுகையில் கூறியதாவது, "இலங்கையின் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகள், செயற்பாடுகளை வருகை தந்திருக்கும் தலைவர்கள் மூலமாக அறிந்து கொண்டேன். கிறிஸ்துவின் அன்பைப் பிரதிபலிக்கும் நம் சபையின் உறுப்பினர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்கின்றார்கள். பரந்து விரிந்த நம் சேவையானது தியாகம் நிறைந்த ஒரு பணி வாழ்வு. இத்தகைய வாழ்வு நமக்கு அருளப்பட்டமைக்கு எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறவேண்டும். வின்சன்டீபோல் சபை சுதந்திரமாக, அடுத்தவர் தலையீடின்றி செயல்பட வேண்டும். நீதியோடு தொடர்புடைய நமது பணிகள் உண்மையோடும் நேர்மையோடும் செயல்படுத்த வேண்டும். ஏழைகளுக்கான நிதிகள் தவறான வழிகளில் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடாது" எனக் கூறினார். தனது இலங்கை விஜயத்தின்போது பல அனுபவங்களைப் தான் பெற்றுக்கொள்வதாகவும், புனித வின்சன்டிபோல் சபைப் பந்திகள் வெளிநாடுகளிலுள்ள சபைகளோடு இணைக்கப்பட்டு தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும், தனது 75 வயதிலும் கடல் கடந்த பயணங்களை மேற்கொண்டு கிறிஸ்துவின் பணியை ஆற்ற கிடைத்த வாய்ப்பிற்காக இறைவனுக்கு நன்றி கூறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கூட்ட இறுதியில் அமரத்துவமடைந்த விடத்தல்தீவு புனித வின்சன்டீபோல் சபைத் தலைவரான சகோதரர் பி. இராயப்பு அவர்களின் ஆன்ம சாந்திக்காக இறை வேண்டல் செய்யப்பட்டது.

தகவல் : திருமதி எ. ஆபிரகாம் சோசை,
புனித வின்சன்டீபோல், மத்திய சபைத் தலைவர்.

## திருச்சி கலைககாவேரியில் நடைபெற இருந்த சிங்கள மாணவரின் கலைநிகழ்வு ரத்து

### நம் தமிழர் கட்சியின் எதிர்ப்பே காரணம்

கலை நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக தமிழ்நாடு திருச்சிக்கு அண்மையில் சென்றிருந்த சிங்கள மாணவர்களைத் தடுத்து நிறுத்தி முற்றுகையிட முயன்ற நம் தழிழர் கட்சியினரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இலங்கையிலிருந்து தழிழகத்துக்கு வருபவர்களை எதிர்த்து தொடர்ச்சியாக தமிழர் அமைப்புக்கள் போராட்டங்களில் ஈடுபட்ட வண்ணம் உள்ளனர்.

இந்த நிலையில் சிங்களக் கலாசாரத்தைப் பரப்புவதாக கூறிக்கொண்டு ஓர் அணி கொழும்பிலிருந்து திருச்சிக்கு வந்துள்ளது. கொழும்பைச் சேர்ந்த இந்தக் குழுவில் மாணவ, மாணவியர், ஆசிரியர்கள் உட்பட 63 பேர் இருந்தனர். திருச்சி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியில் இவர்கள் கலை நிகழ்ச்சியில் பங்கேற்பதாக இருந்தது. இது குறித்த தகவல் கிடைத்ததும் நம் தமிழர் கட்சியினர் திரண்டு வந்தனர்.

கல்லூரி வாசலில் கூடிய அவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அப்போது சிங்களக் குழுவினரைக் கண்டித்தும், மத்திய அரசைக் கண்டித்தும் நம் தமிழர் கட்சியினர் கோஷமிட்டனர். பின்னர் அவர்களைப் பொலிஸார் கைதுசெய்து அப்புறப்படுத்தினர். இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து சிங்களக் குழுவினரின் கலைநிகழ்ச்சி ரத்து செய்யப்படுவதாக கல்லூரி நிர்வாகம் அறிவித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைபரப்பு ஞாயிறு தினச் செய்தி 2012
# "உண்மையின் வார்த்தையினை ஒளிரச்செய்ய அழைக்கப்பட்டுள்ளோம்"

## திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களின் அப்போஸ்தலிக்க திருமடல்

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

இவ்வாண்டின் மறைபரப்பு ஞாயிறு கொண்டாட்டமானது மிகச் சிறப்பான அர்த்தத்தைக் கொண்டுள்ளது, இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத் தொடக்கத்தின் 50ம் ஆண்டு நிறைவும், விசுவாச ஆண்டின் தொடக்கமும் அனைத்து நாடுகளுக்கும் நற்செய்தி அறிவிப்பு எனப்படும் mission ad gents வழியாக நற்செய்தி உலகின் கடையெல்லை வரைக்கும் மிக அதிகமான துணிவோடும் ஆர்வத்தோடும் பரப்பப்பட வேண்டும் என்ற திருச்சபையின் பேரவாவிற்கு பங்களிப்பு செய்யும் நற்செய்தி பரப்புதல் பற்றிய கருத்தானது ஆயர்களின் பேராயத்தில் மீளவும் வலியுறுத்தப்பட்டமையும் இச்சிறப்பை எடுத்துகாட்டுகின்றன.

இரண்டாம் வத்திகான் திருச்சங்கத்தில் கலந்துகொள்ள மிகப் பெருமளவிலான திருச்சங்கத் தலைவர்களாக ஆசியா, ஆபிரிக்கா, இலத்தின் அமெரிக்கா, பசுபிக் பிராந்தியம் என்று உலகின் அனைத்து எல்லைகளினின்றும் கத்தோலிக்க ஆயர்கள் வருகைதர அவர்கள் முதன் முதலாக வரவேற்கப்பட்டமை உண்மையிலேயே திருச்சபையின் உலகளாவிய தன்மையை ஒளிரச் செய்த ஓர் அடையாளமாகும். கிறிஸ்தவர்களல்லாத மக்கள் மத்தியில் சிதறுண்டிருக்கும் மறைபரப்பு பணி ஆயர்களும், சுதேச ஆயர்களும், சமூகங்களின் மேய்ப்பர்களும், திருச்சங்கத்தில் கலந்துகொண்டமை, திருச்சபை எல்லாக் கண்டங்களிலும் பிரசன்னமாயிருக்கின்ற உருவை எடுத்துக்காட்டியதோடு அப்போது " மூன்றாம் உலகம்" என வர்ணிக்கப்பட்ட உலகின் சிக்கல்கள்மிகு யதார்த்தத்தை விளக்கிக் கூறலாயிற்று. இளம் அல்லது வளர்ந்துவரும் தளத்திருச்சபையின் ஆயர்களாகவும் அனுபவம் கொண்டவர்களாயும் இறையாட்சியைப் பரப்பிட வேண்டும் என்ற வேட்கை கொண்டவர்களாயும் அவர்கள் நற்செய்தி பரப்புதலின் அவசியம் மற்றும் அவசர தேவையை கணிசமான அளவு மீளுறுதி செய்து " நாடுகளுக்கு நற்செய்தி." Ad Gentes எனப்படும திருச்சபையின் மறைபரப்பு தன்மையை மறைக்கோட்பாட்டின் மையமாக்கினார்கள்.

இன்றும் இத்தரிசனமானது அர்தமுள்ளதாகவே இருக்கின்றது. உண்மையில் இது பலனுள்ள இறையியல் மற்றும் மேய்ப்புப் பணி சிந்தனைக்குட்பட்டுள்ள அதேவேளையில் கிறிஸ்துவை அறியாதாரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள காரணத்தால் ஒரு புதிய அவசரத்தையும் அவசியத்தையும் தந்துள்ளது. நற்செய்தி தூதுரைப்பு பேராணையானது எக்காலத்திற்கும் பொருத்தமானது என " மீட்பரின் திருப்பணி – Redemptoris Missio" சுற்றுமடலில் "கிறிஸ்துவுக்காகக் காத்திருப்போரின் எண்ணிக்கை இன்னமும் அளப்பரியது" என எடுத்தியம்புகிறார் அருளாளர் 2ம் ஜோன் போல். மேலும் அவர் கூறுவதாவது: நம்மைப் போலவே இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டுள்ள கோடிக்கணக்கான நமது சகோதர சகோதரிகள் இறைவனின் அன்பைப் பற்றி அறியாதிருப்பது கண்டு நாம் வாளாவிருக்க முடியாது (எண் 86). விசுவாச ஆண்டினை பிரகடனப்படுத்தும் வேளையில் நானும்கூட "முன்னாட்களில் போலவே அவர் (கிறிஸ்து) எம்மை உலகின் நெடுஞ்சாலைகளில் அவரது நற்செய்தியை பூவுலகின் எல்லா மக்களுக்கும் அறிவிக்குமாறு அனுப்புகிறார்" என்று கூறினேன் (அப்போஸ்தலிக்க மடல் Porta Fidei, n 7). இத்தகைய அறிக்கையிடுதலானது, இறை ஊழியர் ஆறாம் சின்னப்பர் தமது அப்போஸ்தலிக்க சுற்றுமடலாகிய "தற்கால மனிதர்க்கான நற்செய்தி அறிவிப்பு" (Evangelii Nuntiandi) யில் கூறியுள்ளதுபோல் திருச்சபை தன் விருப்புத் தெரிவினால் ஆற்றும் பங்களிப்பாக அல்லாமல் மக்கள் விசுவசித்து மீட்கப்பட வேண்டும் என்பதற்காக ஆண்டவர் இயேசுவினால் நம்மீது சுமத்தப்பட்டதொரு கட்டளையாகும். இச்செய்தி உண்மையிலேயே அவசியமானது. இது தன்னிகரற்றது. இதற்கான மாற்றீடு எதுவும் கிடையாது. எனவே நாம் தொடக்க கால கிறிஸ்தவ சமூகங்களில் இருந்த அதே அப்போஸ்தலிக்க ஆர்வத்தினை மீண்டும் பெற்றிடுவோமாக. இச்சமூகங்கள் சிறியனவாகவும் தற்காப்பின்றியும் இருந்தும்கூட தம் அறிக்கையிடுதலினாலும் சான்று பகர்வினாலும் நற்செய்தியினை அக்காலத்தில் அவர்கள் தெரிந்துவைத்திருந்து உலகெங்கும் பரப்பினார்கள்.

எனவே இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கமும் அதனைத் தொடர்ந்த திருச்சபையின் அருளாட்சியும் மிகச் சிறப்பான வழியில் இம்மறைபரப்பு பேராணையை வலியுறுத்தி, அது கிறிஸ்துவால் தம் சீடர்களுக்களிக்கப்பட்ட கட்டளையென்பதால் அதனை எல்லா இறைமக்கள், ஆயர்கள், குருக்கள், தியாக்கோன்கள், ஆண்-பெண் துறவியர் ஆகியோர் அர்ப்பணத்தோடு நிறைவேற்றவேண்டுமென்கின்றது. ஆயர் மன்றங்கள் என்ற முறையிலும் மேய்ப்பர்கள் என்ற முறையிலும் தளத்திருச்சபையின் ஆயர்களே உலகின் ஒவ்வொரு கடையெல்லையிலும் நற்செய்தியினை அறிக்கையிடும் பிரதான பொறுப்பினைக் கொண்டுள்ளனர். உண்மையில் "அவர்கள் தத்தம் மறைமாவட்டத்திற்காக மட்டுமல்லாமல் முழு உலகின் மீட்பிற்காகவுமே அருட்பொழிவு பெற்றுள்ளார்கள் (ஜோன் போல் 2, "மீட்பரின் திருப்பணி" Redemptorio Missio சுற்றுமடல் n. 20). இதன்படி அவர்கள் "இறைமக்களின் மறைபரப்பு ஆர்வத்தையும் மனப்பாங்கையும் காணச் செய்து முழு மறைமாவட்டத்தையும் மறைபரப்புத் தன்மைகொள்ளச் செய்வர் (இதே n. 38)

### நற்செய்தி அறிவிப்பின் முன்னுரிமை

ஆயர் ஒருவருக்கு அளிக்கப்பட்டுள்ள நற்செய்தி அறிவிப்பு பேராணையானது அவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்களை மேய்க்கும் பணியோடோ அல்லது fideidomum எனப்படும் எமது குருக்களையோ அல்லது பொதுநிலையினரையோ அனுப்புவதோடு முடிவடைந்து விடுவதில்லை. அது அத்திருச்சபையின் எல்லா நடவடிக்கைகளையும் அதன் எல்லாத் துறைகளையும், ஏன் அது தன் முழுமையையுமே இதில் ஈடுபடுத்திக்கொள்வதாக இருக்க வேண்டும். இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் இதனைத் தெளிவாக சுட்டிக்காட்டுவதோடு அதைத் தொடர்ந்து வரும் திருச்சபையின் அருளாட்சியும் வலிமையாக வற்புறுத்துகின்றது. இது, அடிப்படையில் மாறி வரும் இவ்வுலகில் ஒரு திருச்சபையாகத் துலங்கிடும் ஒரு அடிப்படை பரிமாணத்திற்கேற்பத் தன் வாழ்க்கை முறைகளையும், மேய்ப்புப் பணியைத் திட்டமிடுதலையும் மற்றும் மறைமாவட்ட அமைப்பு முறைகள் அனைத்தையும் அவ்வப்போது சரியான முறையில் ஒழுங்குபடுத்துதலாகும். இது அர்ப்பண வாழ்வினை மேற்கொண்டிருக்கும் நிறுவனங்களுக்கும் அப்போஸ்தலிக்க வாழ்வின் சபைகளுக்கும் திருச்சபைகளுக்கும் திருச்சபை பக்தி இயக்கங்களுக்கும் பொருந்தும். திருச்சபை என்னும் பல்வண்ணக் கோலத்தின் அம்சங்களாகிய இவை அனைத்துமே ஆண்டவரின் நற்செய்திப் பரப்பிடும் பேராணையைத் தம் தீவிரக் கவனத்திற்கு எடுத்துக்கொள்கையில் கிறிஸ்து எல்லாவிடங்களிலும் அறிவிக்கப்படுகின்றார். ஆயர்களாகவும், ஆண்-பெண் துறவிகளாகவும், கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவர்களாகவுமுள்ள நம் திருத்தூதர் பவுலின் அடிச்சுவட்டில் "பிற இனத்தவராகிய உங்களுக்காகக் கிறிஸ்து இயேசுவின் பொருட்டுப் பவுலாகிய நான் கைதியாக இருக்கின்றேன்" (எபே 3:1) என்று அவர் கூறியதையும் பிற இனத்தவர்களுக்கு நற்செய்தியை அறிவித்திட துன்பமும் பாடுகளும் அவர் பட்டார் (கொலோ 1:24-29) என்பதையும் கருதி நம் சக்தி, காலம் வழிமுறைகள் அனைத்தையும் கிறிஸ்துவின் செய்தியை அறிவித்திட செலவளிக்க வேண்டும்.

திருச்சபையின் அடையாளமாக இருப்பதென்பது நம்மை மீட்பிற்குக் கொண்டுவருவதற்காக இறைவனின் மறையுண்மையானது கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டதும் அவர் வரும் வரைக்கும் உலகோர்க்கு நாம் அவருக்கு சான்று பகர்ந்து அறிக்கையிட வேண்டும் என்பதுமாக இருப்பதால் இதுவே நமது சமய முயற்சிகள் நடை உடை பாவனை அனைத்திலும் எப்போதும் காணக்கூடியதொன்றாக இருந்திட வேண்டும். இவ்வாறு நாம் புனித பவுலைப் போலவே நமக்குத் தொலைவில் உள்ளவர்களுக்குச் செவிமடுக்கின்றவர்களாகவும், கிறிஸ்துவை இன்னமும் அறியாதவர்களையோ அல்லது இறைவனே நம் தந்தையாய் இருக்கின்றார் என்பதை உணராதவர்களையோ கரிசனையுடன் உற்றுநோக்கி, "புதிய முறைகளை உள்ளடக்கி, பொருளாதாரத் துறையில் மட்டுமல்லாமல் மறைபரப்புதலில் நேரடி பங்கேற்பு" கொள்வோமாக (2ம் ஜோன் போல் "மீட்பரின் திருப்பணி Redemptorio Missio n. 82) விசுவாச ஆண்டு கொண்டாட்டமும் புதிய மறைபரப்புக்கான ஆயர்களின் பேராயமும் மீண்டும் மறைபரப்பு ஒத்துழைப்பை நல்கிடுவதற்கு, குறிப்பாக இரண்டாம் பரிமாணத்தில், பொருத்தமான வாய்ப்புகளாகட்டும்.

### விசுவாசமும் அறிக்கையிடுதலும்

கிறிஸ்துவை அறிக்கையிடுவதற்கான ஆர்வமானது நாம் நமது வரலாற்றினை ஆராயவும் கிறிஸ்துவே தம் பிரசன்னத்தால் குணமாக்கி, தூய்மைப்படுத்தி, நிறைவுசெய்ய வேண்டிய மானுட இனத்தின் பிரச்சினைகள், அபிலாசைகள், எதிர்பார்ப்புக்கள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளவும் வலியுறுத்துகின்றது. அவரது செய்தியானது எக்காலத்திற்கும் பொருத்தமானதாகவும் வரலாற்றினது இதயத்தின் உள்ளே எல்லா மானிடரினதும் மிக ஆழ்ந்த அமைதியின்மைக்கு பதிலளிக்கக் கூடியதுமாயுள்ளது. இக்காரணத்துக்காக "மறைபரப்பிற்கான திருச்சபையின் பாரிய எல்லைகளையும் இன்றைய சிக்கலான நிலைமையையும் கருதிற்கொண்டு ஆக்கபூர்வமான புதிய வழிகளில் இறைவார்த்தையை தொடர்பாடல்படுத்தும் தன்மையை" திருச்சபையின் எல்லா உறுப்பினர்களும் உணரவேண்டியதாயுள்ளது. (16ம் பெனடிக்ட் பேராலயத்திற்குப் பின்னரான அப்போஸ்தலிக்க திருமடல் Verbum Domini, n. 97). இதற்கு முதலாவதாக இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியின்மீது, குறிப்பாக தற்போது மானுட இனம் அனுபவித்துக்கொண்டிருக்கும் மிகப்பெரும் மாற்றங்களின் வேளைகளில்" (அப்போஸ்தலிக்க மடல்: Porta Fidein 8) ஒரு மறுமலர்ச்சியான தனிப்பட்ட மற்றும் சமூக விசுவாசம் கோரப்படுகின்றது. உண்மையில் நற்செய்தி அறிவிப்பின் வலிய முன்னெடுப்புக்கு விசுவாச சிக்கலே தடையாயிருப்பினும்கூட இது மேலை உலகில் மட்டுமல்லாமல் இறைவனுக்கான பசியும் தாகமும் கொண்ட மானுட சமூகத்தின் பெரும்பாலானோருக்குமே இருக்கின்றது. இவர்களை யாக்கோபின் கிணற்றருகே போய் கிறிஸ்துவோடு உரையாடிய சமாரியப் பெண்ணைப்போல் வாழ்வின் அப்பத்திற்கும் உயிருள்ள நீருக்கும் அழைத்து வர வேண்டும். (யோவான் 4:1-30), கிறிஸ்துவைச் சந்திக்க அவரும் அவளிடம் தண்ணீர் கேட்டுவிட்டு பின்னர் அவளிடம் எக்காலத்திற்கும் தாகம் தீர்க்கும் நீரைப் பற்றி பேசுகின்றார். முதலில் இதைப் புரிந்துகொள்ள இயலா அப்பெண் மிகவும் உலகாய முறையில் பேசினாலும் பின்னர் மெதுவாக ஆண்டவர் அவளை ஒரு விசுவாசப் பயணத்திற்கு அழைத்துச் சென்று அவள் அவரை மெசியாவாக அடையாளம் காணச் செய்கிறார். இதைப் பற்றி புனித அகுஸ்தீனார் கூறுகையில்: "அவள் தன் இதயத்தில் கிறிஸ்துவை வரவேற்ற பின்னர் அவளுக்கு வேறு என்னதான் செய்திட முடியும். அவள் தன் குடத்தை விட்டுவிட்டு கிராமத்திற்கு ஓடிச் சென்று நற்செய்தியை அறிவிப்பதைத் தவிர?" (காண்க பிரசங்கம் 15:30). கிறிஸ்துவை ஒருவர் தம் இதய தாகம் தீர்க்கும் உயிருள்ள நபராக எதிர்கொண்டாரெனில் அதன் பின், அவர் நிச்சயமாய் இப்பிரசன்னத்தின் மகிழ்ச்சியை ஏனையோருடன் பகிர்ந்துகொண்டு அனைவரும் அம்மகிழ்ச்சியை அடையச் செய்வார். கடவுளோடு கொள்ளவேண்டிய உறவு நிலைகளை இழந்து நீண்டகால கிறிஸ்தவ பாரம்பரியம் கொண்ட சமூகங்களும் நாடுகளும் மீண்டுமாய் விசுவாசம் கொள்வதன் மகிழ்ச்சியைக் கண்டுணரும் முகமாய் ஒரு புதிய நற்செய்தி அறிவிப்பினை முன்னெடுத்திட விசுவாசத்தினைப் புதுப்பித்து ஆர்வமுள்ளதாக்கவும் வேண்டியதாயுள்ளது. நற்செய்தி அறிவிப்பிற்கான கரிசனை திருச்சபைக் கோட்பாடுகளிலும் கிறிஸ்தவர்களது தனிப்பட்ட வாழ்விலும் ஓரங்கட்டப்பட்டதாக இருக்கலாகாது. மாறாக இது தமக்கே எடுத்தியம்பப்பட்ட ஒரு மிக வலிமையானதொரு குணவியல்பாகும். தமக்கே இந்த நற்செய்தி எடுத்தியம்பப்பட்டிருக்கின்றது என்றும் தாமே இச்செய்தியினை எடுத்துச் சொல்லவேண்டிய மறைபரப்பாளர்கள் என்ற உணர்வும் எழுப்பப்பட வேண்டும். நற்செய்தி அறிவிப்பின் மையக்கருத்து என்றுமே மாறாத ஒன்றாகவே இருக்கின்றது. உலகின் மீட்பிற்காகக் கிறிஸ்து மரித்து உயிர்த்தார் என்ற kerygma அறைகூவல், இறைவனின் முற்று முழுதான நிறைவான அன்பு எல்லா மனிதர்க்கும் உண்டு என்ற kerygma அறைகூவல் ஆகியவை இறைவன் தம் ஒரே பேறான முடிவில்லாத் திருமகன் ஆண்டவர் இயேசுவை அனுப்பினார் என்றும் அவர் வறுமையை உதறித் தள்ளாமல் மனித இயல்பாக அதனை ஏற்று, அதனை அன்பு செய்து, அதனை பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் தம் சிலுவையில் ஒப்புக்கொடுத்ததன் வழியாக மீட்டெடுத்தார் என்பதுமேயாகும்.

இறை விசுவாசம், வெளிப்படுத்தப்பட்டமையான இவ்வன்பின் நற்செயலானதே முதலும் முக்கியமானதுமான மறையுண்மையாக நம் வாழ்விலும் இதயத்திலும் வரவேற்கப்பட்டு நன்றி தெரிவிக்கப்பட வேண்டியதொன்றாகும். எப்படியாயினும் விசுவாசம் என்பது நாம் பகிர்ந்துகொள்ள வேண்டியதொன்றாக இருக்கின்றது. இது நாம் பெற்றுக்கொண்டு பலன்தர வேண்டியதொரு தாலந்தாகும். இது என்றுமே மறைக்கவொண்ணா ஒரு ஒளியாக இருந்து இல்லம் முழுவதையும் பிரகாசிக்கச் செய்திடவேண்டும். இதுவே நம் வாழ்வின் நமக்களிக்கப்பட்ட மிக முக்கியமான கொடையாகவிருந்து அதனை நமக்கு மட்டுமே வைத்துக்கொண்டிருக்க இயலாத ஒன்றாகும்.

### அறிக்கையிடுதல் அன்பாக மாறுகின்றது

"நற்செய்தியை அறிவிக்காவிடில் எனக்கு ஐயோ கேடு!" என்கிறார் திருத்தூதர் பவுல் (1 கொரி 9:16) இந்தச் சொற்கள் வலிமையானதொரு அதிர்வலைகளை எல்லாக் கண்டங்களிலும் உள்ள கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவ சமூகங்களுக்கும் ஏற்படுத்திக்கொண்டே இருக்கும். பெரும்பாலும் தமக்கே மறைபரப்பாளர்கள் தேவைப்படும் மறைபரப்பு நாடுகளின் இளம் திருச்சபைகளாக இருந்தாலும் மறைபரப்பு அவசியம் என்ற உணர்வானது இயல்பான பரிமாணமாக அவர்கள் மத்தியில் நிலவுகின்றது.

பல குருக்களும், ஆண் - பெண் துறவியரும், அனேக எண்ணிக்கையிலான பொது நிலையினரும், ஏன் முழுக்குடும்பங்களும்கூட, உலகின் எல்லா பகுதிகளிலிருந்தும் தத்தம் நாடுகளையும் தம் சொந்த உள்ளூர் சமூகங்களையும் விட்டுவிட்டு வேறு தளத்திருச்சபைகளுக்குச் சென்று சான்று பகர்ந்து மானுட இன மீட்பினைத் தரும் யேசுவின் பெயரை அறிக்கையிட்டு வருகின்றனர். தளத்திருச்சபைகளுக்கு மத்தியில் அன்பினைப் பகிர்ந்துகொள்ளவும், ஒவ்வொரு மனிதனும் மீட்பின் பிரகடனத்தை மீண்டும் கேட்கவோ அல்லது செவிமடுக்கவோ, வாழ்வின் ஊற்றாகிய திருவருட்சாதனங்களை அணுகவோ வெளிப்படுத்தப்படும் மிகப்பெரும் நல்லுறவாக (Communion) இது இருக்கின்றது.

அன்பாகவே உருமாற்றமடையும் இப்பெருமிதமிக்க விசுவாச அடையாளத்தினோடு திருச்சபையின் உலகளாவிய தூதுரைப்பணிக்கு பாப்பிறை மறைபரப்பு சபைகள் ஒரு கருவியாக இருந்து தரும் ஒத்துழைப்பிற்காக அவர்களை நினைவுகூர்ந்து நன்றியுடையவனாக இருக்கின்றேன். இவர்களினது செயல்களின் நிமித்தம் நற்செய்தி அறிவிக்கப்படுவதோடு ஒருவரின் அயலவர் சார்பாக இடையிட்டுச் செய்யப்படும் ஒரு காரியமாக, மிக ஏழ்மைநிலையில் உள்ளவர்களுக்கு நீதியும், மிகத்தொலைவில் உள்ளோருக்கு கல்வியும், தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் உள்ளவர்களுக்கு மருத்துவ வசதியும், வறுமையின் தளையில் இருந்து விடுதலையும், ஓரங்கட்டப்பட்டவர்கள் புனர்வாழ்வு பெறவும் மக்கள் அபிவிருத்திக்கு ஆதரவுபெறவும், இன வேறுபாடுகளுக்கும் மேலாக எழுதலும், வாழ்வின் ஒவ்வொரு நிலையையும் மதிக்கத்தக்கதுமாகவும் அமைகின்றது.

அன்பின் சகோதரனே, சகோதரியே, மறைபரப்பும் திருப்பணிக்கு (நாடுகளுக்கு நற்செய்தி) AD Gentes குறிப்பாக அதன் பணியாளர்களுக்கு தூய ஆவியானவர் அபரிதமாகப் பொழியப்படவேண்டும் என்றும் அதன்படி இறையருளால் அது உலக வரலாற்றில் இறுதியாக முன்னேற வேண்டும் எனவும் மன்றாடுகின்றேன். அருளாளர் யோண் ஹென்றி நியுமயோடு நான் செபிக்க விரும்புகிறேன் "ஓ ஆண்டவரோ, உமது மறைபரப்பாளர்களோடு மறைபரப்பின் நாடுகளுக்கு துணையாகச் செல்லும். அவர்கள் உதடுகளில் சரியான வார்த்தைகளைத் தந்து அவர்களது உழைப்பு பலனளிக்கச் செய்தருளும்." திருச்சபையின் தாயாரும் மறைபரப்பின் விண்மீனுமாகிய கன்னிமரியாள், எல்லா மறைபரப்பாளர்களுடனும் செல்வாராக.

**வத்திக்கானிலிருந்து, சனவரி 6, 2012 ஆண்டவரின் திருக்காட்சி விழா கொண்டாட்டத்தின்போது பாப்பரசர் 16ம் பெனடிக்ட்**


**தேசிய செயலகத்துக்காக மொழிபெயர்ப்பு, சகோதரர் டிவோட்டா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# நன்நெறியற்ற தலைவர் ஒருவருடன் ஒரே மேடையில் உரையாற்ற விருப்பமில்லை

## பேராயர் டெஸ்மன்ட் ருற்று



நன்னெறியும் தலைமைப் பண்பும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. எனவே நன்நெறியற்ற தலைவர் ஒருவருடன் ஒரே மேடையில் நான் உரையாற்ற விரும்பவில்லை என்று முன்னாள் அங்கிலிக்கன் பேராயர் டெஸ்மன்ட் ருற்று (Desmond Tutu) கடந்த 28.08.2012 அன்று கூறினார்.

தலைமைப் பண்புத் தேடல் உச்சி மாநாடு (The Discovery Invest Leadership Summit) ஒன்று அண்மையில் தென் ஆபிரிக்காவின் தலைநகர் ஜொகனஸ்பேர்க் (Johannesburg) நகரில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் உரையாற்ற பிரித்தானிய முன்னாள் பிரதமர் ரொனி பிளயரும் அங்கிலிக்கன் பேராயர் டெஸ்மன்ட் ருற்றும் அழைக்கப்பட்டிருந்தனர். அமைதிக்கான நோபல் பரிசை வென்றுள்ள பேராயர் ருற்று அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் சேர்ந்து பிரித்தானிய அரசு ஈராக்கில் மேற்கொண்ட இராணுவ ஊடுருவலும் ஆக்கிரமிப்பும் நன்னெறி விழுமியங்களுக்கு முரணானது என்ற தன் கண்டனத்தைக் கூறிவந்தவர். பேராயர் வெளியிட்ட இக்கருத்தைப் பாராட்டி பல அமைதிக் குழுக்களும் இஸ்லாமியக் குழுக்களும் கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

# திருத்தந்தையின் லெபனான் திருப்பயணம்

## மத்திய கிழக்குப்பகுதி முழுவதற்குமான திருப்பயணம்

### எருசலேம் இலத்தீன்ரீதி முதுபெரும் தலைவர்

செப்ரம்பர் 14 முதல் 16 வரை திருத்தந்தை 16ம் பெனடிக்ட் லெபனான் நாட்டுக்கு மேற்கொண்ட திருப்பயணம், அந்நாட்டுக்கு மட்டுமல்லாமல், அப்பகுதி முழுவதற்கும் மேற்கொண்ட திருப்பயணமாக அமைந்தது என எருசலேம் இலத்தீன்ரீதி முதுபெரும் தலைவர் வவுட் ருவால் (Fouad Twal)' கூறினார்.

திருத்தந்தையின் லெபனான் திருப்பயணம் குறித்து வத்திக்கான் வானொலிக்குப் பேட்டியளித்த முதுபெரும் தலைவர் 2010ம் ஆண்டில் வத்திக்கானில் நடைபெற்ற மத்திய கிழக்கு நாடுகள் பற்றிய சிறப்பு ஆயர் மாமன்றத்தின் தீர்மானத்தொகுப்பை வெளியிடுவதே இப்பயணத்தின் ஒரு பகுதி அமைந்தது என்று தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளின் திருஅவைத் தலைவர்கள் மற்றும் கிறிஸ்தவ சமூகத்தின் தலைவர்களிடம் இத்தீர்மானத்தொகுப்பு ஏடுகளைத் திருத்தந்தை இத்திருப்பயணத்தில் வழங்கினார் என்றும் அவர் கூறினார்.

யூதர்களுடன் உரையாடல் நடத்துவதற்கு நன்மனம் கொண்ட மனிதர்கள் இருக்கின்றபோதிலும் யூதர்களுடனான உரையாடலில் அவ்வளவாக முன்னேற்றம் காணப்படவில்லையெனவும் அவர் கூறினார்.

தற்போது சிரியாவில் இடம்பெற்றுவரும் வன்முறை குறித்த கவலையையும் எருசலேம் இலத்தீன்ரீதி முதுபெரும் தலைவர் வெளியிட்டார்.



லெபனானுக்கு விஜயம் செய்த திருத்தந்தையை விமான நிலையத்தில் அந்நாட்டு இஸ்லாமியத் தலைவர் சேய்க் நயிம் ஹசன் அவர்கள் கைகொடுத்து வரவேற்கின்றார்.



லெபனான் தலைநகர் பேராலயத்தில் 'மத்திய கிழக்கில் திருஅவை' என்ற மத்திய கிழக்குப் பகுதிக்கான சிறப்பு ஆயர் மாமன்றத்தின் தீர்மானங்கள் அடங்கிய அப்போஸ்தலிக்க ஏட்டில் திருத்தந்தை கையெழுத்திடுகின்றார்.



லெபனான் ஜனாதி மிக்கேல் சுலைமான் அந்நாட்டு தலைநகர் விமான நிலையத்தில் திருத்தந்தைக்கு இராணுவ மரியாதையுடன்கூடிய வரவேற்பை அளிக்கின்றார்.



லெபனான் நாட்டுக் கொடிகளை ஏந்தியவாறு அந்நாட்டு முஸ்லிம் பெண்கள் திருத்தந்தையை வரவேற்கக் காத்திருக்கின்றார்கள்.

## சீனமொழியில் விவிலியத்தை மொழிபெயர்த்த

# 'சீனாவின் புதிய ஜெரோமுக்கு' அருளாளர் பட்டம்



"சீனாவின் புனித ஜெரோம்" என அழைக்கப்படும் பிரான்சிஸ்கன் சபை அருள்தந்தை இறையடியார் கபிரியேலே எம். அலக்ரா (Grbriele M. Allegra) கடந்த செப்ரம்பர் 29ம் திகதி அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். சீனாவிலும் ஹாங்காங்கிலும் மறைப்பணியாளராகப் பணியாற்றிய இவர் விவிலியத்தை சீன மொழியில் மொழிபெயர்த்ததனால் புகழ்பெற்று விளங்குகிறார். 1907ம் ஆண்டு இத்தாலியில் பிறந்த இவர், 1930ம் ஆண்டு பிரான்சிஸ்கன் சபையில் குருவாகி அதற்கு அடுத்த ஆண்டில் சீனா சென்றார். சீன மொழியில் விவிலியத்தை மொழி பெயர்க்க வேண்டுமென்பதே அவரின் முக்கிய நோக்கமாக இருந்தது.

(தொடர்ச்சி [illegible])

## அடுத்த திருத்தந்தையின் பதவிக்கு முன்மொழியப்பட்ட

# கர்தினால் மரிய மார்த்தினி இறைபதம்



கத்தோலிக்க மதச் சீர்த்திருத்தவாதியும் அடுத்த திருத்தந்தையின் பதவிக்கு முன்மொழியப்பட்டவருமான கர்தினால் கார்லோ மரியா மார்ட்டின் (Cardinal Carlo Maria Martini ) தனது 85ஆவது வயதில் காலமானார்.

1927ம் ஆண்டு பெப்ரவரி 15ம் தேதி இத்தாலியின் தூரின் நகரில் பிறந்த கர்தினால் மர்த்தினி தனது 17வது வயதில் 1944ம் ஆண்டு இயேசு சபையில் சேர்ந்தார். 1952ம் ஆண்டில் குருவானார். உலகப் புகழ்பெற்ற விவிலிய நிபுணரான இவர், உரோம் கிரகோரியன் பாப்பிறை பல்கலைக்கழகம் மற்றும் பாப்பிறை விவிலிய நிறுவனத்தின் விவிலியத்துறையின் தலைவராகப் பணியாற்றினார். 1969ம் ஆண்டு முதல் 1978ம் ஆண்டுவரை இவ்விரண்டு நிறுவனங்களின் அதிபராகவும் இருந்தார்.

விவிலிய நிபுணர் என்ற வகையில் பல விவிலியத் தலைப்புக்களிலும் புனித இலேயோலா இஞ்ஞாசியாரின் ஆன்மீகம் பற்றியும் பல நூல்களை எழுதியுள்ளார். இவரின் நூல்கள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. உலகின் மிகப்பெரிய உயர்மறைமாவட்டங்களில் ஒன்றான மிலான் பேராயராக 1979ம் ஆண்டில் அருளாளர் திருத்தந்தை 2ம் ஜான் பால் அவர்களால் நியமிக்கப்பட்டார்.

திரு அவைக்கும் நவீன உலகுக்கும் இடையே உரையாடலை ஊக்குவித்ததில் சிறந்தவர் என்று ஊடகங்களால் பாராட்டப்படுகிறார். விவிலியத்தின்மீது தணியாத் தாகம் கொண்ட கர்தினால் மர்த்தினி, 2002ம் ஆண்டு ஜீலை 11ம் திகதி பணி ஓய்வு பெற்ற பின்னர் எருசலேம் சென்றார். பார்க்கின்சன் நோய் முற்றியதும் 2008ம் ஆண்டில் எருசலேமிலிருந்து இத்தாலி திரும்பி கல்லராத்தே என்ற நகரில் பார்க்கின்சன் நோயால் துன்புற்று ஆகஸ்ட் 31ம் திகதி பிற்பகல் 03.45 மணிக்கு குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் சூழ்ந்து நிற்க தனது ஆவியை ஆண்டவரிடம் ஒப்படைத்தார்.

## கர்தினால் மர்த்தினியின் மறைவுக்கு

# திருத்தந்தை இரங்கல்

இத்தாலியின் மிலான் உயர்மறைமாவட்டத்தின் பேராயராக 22 ஆண்டுகள் பணியாற்றிய இயேசு சபை கர்தினால் கார்லோ மரிய மர்த்தினி தனது 85வது வயதில் 31.08.2012 அன்று பிற்பகலில் இறைபதம் அடைந்தார். கர்தினால் மர்த்தினி அவர்களின் மறைவையொட்டி மிலானின் தற்போதைய பேராயர் கர்தினால் அஞ்சலோ ஸ்கோலா (Angelo Scola) அவர்களுக்குத் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அனுப்பியுள்ள இரங்கல் தந்தியில், "புனித லொயோலா இஞ்ஞாசியாரின் அன்புப் புதல்வராகிய இந்த அன்புச் சகோதரர், நற்செய்திக்கும் திருஅவைக்கும் தாராள உள்ளத்துடன் பணியாற்றியவர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

கர்தினால் மர்த்தினி சிறந்த ஆசிரியர், விவிலிய நிபுணர், உரோம் கிரகோரியன் பாப்பிறை பல்கலைக்கழகம் மற்றும் பாப்பிறை விவிலிய நிறுவனத்தின் அன்புக்குரிய அதிபர் என்றெல்லாம் தனது தந்திச் செய்தியில் நினைவுகூர்ந்துள்ள திருத்தந்தை அம்புரோசியன் மறைமாவட்டத்தின் ஞானமுள்ள மற்றும் ஊக்கம் தளராத பேராயர் என்றும் பாராட்டியுள்ளார்.

உண்மையுள்ள ஊழியர் மற்றும் தகுதியுடைய ஆயரை நம் ஆண்டவர் விண்ணக எருசலேமுக்குள் அழைத்துக் கொள்ள வேண்டுமென்று புனித கன்னிமரியின் பரிந்துரை மூலம் செபிக்கின்றேன் எனவும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

கர்தினால் மர்த்தினியின் இறப்போடு திருச்சபையில் மொத்த கர்த்தினால்களின் எண்ணிக்கை 206 ஆகவும், இவர்களில் திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் தகுதியுடைய 80 வயதுக்கு உட்பட்ட கர்தினால்களின் எண்ணிக்கை 118 ஆகவும் மாறியது.

## உலகில் மரணதண்டனைகள் நிறுத்தப்படவேண்டுமென

# ஐ. நா. கோரிக்கை

காம்பியா, ஈராக், தென்சூடான் ஆகிய நாடுகளில் அண்மையில் மரணதண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. உலகில் பல நாடுகள் மரணதண்டனைகளை நிறைவேற்றுவதில் தீவிரம் காட்டுகின்றன என்று ஐ. நா. மனித உரிமைகள் நிறுவனம் தனது கவலையை வெளியிட்டுள்ளது.

மரணதண்டனை நிறைவேற்றுவதைச் சட்டத்திலிருந்து நீக்குவதற்கு இதுவரை ஆபிரிக்கக் கண்டத்தில் முன்னணியில் நின்ற காம்பிய நாடு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கடந்த வாரத்தில் ஒன்பது .கைதிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றியதை ஐ.நா.மனித உரிமைகள் நிறுவனப் பேச்சாளர் ரூபேட் கோல்விலா (Rupert Colville) குறிப்பிட்டார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்......!

## அருட்பணியாளர் அன்புராசா (அமதி) எழுதும்

### சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 13.

ஒரு பெரிய நாடக அரங்கேற்றம் கோலாகலமாக நிகழவிருந்தது. நாடகத் தயாரிப்பாளர் ஒருவர், அறிஞர் பேர்ணாட்சாவையும் இந்நிகழ்விற்கு அழைத்திருந்தார். பேர்ணாட்சாவிற்கு நண்பர்கள் குறைவு என்பதை இந்நாடகத் தயாரிப்பாளர் நன்கு அறிந்திருந்தார். இதனை நாடகத் தயாரிப்பாளர் மிகவும் நாசுக்கான முறையில் பேர்ணாட்சாவிற்குக் குறிப்பிட்டுக் காட்ட எண்ணினார். "இரண்டு நுழைவுச் சீட்டுக்கள் (Tickets) அனுப்புகிறேன். உங்களுக்கு ஒன்று, மற்றையது உங்கள் நண்பருக்கு; அப்படி நண்பர் யாராவது இருந்தால்!" என ஒரு குறிப்பும் வைத்து இரண்டு நுழைவுச் சீட்டுக்களையும் அனுப்பிவைத்தார். இதனைப் பார்த்த பேர்ணாட்சாவிற்கு கொஞ்சம் கோபம் வந்துவிட்டது. உடனே, "அவசர வேலை இருப்பதால் முதல் நாள் அரங்கேற்றத்திற்கு என்னால் வரமுடியாது. இரண்டாம் நாள் வருவேன்; உங்கள் நாடகம் நடந்தால்!" எனப் பதில் அனுப்பிவைத்தார். எவ்வளவு அற்புதமாக தனது கோப உணர்வை வெளிப்படுத்துகிறார் இம்மனிதன் பேர்ணாட்சா!

**குடும்பத்தில் அல்ல கூட்டுக்குள் வாழவேண்டியவர்கள்**

தன் குடும்பத்தைப் பற்றி உரையாடிக்கொண்டிருந்தபோது, "என்ர புருசன், சீறிச் சினக்கிறார் பாதர்!" எனக் குறிப்பிட்டாள் ஒரு குடும்பத் தலைவி. அக்குடும்பத் தலைவனுடனும் உரையாடினேன். அவர், "என்ர மனிசி கோழி மாதிரி அடிக்கடி கொக்கரிக்கிறாள் பாதர்! அப்ப நான் சீறாம, சினக்காம இருக்க ஏலுமோ?" என என்னைப் பார்த்து நியாயம் கேட்டார். இவர்களுடன் தொடர்ந்து உரையாடிக்கொண்டு போகப்போக ஒன்று புரிந்தது; இவர்கள் குடும்பத்தில் அல்ல, கூட்டுக்குள் இருக்க வேண்டியவர்கள் என்பதுதான்! அதாவது மிருகக்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு கூட்டினுள்.

**கர்ச்சிக்கிறான், கனைக்கிறான், குரைக்கிறான் மனிதன்!**

புலி உறுமும், பாம்பு சீறும், சிங்கம் கர்ச்சிக்கும், குதிரை கனைக்கும், நாய் குரைக்கும் என சிறுவயதில் கற்றிருக்கிறோம். இந்த விலங்கினங்களின் ஒலி வெளிப்பாடுகளை எல்லாம் இப்போதைய மனிதன் பெற்றுவிட்டான் போலத்தான் தெரிகிறது. அதற்கான சான்றுகள் நிறையவே கிடைத்திருக்கிறது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான குடும்பங்களில் கணவன் மனைவியிடம் ஏதாவது கேட்டுவிட்டால் மனைவி கணவனைப் பார்த்து உறுமுகிறாள், மனைவி கணவனிடத்தில் ஏதாவது வினவினால் கணவன் மனைவியை நோக்கிச் சீறுகிறார், மருமகள் மாமியிடம் நேர்மறையாகவேனும் ஏதேனும் கூறிவிட்டால் மாமி மருமகளிடம் கர்ச்சிக்கிறாள், மாமி மருமகளிடத்தில் குறிப்புக்கள் ஏதாவது கூறிவிட்டால் மருமகள் கனைக்கிறாள். இவ்வாறு, இப்போது, வீட்டில் நாய்களின் தேவையே இல்லாமல் போயிருகிறது! குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லோருமே ஏதாவது ஒரு கட்டத்தில் குரைத்துக்கொண்டு இருந்தால், எப்போதும் குரைப்புச் சத்தம் வீட்டிலும் வெளியிலும் கேட்கக்கூடிய வாய்ப்பு இருப்பதனால் நாய்களுக்கு வேலை இல்லாமல்போவது இயல்புதானே!

**குட்டிபோட்ட நாய்கள் போன்று!**

சிலபேர்வழிகள், குட்டிபோட்ட நாய்கள்போல, எப்ப பார்த்தாலும் வள்...வள்... வள்...சள்... வள்...வள்... வள்...சள்... என்று தொட்டதற்கும் பட்டதற்கும் மற்றவர்கள்மீது பாய்ந்துகொண்டும் குரைத்துக்கொண்டும் இருப்பார்கள். வீட்டில் இருந்த இந்தப் பழக்கம், படிப்படியாக இன்று அலுவலகங்களிலும், மருத்துவமனைகளிலும், திணைக்களங்களிலும் ஏன் பலவகைப்பட்ட பணிமனைகளிலும் பரவியிருப்பதைக் காணக்கூடியதாய் இருக்கிறது.

பரிணாம வளர்ச்சியின் ஒரு கட்டமாகக்கூட இதனைக் கருதலாம்! இறைவனுக்கு நன்றி, டார்வின் இறந்துபோனான்! அல்லது டார்வின், தானே முன்பு முன்மொழிந்த பரிணாமக் கொள்கையை மறுத்து, மனிதனில் இருந்துதான் பாய்ந்து பாய்ந்து திரியும் ஜீவராசிகள் தோன்றியிருக்கும் என்றுரைத்திருப்பான்!

கடும் சினம் கொள்பவருடைய உள்ளமும் அவரைச் சுற்றியுள்ளவர்களும் எப்போதும் மகிழ்ச்சியைத் தொலைத்தவர்களாகத்தான் இருப்பார்கள். கடும் கோபம் மகிழ்ச்சியின் எதிரி எனலாம். இவ்வுண்மையை வள்ளுவன், "நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும் உளவோ பிற?" அதாவது முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட ஒருவனுக்குப் பகையானவை வேறு உள்ளனவோ? என்கிறார்.

**நீங்களும் ஞானியாகலாம்!**

கிரேக்க தத்துவ ஞானி சோக்கிறட்டிஸ் தன் நண்பர்களுடன் பகுத்தறிவுக் கொள்கைகளைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார். அவர் மனைவி சாந்திப்பி இச்செயற்பாட்டை விளங்கிக்கொள்ள முடியாத ஒரு பிறவி! கழுதைக்கு எப்படித் தெரியும் கற்பூர வாசனை! சோக்கிரட்டிஸ், அவர் தம் நண்பர்களை அனுப்பிவிட்டு வருமாறு சாந்திப்பி காட்டுக்கூச்சல் செய்தாள். சோக்கிரட்டிஸ் இதனை ஒன்றையும் காதில் போட்டுக்கொள்ளவில்லை. சாந்திப்பிக்கு கடுப்பேறியது. வந்த கோபத்தில் ஒரு பாத்திரம் நிறைய தண்ணீரைக் கொண்டுவந்து அவர்கள்மேல் ஊற்றினாள். நனைந்த கோழியைப்போல நின்று கொண்டு சோக்கிரட்டிஸ், "முதலில் இடி இடித்தது, இப்போது மழை பெய்திருக்கிறது; அவ்வளவுதான்!... தண்ணீர் பொறுமையாக இருக்கிறவரை பாத்திரத்திற்குள் பத்திரமாக இருக்கிறது, கொதிக்க ஆரம்பித்ததும் ஆவியாகி ஒன்றுமில்லாமல் போய்விடுகிறது" என்றாராம். மேலும் தொடர்ந்து கூறுகையில், "இளையோரே! திருமணம் செய்து கொள்ளுங்கள்! நல்ல மனைவி கிடைத்தால் மகிழ்ச்சி அடைவீர்கள், கெட்ட மனைவி கிடைத்தால் தத்துவ ஞானி ஆகிவிடுவீர்கள்" என்றுரைத்தாராம்.

**கோப உணர்வு பொதுவானது**

கோப உணர்வு எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான ஒரு உணர்வாக இருக்கிறது. நாயை விரட்டினால், அது விரட்டியவரைக் கடிக்க வருகிறது. பாம்பைத் தீண்டினால் அது தீண்டியவரை தீண்ட முனைகிறது. கழுதையை விரட்டினால் தன் (கை) கால்வரிசையைக் காட்டுகிறது. இவ்வாறு எல்லா உயிரினங்களுக்கும் கோப உணர்வு உண்டு என்பதை அறியலாம். அந்த வகையில் எந்த மனிதனும் இக்கோப உணர்வுக்கு விதிவிலக்கல்ல. ஆனால் என்ன, சிலர் மாமியார் வீட்டுச் சீதனம்போல கோபத்தை காலாகாலத்துக்கும் கட்டிக்காப்பதும் அல்லது ஏதோ பாட்டன், பூட்டன் சொத்தைப் போல தங்கள் கோப உணர்வைப் பெருமையாக நினைப்பதும் - மதிப்பதும்தான் வினோதத்திற்கு உரியது.

**கோபத்திற்கான காரணிகள்**

"இயலாமையின் வெளிப்பாடுதான் நம் கோபம்" என்கிறார் பெனாப்போந்து இராய்முந்து என்ற இறையடியான். எப்போது பலவீனப்பட்டு நொந்துபோய் ஒன்றை அடைய முடியாது – பெறமுடியாது என எண்ணுகிறோமோ அப்போது கோப உணர்வும் கூடிவிடுகிறது! அதனைத்தான் இயலாமையின் வெளிப்பாடாகக் காண்கிறார் இப்புனிதன்.

மேலும், "தான் என்ற அகந்தை உணர்வு எங்கே வேர் பிடித்து விருட்சமாக வளர்ந்துவிடுகிறதோ அங்குதான் கோபம் எனும் விசக்கனி காய்த்துக் குலுங்கும்" என்கிறார் சோக்கிரட்டிஸ். அகங்காரமும் ஆணவமும் கொண்டவர்களுக்கு தலையில் நிறையக் கனம் இருப்பதால் கோபமும் இயல்பாகவே இருப்பதைக் காணலாம். அதனால்தான், கவியரசு கண்ணதாசன், "ஆசை கோபம் களவு கொள்பவன் பேசத் தெரிந்த மிருகம்; அன்பு நன்றி கருணை கொண்டவன் மனித வடிவில் தெய்வம்" எனத் தத்துவப் பாடலொன்றைப் பாடிச் சென்றார்.

நெருப்புக்குச்சி ஒன்று தீப்பெட்டியைப் பார்த்து, "நாம் இரண்டு பேரும் உரசிறம். ஆனால், நான் எரிஞ்சுபோறன் நீ மட்டும் எப்படி சும்மா இருக்கிறாய்?" என வினவியதாம். நெருப்புப்பெட்டி, "இல்ல, உனக்குத் தலையில் கனமும் சினமும் இருக்கு. அதனாலதான்!..." என்றதாம். கோபப்படுபவர்கள் இயல்பாகவே பெரிய சத்தம்போட்டு அல்லது கூக்குரல் இட்டுப் பேசுவார்கள் - விவாதிப்பார்கள் - சண்டைபிடிப்பார்கள். காரணம் என்ன தெரியுமா? அவர்கள் இதயங்கள் இறுக்கிக்கொண்டு, முண்டங்களை முட்டவிடுவதால் ஏற்படுகின்ற ஒரு தாக்கம் என்றுதான் கூறலாம்.

**சினத்தினை அடைகாக்காதீர்**

முட்டைகளை அடைவைத்து - அடைகாத்து, குஞ்சுகள் பொரித்து, குஞ்சுகளை வளர்ப்பதுபோல கோபத்தைச் சினமாக்கி, சினத்தை வெறுப்பாக்கி, வெறுப்பைப் பகையாக்கி தாங்களும் பகையில் வாழ்ந்து; தங்கள் சந்ததிக்கும் இவ்மரபணுவைக் கடத்திவிட்டுச் செல்கிறார்கள் சிலர். இதனால், இக்கோபம் குடும்ப வாரிசுபோல சில குடும்பங்களில் வாழையடி வாழையாக வளர்ந்து குடும்பங்களைச் சீரழித்து ஊரைச் சின்னாபின்னமாக்கி மக்களின் வாழ்வை சீர்குலைப்பதைக் காணலாம். ஆகவேதான், பவுல் எபேசு நகரத்தினருக்கு எழுதிய கடிதத்தில் 4:.26-27இல், "சினம் உற்றாலும் பாவம் செய்யாதிருங்கள். பொழுதுசாய்வதற்குள் உங்கள் சினம் தணியட்டும். அலகைக்கு இடம்கொடாதீர்கள்" என்று அறிவுறுத்துகிறார். கடும்கோபம் அலகையிடம் எம்மை அழைத்துச் செல்லும் முதல் சாதனம்.

**ஆத்திரம் அறிவை மடக்கிவிடுகிறது**


'ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்' என்றார்கள் நம் முன்னோர்கள். உண்மையில் கோபம் கொள்கின்றபோது நம்முடைய அறிவு செயற்படாமல் ஆத்திர (கோப) உணர்வே மேலோங்குகிறது. கோப உணர்வு 'கதவழி'யாகி, 'கதவழி' கைகலப்பாகி, கைகலப்பு கத்திக்குத்தாகி, கத்திக்குத்து கழகச் சண்டைகளாக மாறுவதை இன்று பார்க்கலாம். அதனால்தான், 'கோபம் பின்கதவால் வருகிறபோது அறிவு முன் கதவால் வெளியேறுகிறது' என்கிறார்கள். 'கோபம் வந்தவன் கண்களை மூடிக்கொண்டு வாயைத் திறந்துவிடுகிறான்' என்று இன்னொரு அனுபவசாலி குறிப்பிடுகிறான். சிலர் வாயைத் திறந்தாலே சகிக்க முடியாது! கண்களையும் மூடிக்கொண்டு வாயையும் திறந்தால் எப்படி சமாளிப்பது! எனவேதான் வள்ளுவனும், சினத்தை நாம் அடக்காவிடில் சினம் நம்மை அடக்கம் செய்துவிடும் என்பதை, "தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால், தன்னையே கொல்லும் சினம்" என்கிறார்.

**'கோபக்கனல் செந்தமிழ் பழஞ்சொற்கள்'**

அனேகர் கோபப்பட்டுவிட்டால் பேசுகின்ற வார்த்தைகள் எங்கிருந்துதான் வருகிறதோ என மலைப்பாக இருக்கும். அந்த அளவுக்கு வார்த்தையில் தெளிவும், வார்த்தைத் தெரிவும் அமைந்திருக்கும். சிலர் மிகச் சிறப்பான அடைமொழிகளை எல்லாம் லாவகமாகப் பயன்படுத்துவார்கள்! அந்த மகனே!... இந்த மகனே!... வரப்பில் பிறந்தவனே!... வயல்ல பிறந்தவனே!... வக்கடையில் பிறந்தவனே!... என வரிசையில் வளர்த்துக்கொண்டே போவார்கள். 'குளோனிங்'இல் குழந்தை பிரசவித்ததுபோல பச்சையாகவே பயப்படாமல் எதுகை மோனையோடு சொல்வார்கள். இதனை கேட்கிறபோது ஏற்படுகின்ற இன்பம் இருக்கிறதே, அதனை உங்களுக்குச் சொல்லிப் புரியவைக்க முடியாது! வாய்ப்புக்கள் கிடைக்கின்ற போது, நின்று கேட்டு இரசித்துப் பாருங்கள். 'அந்த'ச் சுவை புரியும்! இவ்வாறு செவியூடாக உண்டாகும் இன்பத்தைக் குறித்துத்தான், 'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என வள்ளுவன் பாடினானோ? எனச் சிந்திக்க வேண்டி இருக்கிறது. மேற்சொன்ன விடயத்தின் அடுத்த கட்டம் இன்னும் சுவாரசியமானது. (தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

---

புனித அந்தோனி மரிய கிளாரெட்
கிளரேஷியன் துறவு சபை நிறுவுனர்,
(கி.பி. 1807 - 1870)



மாதமொரு புனிதரை
அறிந்துகொள்வோம்

# புனிதர்களின் பாதையில்

சிறுவ்யதில் துணி நெய்யும் தமது தந்தையின் தொழிலில் இவர் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். இடைவேளைகளில் இலத்தீன் மொழியையும், அச்சுப் பதிக்கும் தொழிலையும் கற்றுக்கொண்டார். 23 வயதில் குருமடத்திற் சேர்ந்து 28 வயதில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். சில ஆண்டுகளுக்குப்பின் மறைபரப்பு நாடுகளுக்குச் செல்லும் நோக்குடன் இயேசு சபையில் சேர்ந்தார். இங்கு இவரது உடல் நலம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் இயேசு சபைத் தலைவர் இவரைத் தாயகம் சென்று அங்கு மறைப்பணி ஆற்றுமாறு அறிவுரை கொடுத்து அனுப்பிவிட்டார்.

ஸ்பெயின் நாட்டில் 10 ஆண்டுகள் இத்தகைய அரும்பெரும் பணியில் இவர் ஈடுபட்டார். இந்தச் சூழ்நிலையில்தான் 'கிளரேஷியன்' துறவற சபையை நிறுவினார். கியூபாவில் சான்றியாகோ நகரின் பேராயராகப் பணியாற்றினார். இவரது வாழ்க்கையில் மரியன்னையின் உதவி ஏராளமாக இருந்தது. குருமாணவராகப் படிக்கும் நாட்களில் ஒருமுறை நீரில் மூழ்கியிருக்க வேண்டியவர், மரியன்னையின் குறுக்கீட்டால் புதுமையாக காப்பாற்றப்பட்டார். இவரது பணி கனேரித் தீவுகளுக்கும், க்யூபா, [illegible] போன்ற நகரங்களுக்கும் கிடைத்தது. முதல் வத்திகான் சங்கத்திலும் இவர் பங்கேற்றார். கார்தூசியன் சபையில் சேர முயன்றபொழுதும் கடுமையான நோய் தடங்களாகிவிட்டது. எனினும் ஒரு குருவாகப் ஸ்பெயினில் பணியாற்றிய நாட்களில், மிகப் புகழ்வாய்ந்த திருமறை போதகர் என்று இவர் பெயர் பெற்றிருந்தார். 10 ஆண்டுகள் தமது சொந்த நாட்டில் திருப்பணியாற்றி வரும்போது திவ்ய நற்கருனைப் பக்தியையும், மரியாளின் மாசற்ற இதய பக்தியையும் பரப்புவதில் முனைந்திருந்தார்: எப்போதும் அவரது கையில் செபமாலை இருந்தது.

கியூபாவில் கிறீஸ்தவர்கள் மனைவியர் பலரை வைத்திருந்தனர். அடிமைச் சந்தைக்கு வரம்பில்லாமல் போனதுபோன்ற கொடிய தீமைகளின் நடுவே இவரது துணிச்சலான, கண்டிப்புடன்கூடிய மறை போதனைக்கு நிறைய எதிர்ப்புக் கிளம்பியது. அதைத் துணிவுடன் எதிர்கொண்டார். இறுதியில் பாரிஸ் சென்று அங்கு, ஸ்பெயினிலிருந்து குடியேறியவர்களுக்குப் போதித்து வந்தார். இவர் 200க்கும் மேலான நூல்களை எழுதியுள்ளார். இவரது வாழ்நாளெல்லாம் கத்தோலிக்க வெளியீடுகளை பரப்புவதில் ஏராளமான முயற்சிகள் எடுத்துக்கொண்டார். (தொடர்ச்சி 14ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குடும்ப சபையின் 150 ஆவது ஆண்டு நீறைவில் மனந்திறந்து....!

1862இல் யாழ் மண்ணில் திருக்குடும்ப சபைச் சகோதரிகள் தம் தடம் பதித்த 150ஆவது ஆண்டை நன்றி நிறை இதயங்களுடன் நினைவுகூரும் யாழ் மாகாண திருக்குடும்ப சகோதரிகள் தொடர்ச்சியாக தம் சபை பற்றியும், அதன் வளர்ச்சி பற்றியும் மன்னா வழியாக வாசக நெஞ்சங்களுக்கு சொல்ல வருகின்றார்கள். - ஆசிரியர்.



## திருக்குடும்ப சபையின் தியானயோக அழைத்தல்

திருக்குடும்ப சபை நிறுவுனர் வண. பீற்றர் பியன்வெனு நோ ஆய் அடிகள் தமது குருத்துவப் பயிற்சிக்காலத்தில் நீண்ட மணித்தியாலங்களைச் செபத்திலே செலவிட்டார். இறைவனின் மகிமையையும் அவரது அரசையுமே தேடினார். இறைவனின் அன்பினால் அவர் தொடப்பட்டு இறை அன்பைத் தியானிக்கும் ஆர்வம் அவரை ஈர்த்தது. அவர் ஓர் செபத்தின் மனிதன். கடவுளுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்ட ஆழ்நிலைத்தியானக் குரு. தம் சபைச் சகோதரிகளுக்கும் நண்பர்களுக்கும் எழுதும் கடிதங்களிலெல்லாம் இறை ஒன்றிப்பின் அவசியத்தையும், இறைவனின் விருப்பத்திற்கு எந்நிலையிலும் பணிந்து வாழவேண்டிய மனப்பக்குவத்தைப்பற்றியும் அடிக்கடி வலியுறுத்தி எழுதுவார்.

எனவே இவரிடம் விளங்கிய தியானயோக பற்றுறுதியும் இறை அனுபவமும் தியானயோக அழைப்புக்கு வித்திட்டது. சகோதரிகளிற் சிலர் இவ்விதமான அழைப்பை விரும்பி "எப்போ ஆரம்பிப்பீர்?" என்று நிறுவுனரிடம் கேட்டபோது "இன்னும் குறித்த நேரம் வரவில்லை" என்று பதிலிறுத்தார். இறைவனின் திருவுளம் நிறைவேற 1859ஆம் ஆண்டு ஆனித்திங்கள் முதலாம் நாள் தியானயோக இல்லத்தை போர்டோவில் 'மாட்டியாக் ' என்னும் இடத்தில் ஆரம்பித்தார். தியானயோக சகோதரிகள் திருக்குடும்ப சபையின் மறைபொருளாக, அதன் உயிர் நாடியாக இருக்கவேண்டுமென விரும்பினார். 1822ஆம் ஆண்டு இயேசு நற்கருணையில் அற்புதமாகக் காட்சியளித்து அளித்த ஆசீருக்கு இடையறாது நன்றி செலுத்தும் ஆராதனையில் ஈடுபட்டிருப்பர். அமைதியிலும் ஏகாந்தத்திலும் "தேவண் மாத்திரமே" என்னும் மனப்போக்கில் தொடர்ச்சியான செபம், மகிழ்ச்சியான தபம் என்னும் திருச்சபையின் நோக்கை இவர்கள் வாழ்கின்றனர். குழும வாழ்வு இவர்களுக்கு முதன்மையானது. குழுமத்தில் வாழும் ஐக்கிய வாழ்வு சபைச் சகோதரிகளுக்கும், உலகம் முழுவதற்குமே அதிர்வுகளாகப் பரவிச் செல்கின்றது. இன்று உலகில் அன்பற்றநிலை, பிரிவுகள், பிளவுகள் மலிந்து காணப்படும் நிலையில் இவர்களது செபம், அன்பு வாழ்க்கை, வார்த்தைகள், செயற்பாடுகள், முழு உலகையும் ஊடுருவுமென்ற உறுதிப்பாடு உண்டு. இவர்களது மறைந்த நாளாந்த வாழ்வில் இயேசுவோடு ஒன்றித்து ஒப்புக்கொடுக்கும் ஆராதனை புகழ்ச்சியும் நன்றியும், அனைத்துலகுக்கும் எழுப்பும் வேண்டுதல்களும் இயேசுவில் அனைவரும் ஒரே குடும்பமாக இருக்க ஆசிக்கும் இவர்களது வாழ்வின் பிரமாணிக்கத்தைத் தூண்டுகின்றது.

இவர்களைத் தேடிவருவோரை வரவேற்று, செவிசாய்த்து ஆறுதல் அளித்து, செபத்தால் அவர்கள் மனங்களை அமைதிப்படுத்துகின்றனர். பல துறவியர், குருக்கள், பொதுநிலையினர் தம் ஆன்மீக புதுப்பித்தலுக்காக தியானங்களில் ஈடுபட வரும்போது அவர்களை வரவேற்று உதவிசெய்வர். சபையின் அங்கத்தவர்களுடன் அந்நியோன்னிய அன்பில் இணைவதுடன் சபையின் விசேட விழாக்களில் பங்குகொண்டு மகிழ்வர். இயேசு, மரி, சூசை நசரேத்தில் செபத்திலும், தியானத்திலும் தம் வாழ்வைச் செலவழித்து மறைந்த வாழ்வு வாழ்ந்தார்களோ அவர்களைப் பின்பற்றி இவர்களும் அன்பு வாழ்வு, அமைச்சல், சுயமறுப்பு, தியாக வாழ்வு, ஆன்மவாஞ்சை கொண்ட புண்ணிய வாழ்வை வாழ்கின்றனர்.

இலங்கையில் 1973ஆம் ஆண்டு ஆரம்பித்த இந்த அழைப்பை நீர்கொழும்பைச் சேர்ந்த "போளவிளானை" என்னும் இடத்தில் சகோதரிகள் சேர்ந்து வாழத்தொடங்கினர். 1976ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் என்னும் இடத்தில் ஆரம்பித்து 1990ஆம் ஆண்டுவரைக்கும் அங்கு வாழ்ந்தார்கள். இவர்களின் வாழ்வுப் பிரசன்னம் போருக்குள் துடிதுடித்து அமைதி இழந்து, ஆறுதல் அற்று பல இடப்பெயர்வுகளுக்கு முகம் கொடுத்த மக்களுக்கு அன்பை, அமைதியை, ஆறுதலை அள்ளிக் கொடுத்த ஓர் அவுடதமாக அமைந்தமை மறுக்க, மறக்க முடியாத உண்மை ஆகும். ஆழ்நிலைத் தியானத்தில் என்றும் இறைவனுடன் சங்கமமாகும் இவர்கள் போரின் கொடுமையால் இருக்கமுடியாத நிலையில் கந்தானையில் உள்ள நாகொட என்னும் இடத்தில் தென்னிலங்கைச் சகோதரிகளுடன் தற்போது வாழ்ந்துவருகின்றனர். இன்று திருக்குடும்பச் சபையின் தியானயோக அழைப்பின் இல்லங்கள் உலகிலே நான்கு தேசங்களில் அமைந்துள்ளன. பிரான்ஸ், ஸ்பெயின், சிறீலங்கா, ஆர்ஜென்ரீனா.

"ஆண்டவர் எவ்வளவு இனிமையானவர் என்று சுவைத்துப் பாருங்கள். அவரிடம் அடைக்கலம் புகுவோர் பேறு பெற்றோர்" (தி.பா 34:8).

யூபிலி விழா அமைப்பாளர், மாகாண இல்லம், யாழ்ப்பாணம்.

## திருக்குடும்ப சபையின் அர்ப்பணிக்கப்பட்ட திருமடசார்பற்ற அழைப்பு

அருட்தந்தை பீற்றர் பியன்வெனு நோஆயின் ஆரம்பப்பணி அன்றைய சூழலில் நலிவுற்ற மக்கள் மத்தியில் விசுவாசத்தை உறுதிப்படுத்தி பரப்புவதாக அமைந்திருந்தது. பிரான்சியப் புரட்சியினால் பாதிக்கப்பட்டு சிறைவைக்கப்பட்ட குடும்பங்கள், கைவிடப்பட்ட முதியோர், சிறுவர்கள், ஏழைகள், நோயாளிகள் போன்ற நலிவுற்ற மக்களுடன் கூட இருந்து இறை அன்பை அவர்கள் அனுபவிக்க தன்னாலான பணியை செய்து வந்தார் என நாம் அறிகின்றோம். தனது இப்பணியை தொடர்ந்து செயற்படுத்த தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் எதிர்கால நோக்கில்லாத இளம் பெண்களுக்கு நற்சிந்தனையைக் கொடுத்து தனது பணியில் ஆர்வம்கொள்ள வைத்து அவர்களுள் சிலரை தம்முடன் இணைத்து தமது பணியைத் தொடர்ந்தார். இதன் விளைவாக சிறுவர்களுக்கான பாதுகாப்பு, நோயாளிகளுக்கான பராமரிப்பு குடும்பத்தரிசிப்புக்கள் மூலம் குடும்பங்களில் நல்லுறவை ஏற்படுத்துவது போன்ற பணிகளை முன்னெடுத்து வந்தார். காலப்போக்கில் இறைவனின் சித்தத்தை தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு இவ்வுலகில் வாழ்ந்து எமது மீட்புக்கு வழிகோலிய திருக்குடும்பத்தின் மாதிரியை முன்வைத்துப் பணியாற்ற திருக்குடும்ப சபையை நிறுவினார். இன்று திருக்குடும்ப சபையினர் பல அழைப்புக்களால் உலகின் பல நாடுகளிலும் பரந்து பணிபுரிந்து வருகின்றனர்.

இவ் அழைப்புக்களில் திருமடசார்பற்ற அழைப்பினைக் கொஞ்சம் ஆழமாக நோக்குவோம். இதன் உறுப்பினர்கள் தங்களது அர்ப்பணத்தை உலகின் மத்தியில் வாழ்ந்து முழுச்சபையுடனும் ஒன்றித்திருக்கின்றார்கள். இவர்கள் மடங்களின் ஒழுங்குவிதிகள் கோட்பாடுகட்கு உட்பட்டு வாழ்பவர்கள் அல்லர். மாறாக பொதுநிலையினராக தாம் வாழும் சூழலில், சமூதாயப் பண்பாடு, கலாசார மதிப்பீகளில் தமக்கே உரித்தான ஒழுங்குகளுக்கேற்ப கிறிஸ்துவின் மனிதவதார மறைபொருளை வாழ்பவர்கள். ஏனையோரைப்போன்று தம் வாழ்க்கைக்கு உதவியான தொழில்துறைகள் ஊதியம் அளிக்கும் பணிகளை மேற்கொள்பவர்கள்.

இறைவனின் அழைப்புக்கு 'ஆம்' என்று பதில் அளித்து வாழ்வால் முதிர்ச்சிபெற்ற கிறீஸ்தவப் பெண்களாக சபையின் நோக்குக்கு இணைய விசுவாசத்தையும் அன்பையும் வாழ்வில் ஆழப்படுத்தி அதை மக்களிடையே பரப்பி வாழ்ந்து வருபவர்கள். இவர்கள் அர்ப்பணிக்கப்பட்ட ஒருவித அழைப்பைப் பெற்ற பெண்கள் என்று எவராலும் அறியப்படமாட்டார்கள். மாவுக்குள் மறைந்திருக்கும் 'புளிக்காரம்' போல் வாழ்ந்து இறையரசின் பண்புகளை மக்களிடையே பகிர்ந்து வாழும் பணியில் பங்குகொள்வார்கள். இதுவே இவர்களின் அழைத்தலின் "தனித்துவமும மகத்துவமும்" ஆகும். கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் வாழவேண்டிய நற்செய்தி அறிவுரைகளை கீழ்ப்படிதல், விரத்தத்துவம், ஏழ்மை என்னும் வாக்குறுதிகளின் வழியாக வாழ்ந்து வருபவர்கள். உலகிலே குடும்பங்களில், தொழில் நிலையங்களில், பங்குத்தளங்களில் எங்கெல்லாம் வாழ்வார்களோ அங்கெல்லாம் தமது அர்ப்பணத்தை மறைவாக வாழ்ந்து மக்களுக்கு நன்மை செய்து வருவார்கள். பங்குத்தளங்களிலும் திருச்சபைப் பணிகளிலும் ஓரளவு ஈடுபாட்டுடன் பொதுநிலையினருக்குரிய பொறுப்புடன் பணி செய்கிறார்கள்.

இத்தகைய அழைத்தலைக்கொண்ட பெண்கள் சபையில் ஆரம்ப காலத்திலிருந்தே வாழ்ந்து வருகின்றார்கள். காலப்போக்கில் வரலாற்று வளர்ச்சியில் திருச்சபையும் இவ்வழைத்தலை தனித்துவமாக்கி அதற்கேற்ப ஒழுங்குகள், அமைப்பு முறைகளை வகுத்து இன்று ஆபிரிக்கா, பிறேசில், கனடா, இலங்கை, ஆர்ஜென்ரீனா, ஸ்பெயின், பிரான்ஸ், அயர்லாந்து, இத்தாலி, பெல்ஜியம், போலாந்து போன்ற நாடுகளில் இக்குழுவினர் இறைபணியில் ஈடுபட்டுள்ளனர். 1988 ஆண்டு மாசி மாதம் திருக்குடும்ப சபையின் திருமடசார்பற்ற குழு பிரான்ஸ் - போர்டோ அதிமேற்ராசனத்தின்கீழ் திருச்சபையால் அங்கீகரிக்கப் - பட்டுள்ளது. சபையின் வரலாற்று வளர்ச்சியில் இது மிக மகிழ்ச்சிக்குரிய சம்பவமாகும்.

மாறும் உலகின் தன்மைகளுக்கேற்ப தேவைகளை இனம் கண்டு குடும்ப வாழ்விலும், நலிவுற்ற மக்கள் மத்தியிலும் தனது மனப்போக்கிற்கேற்ப அர்ப்பணிப்புடனும், ஆர்வத்துடனும், பணியாற்ற திருக்குடும்ப திருமடசார்பற்ற குழுவினரை நல்ல பிதா பீற்றர் பியன்வெனு நோஆய் வழிநடாத்தி வருகின்றார். எம் வாழ்வின் ஒவ்வொரு நிலைகளிலும் ஒவ்வொரு பணிகளிலும் எம் சிந்தனை மனப்போக்கு அனைத்திலும் இன்றுகூட எமது நல்ல பிதா எம்மோடுகூட இருந்து வழிநடாத்துவதை நாம் உணருகின்றோம். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## பிரபஞ்சத்தின் இறைவன்

அருட்சகோதரி மேரி றுவீனா
திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்.

எங்கேயிருந்து வந்தது, எப்படி வந்தது என்று தெரியாத ஒரு சிறிய விதையிலிருந்து பிரபஞ்சம் உருவாகியது. பிரபஞ்சம் உருவாகும்பொழுது நானும் (ஒவ்வொரு மனிதரும்) அந்த வித்துக்குள் ஒருவனாக - ஒருத்தியாக உண்டாக்கப்பட்டேன் என்றால் நான் ஒரு தனியாள் அல்ல. நானும் (ஒவ்வொரு மனிதனும்) பிரபஞ்சத்தின் ஒரு பகுதி. எனவே நான் பிரபஞ்சத்தோடும், அனைத்து உயிர்களோடும் இணைந்து வாழும்பொழுதுதான் இறைவனைக் காணமுடியும்,

அனைத்தோடும் இணைந்த இறைவனைப் புகழவேண்டும், இறைவனுக்கு நன்றி கூறவேண்டும். பிரபஞ்சம் நாளாந்தம் எவ்விதம் புதிய புதிய படைப்புக்களை உருவாக்கி, வளர்ச்சியடைந்துகொன்டிருக்கின்றதோ அதேபோல் நானும் (மனிதர்கள் ஒவ்வொருவரும்) புதிய புதிய படைப்புகளை உருவாக்கி இந்தப் பிரபஞ்சத்தை வளர்ச்சிடையச் செய்யவேண்டும். அத்தோடு நானும் வளர்ச்சியடைய எனக்கும் பங்கு உண்டு. ஏனெனில் படைப்பில் நானும் ஒரு பகுதி. படைப்போடு இனைந்து செயற்படவேண்டும்.

சா. ஞானம் 11-21 கூறுகின்றது, "உமது மாபெரும் ஆற்றலை எப்போதுமே நீர் காட்ட இயலும்". இறைவனுடைய அற்புதமான மாபெரும் செயலைத் தியானிக்கும்போது, இறைவனுடைய ஞானத்தையும் வல்லமையையும் அளவற்ற அன்பையும், நன்மைத்தனத்தையும் காணக்கூடுமாக இருக்கின்றது. தனது கருவறையில் ஒரு குழந்தையை உருவாக்கிப் பிறப்பிக்கின்ற ஒரு அன்புத்தாயகவும், அனைத்தையும் பராமரித்துப் பாதுகாத்து வளர்சியடையச் செய்கின்ற ஒரு அன்புத் தந்தையாகவும் நான் அவரைப் பார்க்கிறேன். இன்னும் இறைவன் தெய்வீகத்தைப் பிறப்பிக்கும் சக்தியாகவும் இருக்கிறார். உலகம், பிரபஞ்சம் அனைத்தும் திரித்துவ உறவிலே சக்தியைப் பெறுகிறது. இறைவன் அன்பின் ஆழத்தில் இருந்து செயற்படுகிறார். அனைத்தையும் கடந்த இறைவன் அணுகமுடியாதவர், அண்மையிலுள்ளவர், வித்தியாசமான உறவுகளை ஏற்படுத்துகின்றவர். அன்பின் சக்தியாக இருக்கிறார்.

எல்லோரும் இறைவனின் மக்கள். இறைவனிலேயே அனைத்தும் தோன்றி வளர்ந்து வாழ்கின்றது. எனவே இந்த பிரபஞ்சத்தை ஆழமாக உற்றுநோக்கும்போது, காலம் தவறாது, நேரம் நோக்காது, மகிழ்ச்சியாக செழிப்பாக ஒன்றுடன் ஒன்று இணைந்து தங்கள் கடமைகளைச் செய்துகொண்டு வருகின்றன. இவற்றைப் பார்க்கும்பொழுது இறைவன் எனக்குள்ளேயும், பிரபஞ்சத்தின் உள்ளேயும் இருந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறார் என்பதை உணரமுடிகின்றது.

பிரபஞ்சம் வேகமாக வளர்சியடைந்துகொண்டு போகின்றது. பிரபஞ்சமும் உயிர்வாழும் அனைத்தும் தனக்காக வாழவில்லை. மற்றவர்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கின்றன. மற்றவர்களும் சுதந்திரமாக அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டேயிருக்கின்றார்கள். மத். 6:26ல் "வானத்துப் பறவைகளை நோக்குங்கள். அவை விதைப்பதும் இல்லை, அறுப்பதுமில்லை, களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை." எனக் கூறப்படுகின்றது. பறவைகள் மரங்களில் உள்ள கனிகளை உண்ண வரும்பொழுது தனியாக வந்து உண்பதில்லை. மற்றப் பறவைகளையும் அழைத்துக்கொண்டு வந்துதான் உண்கின்றன. இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஒற்றுமையையும், பகிர்தலையும் இன்னும் மற்றவனும் வாழவேண்டும் வளரவேண்டும் என்ற மனநிலையையும் நாம் பார்க்கிறோம்.

சாயலாகப் புடைக்கப்பட்ட அதி சிறந்த படைப்பு நாம்தான் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற மனிதர்களாகிய எங்களைப்பற்றி நாங்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். வேகமாக வளர்ச்சியடைந்துகொண்டிருக்கும் பிரபஞ்சத்தோடு எமது வளர்ச்சி எவ்விதம் அமைந்திருக்கிறது? நானும் வளர்ச்சியடைந்து மற்றவர்களையும் வளர்ச்சியடையச் செய்கின்றேனா? மற்றவர்களுடைய வளர்ச்சியிலே மகிழ்ச்சியடைகின்றேனா? பிரபஞ்சம் தனக்காக வாழவில்லை. மற்றவனுக்கு தன்னைக் கொடுக்கிறது. நான் எனக்காக வாழ்கின்றேனா? என்னைக் கையளித்துப் பகிர்ந்து வாழ்கின்றேனா? பகிர்ந்து வாழ்கின்ற மனநிலை என்னிடத்தில் உண்டா? என்னுள்ளும் பிரபஞ்சத்தினுள்ளும், அனைத்து உயிர்களிலும் வாழும் இறைவனை நான் தெளிவாகக் கண்டுகொள்ள இவையனைத்தோடும் நான் இணைந்து அன்பு உறவுகொண்டு வாழும்போதுதான் இறைவனை காணமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## வாகரை ஆயரை வாழ்த்துகின்றது!

### திருமலை மட்டுநகர் ஆயருக்கு வாகரை வாணன் வழங்கும் வாழ்த்து



வாகரை மண்
எங்கள் ஆயரை
வாழ்த்தி வரவேற்கிறது.
தாகத்திற்குக் கிடைத்த
தண்ணீர் போன்றது
தங்கள் தரிசனம்.
அதனால்தான் இன்று
ஏகத்திற்குக்கூட்டம்
இதயம் மகிழ்கின்றது.

ஆயர் வரவை அறிந்து
ஆறும் கடலும்
ஆனந்தக்
கூத்தாடுகின்றன.
வாய் பேசா மரம்
செடிகளும்
வளைந்து
வரவேற்கின்றன.
இயற்கைக்கும் இன்று
இனியதொரு நாள்!

முப்பதாண்டுகள்
இந்த மண்ணில் தாங்கள்
ஆற்றிய பணி
முத்திரை பதித்தது.
மக்களுக்கும் இது
முழுமன நிறைவைத்
தந்தது.

சமயப் பணியைவிடத்
தாங்கள் ஆற்றிய
சமரசப் பணி
மற்றுமொரு சரித்திரம்.
சண்டை சச்சரவு மலிந்த
சமூகத்திற்கு அது ஒரு
சஞ்சீவி.
சுனாமிக்குள் மக்கள்
சுருண்டு கிடந்தவேளை
தாங்களும்
அருள்தந்தை சிறியும்
காட்டிய சுறுசுறுப்புத்தான்
அனைவருக்கும்
சொர்க்கம் தந்தது.
உள்நாட்டுப் போர்
உக்கிரம் அடைந்த
காலத்தில்தான்
ஆயர் தாங்கள் இங்கு
அடியெடுத்து வைத்தீர்கள்.
அந்நிய பூமி
அதன்பின் தங்கள்
அன்னை பூமியானது.

புண்ணியம் செய்தவர்கள்
நாங்கள் பூரிக்கின்றோம்.
அன்றிருந்து இன்றுவரை
ஆண்டகை ஆற்றிய பணிக்கு
நாங்கள் நன்றி சொல்லும்
நல்ல நாள் இது!

வாகரைக் கத்தோலிக்கம்
வல்வெட்டித்துறை தந்த
கொடை.
அந்தோனிப்பிள்ளை என்னும்
அந்தக் கத்தோலிக்கர்
தந்த வழிபாடு இது.
அன்னை மரியாளும்
அதன்பின் புனித இராயப்பரும்
அருள்பொழிந்த கொட்டில்.
1910ம் ஆண்டில் அவரது
தனயன் அமரர்
பேதுருப்பிள்ளை
உடையாரால் ஆலயமானது!
நூறு ஆண்டுகளைத்
தாண்டியுள்ள
இந்த ஆலயத்திற்கு
சுனாமியில்
ஊறு ஏற்பட்டபோது அதனை
உயிர்த்தெழச்செய்த தங்களை
எங்கள் உள்ளம்
எப்படி மறக்கும்?
வடக்கில் இருந்து வந்த
வாகரைக் கத்தோலிக்கத்திற்கு
வாழ்வு தந்த தாங்களும்
வடக்கில் இருந்து
வந்தவர்தான்.
அதனால்தான் வாகரை இன்று
வடக்கைப் போற்றுகின்றது.
நீடு வாழ்க தாங்கள்!
நிகரில்லாத் தங்கள் பணி
கோணமாமலையிலும்
கொடிகட்டிப் பறக்கட்டும்!

## முருங்கன் ஜோா பாலாஜியின் கவிதைகள்

### பாடல்

வேற்று மொழிமீது ஒன்றும் வெறுப்பு கிடையாது.
இருந்தும் அதிகாலை தேநீர் கடைகளில்
இன்னுமொரு மொழி பாடல்கள் ஒலிப்பது வியப்பாய்த்தான்!
'விடியல்' தலைப்பிட்டு எழுதிய கவிதைகளும்
ஏனோ ஞாபகத்திற்கு!

### சந்திரமதிகள்

அரிச்சந்திரனின் சந்திரமதியாய்
ஆரம்பிக்கின்றது வாழ்க்கை ஆரவாரமாய்.
முடிகிறது பெண்ணின் வாழ்க்கை அவலமாய் - அவமாய்.
அடுக்களைதோறும் அந்தணன் வீட்டு சந்திரமதிகள்!

### போராட்டம்

வீட்டின் எல்லா அறைகளையும்
கலகலப்பாக்கிய என் தம்பி
வரவேற்பறையில் மட்டும் இன்று புகைப்படமாக
இதயத்தில் போராட்டம்
என்றும் நடந்தபடி!

## ரோபோப் பெண்



பாரினில் பூத்த புதுமலராய்
பாரதியின் புதுமைப் பெண்ணாய்
பார்க்கும் இடமெல்லாம்
புவியில் மாந்தர் முகங்கள்.
பெண் இவளின் பிறப்பின்
அடையாளப் பருவமதை
பவ்வியமாய் கடந்த பின்பும்
பள்ளியிலே தன் பாடத்தில்
முதலிடமாய்......
கச்சிதமாய் பள்ளிப் பருவமதை
முடித்துவிட்டாள்.
பாரதியின் சட்டம் படிக்கவும்
பட்டம் பெறவும்
பல்கலைக்கழகம் சென்றாளோ?
இத்தனையும் இயல்பாகவே
இயந்திரமாய்
தன் சுகவாழ்வு இல்லறமதை
இன்பமாக வாழ்கின்றாள்.
இன்றைய இலக்கியமாய்
இரவுகளிலும் வெளிச்சமாக
இப்புவனமெங்கும் இயந்திரமாய்
இயங்குகின்றாள்
புதுமையின் ரோபோப் பெண்

*பி. ஜோவ் பிரைவின் துரம், தாழ்வுபாடு.*

# சிறுகதை

கி.டெலாறோஸ், போசவாஸ் நகர், தோட்டவெளி.

## தர்மம் தலை காக்கும்

வழக்கம்போல் இரவு ஒன்பது மணிக்கு அந்தப்பிச்சைக்காரன் வழமையான அந்த நடைபாதையில் தான் கொண்டுவந்த கார்ப்போட் மட்டைகளைப் பரப்பி அதன்மேல் ஒரு அழுக்குத் துணியையும் விரித்துவிட்டுப் படுத்தான். இன்று நேற்றல்ல பல காலமாகவே அதுதான் அவனுடைய படுக்கையறை. காலை 6.00 மணிவரை சுகமான தூக்கம் அவனுக்கு. அருகில் உள்ள நெடுஞ்சாலையில் பேரிரைச்சலுடன் செல்லும் வாகனங்களின் ஒலியின் ஆதிக்கம்கூட அவனுக்குத் தெரியாது. அவ்வளவு சுகமான தூக்கம். நாட்டை ஆளும் ஒரு அரசனுக்கோ, அல்லது ஒரு பெரும் செல்வந்தனுக்கோகூட இரவில் இப்படி நிம்மதியாக தூங்க முடியாது. தலை நிறைய சிந்தனைகள், கவலைகள் பாரமாக இருக்கும்.

குளிர் வாடை வீசத் தொடங்கியது. தனது மூட்டைக்குள் இருந்து யாரோ கொடுத்த சிவப்புக் கம்பளித்துணியை எடுத்துப் போர்த்திக்கொண்டான். விடிந்ததும் நடைபாதையில் தினம் போவோரும், வருவோரும் தங்கள் வசம் இருக்கும் சில்லறைகளை அவன்முன் போட்டுவிட்டுப் போவார்கள். அவன் அந்தச் சில்லறைகளை பக்கத்தில் இருக்கும் சாப்பாட்டுக் கடையில் கொடுத்து அதற்கு உணவு வாங்கிச் சாப்பிடுவான்.

அந்தச் சாப்பாட்டுக் கடையின் கூப்பிடு தூரத்தில்தான் ராதாவும் அவள் கணவன் அமீரும் இருந்தார்கள். இருவரும் ஒரு கம்பனியில் உயர் பதவியில் இருந்தார்கள். அவர்களுக்கு 5 வயது மகள் ரோகினியும் இருந்தாள். ராதாவும் அவள் கணவனும் தங்கள் காரில் போகும்போது அந்தப் பிச்சைக்காரனைத் தாண்டிப் போவார்கள். சில சமயம் அந்தச் சாப்பாட்டுக் கடைக்குச் சாப்பிட வருவார்கள். அவர்களிடம் வந்து ஏதும் கேட்டு கைகட்டி நிற்பான். அமீரும் இருக்கும் சில்லறைகளை அவனுக்குப் போட்டு விடுவான். ஆனால் அவன் மனைவி இதற்கு நேர் எதிர். பிச்சைக்காரர்களைக் கண்டால் அறவே பிடிக்காது. ஏனோ ஒருவித வெறுப்புணர்ச்சி மேலோங்கி நிற்கும்.

அன்றொரு நாள் ராதாவிற்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. அவளின் பெற்றோர்தான் பேசினார்கள். ராதா உன் தங்கைக்கு கல்யாணம் நிச்சயமாகிவிட்டது, கல்யாணத்திற்கு இரு தினங்களுக்கு முன்னமே கட்டாயம் வந்துவிடு. உன் கணவரையும் லீவுபோடச் சொல்லிக் கூட்டிவா" என்று அறிவித்துவிட்டு போனை வைத்தார்கள்.

குறித்த நாளிற்கு முன்னமாக இரு தினங்கள் விடுமுறையெடுத்து இருவரும் தங்கள் மகளுடன் புறப்படத் தயாரானார்கள்.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# கொஞ்சம் சிரிங்க

பொலிஸ் :- அம்மா, உங்க புருஷனைக் காணவில்லை என்று சொல்கின்றீர்கள் ஏதாவது அங்க அடையாளங்கள் சொல்லுங்களேன்.
மனைவி :- நெற்றியிலே அகப்பையாலே அடிச்ச வீக்கம் இருக்கும். முதுகிலும் கையிலும் கரண்டியாலே சூடு வைத்த தழும்பு இருக்கும்.

........................................

காதலி :- உங்க போன் அழகாக இருக்கு எங்க வாங்கினிங்க?
காதலன் :- ஓட்டப்பந்தயத்திலே
காதலி :- எத்தனை பேர் கலந்துக்கிட்டாங்கா?
காதலன் :- போன் சொந்தக்காரன், பொலிஸ் அப்புறம் நான்

*இ. பற்றீசியா பீரிஸ், 8ம் வட்டாரம், வங்காலை.*

ஒருவர் :- ஏங்க இவ்வளவு பழைய செருப்ப போட்டு இருக்கிங்க
மற்றவர் :- என்ன பன்னுறது! இது ஆடி மாசமாச்சே! ஆவணியிலே மூன்று கல்யாணம் இருக்கு அப்ப மாத்திக்குவன்.

*இ. யஸ்ரின் யசறாஷ், மடு.*

பொலிஸ் :- திருடன் பீரோ சாவியைக் கேட்டு உங்க மனைவிய்ய அடிக்கும்போது நீங்க என்ன பண்ணினீங்க?
மற்றவர் :- அந்த சந்தோஷத்தை வார்த்தையால் விவரிக்க முடியாது சார்! - *இ. யசோ, உயிலங்குளம்.*

நேர்ஸ் :- நீங்க இண்டைக்கு டிஸ்சார்ஜ் ஆகிறீங்க உடம்பை பாத்துக்குங்க ............!
நோயாளி :- "ம்! சரி ....... உடம்பை காட்டுங்க .........'

*சா. டினோஸ் கிறிஸ்ரி, பறப்பாங்கண்டல்.*

கமலா :- ஏன் கோழி முட்டை போடுகிறது.
விமலா :- அதற்கு ஒன்று இரண்டு போட தெரியாததால் முட்டை போடுகின்றது.

*எஸ். டென்சியா பெரேரா, 8ம் வட்.ரம், பேசாலை*

# மன்னா விளம்பரப் பலகை

"ஒவ்வொரு நாளின் முடிவிலும் உன் ஆயுளின் ஒரு நாள் குறைகிறது என்பதைப் புரிந்துகொள்"
*வி. ஜெஸ்மி யூலியற், திருக்குடும்ப கன்னியர் மடம், நானாட்டான்.*

"உன் தேடல்களை உனக்குள் தேடிக்கொள். நிம்மதியின் நிஜங்கள் நீதான் எனப் புரிந்துகொள்வாய்"
*எஸ்.மேரி வித்தியா, திரு.கன்னியர் மடம், நானாட்டான்.*

"உண்மைகள் யாவற்றையும் நீ சொல்ல வேண்டியதில்லை. ஆனால் நீ சொல்வது யாவும் உண்மையாக இருக்கட்டும்"
*எஸ். செலஸ்ரீனா, திரு.கன்னியர் மடம், நானாட்டான்.*

"சேமித்துவை அவமானங்களை! செலவு செய் சோர்வுகளை. திரும்பப்படி தவறுகளை"
*இ. றெசில்டா பிகிறாடோ, திரு.கன்.மடம், நானாட்டான்.*


"முட்களில் மோதிக் கிழியாதவனுக்கு பூக்களைத் தடவும் தகுதி கிடையாது"
*எஸ். மேரி டிசாந்தினி, திரு.கன்னியர் மடம், நானாட்டான்.*

"அடங்கிவிடாத அச்சமும் தாமதமும் உன்னை அடைத்துவிடும் இரு அடைப்புக்குறிகள்"
*எஸ். மேரி கிறிஸ்ரா, திருக்குடும்ப கன்னியர் மடம், நானாட்டான்.*

"நல்லவர் ஒரு தீயசெயலைச் செய்தாலுமோ தீயவர் ஒரு நல்ல செயலைச் செய்தாலுமோ பிறரால் இரண்டுமே கண்டுகொள்ளப்படுவதில்லை"
*கே. றெபேக்காள், திரு. கன்னியர் மடம், நானாட்டான்.*

வாழ்வதும் வீழ்வதும் அவரவர் கையிலே உள்ளது. எவன் ஒருவன் தன் வாழ்க்கையை நேசிக்கின்றானோ அவன் வாழ்க்கையில் வீழ்ந்தாலும் எழுந்து விடுகிறான்.
*யே. ஆன் சிந்துஜா, பொன்தீவுகண்டல்.*

## சிந்தனைக்கு சில துளிகள்



- படகு கரையில் இருக்கும்வரை பாதுகாப்பாகத்தான் இருக்கும். ஆனால் படகு கரையில் இருப்பதற்கல்ல பயணம் செய்வதற்கு.
- சிங்கத்தைப்போல நெஞ்சுரம் இருந்தால் மட்டும் போதாது. இந்தக் காலத்தில் கொஞ்சம் நரியின் தந்திரமும் தெரிந்திருக்க வேண்டும்.
- ஒரு மரத்தை வெட்ட எட்டு மணி நேரம் உங்களுக்கு ஒதுக்கப்பட்டால் ஆறு மணி நேரம் கத்தியைத் தீட்டுங்கள்.
- புலன்களுக்கு இரையாகும் மனிதன் சமுதாயத்தின் அச்சுப்பிழை.
- உங்கள் பலவீனம் என்ன என்பதை உங்கள் எதிரிகள் அறிவதற்கு முன்னால் நீங்கள் தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள்.
- பாதையைத் தேடிக்கொள்ளுங்கள். கிடைக்காவிட்டால் நீங்களே ஒரு பாதையை வகுத்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

— ஆங்கில மூலம் —

தொடர் கட்டுரை

அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குருஸ் FSC

அத்தியாயம் – 20

தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.

## புனிதத் தன்மையின் ஓர் இரகசியம்

“நான் உங்களுக்கு மகிழ்ச்சியின் இரகசியத்தை வெளிப்படுத்தப்போகிறேன். ஒவ்வொரு நாளும் ஒரு ஐந்து நிமிடங்கள் உங்கள் எண்ணங்களை அடக்கி, எல்லா புலன்களுக்கும் உங்கள் கண்களை மூடி பூமியின் எல்லா ஒலிகளுக்கும் உங்கள் காதுகளை மூடுவீர்களானால் தூய ஆவியின் ஆலயமான தூய்மையான ஆன்மாவுக்குள் புகலிடம் பெற்று அங்கே தூய ஆவியுடன் பேசமுடியும்.

சொல்லுங்கள்:-

ஓ தூய ஆவியே, என் ஆன்மாவின் அன்பே
நான் உம்மை ஆராதிக்கின்றேன்.
எனக்கு அறிவூட்டி என்னை வழிநடத்தும்
என்னைத் திடப்படுத்தி எனக்கு ஆறுதலளியும்.
நான் என்ன செய்ய வேண்டும் என்று
எனக்குச் சொல்லும்.
உமது கட்டளைகளை எனக்குத் தாரும்.
நீர் விரும்பியவற்றிற்கெல்லாம் என்னை அர்ப்பணித்து
எனக்குச் சம்பவிக்க வேண்டியவைகளில்
நீர் அனுமதித்ததை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்.
உமது விருப்பத்தை மட்டும் எனக்குத் தெரியப் பண்ணும் -
ஆமென்.

இதை நீங்கள் நாளாந்தம் செய்து வந்தால் உங்களுடைய வாழ்வு ஆனந்தமாகவும், அமைதியாகவும் கடந்துசெல்லும். இடையூறுகளுக்கு மத்தியில் ஆறுதல் பெருகும். துன்பங்களைத் தாங்ககூடிய ஆற்றலும் அருள் உதவியும் இறுதியில் விண்ணக இன்பமும் நீங்கள் பெறுவீர்கள்.

“தூய ஆவியிடம் கேட்கும் இந்த தாழ்மையான வேண்டுதலே புனிதத் தன்மையின் இரகசியம்” கார்டினல் மேசியர்.



ஒவ்வொரு மறுநாளைக்கும் நம்பிக்கை உண்டு

அமைதியான வேண்டுதலின்போது ஒவ்வொரு சுமைக்கும் வலிமை கிடைக்கின்றது. நாள் முழுதும் தைரியம் உண்டாகிறது. ஒவ்வொரு மறுநாளைக்கும் நம்பிக்கை உண்டாகிறது. வழிநெடுக உதவி கிடைக்கின்றது. அளவு கடந்த சமாதானம் உண்டாகின்றது. எல்லாத் தடுமாற்றங்களும் சீராகி விடுகின்றது. ஒவ்வொரு சந்தேகத்துக்கும் விடை கிடைக்கின்றது. பாதுகாப்பில் ஆறுதல் கிடைக்கின்றது. ஒவ்வொரு புதிய வேளைக்கும் அவருடைய பாதுகாப்பும் உண்மையும் ஆசீரும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ■

## உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் போட்டி – 110

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

87ம் திருப்பாடல் 52 திருவசனங்களைக் கொண்டிருக்கின்றது. நான்கு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதி நாடு துன்பப்பட்டபோது ஏத்தானால் பாடப்பட்டவை. இரண்டாவது பகுதி தாவீதரசனுக்கு இறைவன் அளித்த வல்லமைகளைப்பற்றிப் பாடப்படுகின்ற திருவசனங்கள். மூன்றாவது பகுதி தாவீதரசன் இறைவனால் கைவிடப்பட்டு தோல்விகளை எதிர்கொள்ள நேர்ந்தபோது பாடப்பட்ட புலம்பல். நான்காவது பகுதி இத்துன்பங்களிலிருந்து விடுதலை வேண்டிப் பாடப்பட்ட பாடல்கள். இவ்விதமாக ஒவ்வொரு பாடல்களும் ஒவ்வொரு நோக்கத்துக்காகப் பாடப்பட்டுள்ளன. 90ம் திருப்பாடல் மனிதரின் நிலையாமை குறித்து மோயீசன் பாடிய பாடலாகும். 91ம் பாடல் இறைவன் நம்மைப் பாதுகாப்பவர் எனப் புகழ்ந்து பாடப்பட்ட பாடலாகவும் 92ம் பாடல் ஓய்வு நாளில் இறைவனைப் புகழ்ந்து பாடும் பாடலாகவும் அமைந்துள்ளன.

**இனி எமது வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் 89ம் திருப்பாடலில் இருந்து 95ஆம் திருப்பாடல் வரையுள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.**

1. வன்மைமிக்கது எது? வலிமை கொண்டது எது? உயர்ந்து நிற்பது எது? 2. இறைவன் வீரன் ஒருவனுக்கு வலிமை அளித்தார். மக்களினின்று தேர்ந்தெடுக்கப்பட்டவனை உயர்த்தினார். திருத் தைலத்தால் அவனுக்குத் திருப்பொழிவு செய்தார்? அவன் யார்? 3. கடவுள் தாவீதரசன் உடனான தனது வாக்குறுதிகளை எதன்மீது ஆணையிட்டுக் கூறுகின்றார்? 4. கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்ததால் தாவீது மன்னனுக்கு வந்த தீமைகள் எவை? 5. 90ம் சங்கீதம் மோயீசன் இறைவனை நோக்கி வேண்டிய மன்றாட்டுக்கள். இவை எப்போது பாடப்பட்டவை? 6. “தம் தூதர்களுக்கு அவர் கட்டளையிடுவார். உம் கால்கள் கல்லின்மேல் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளில் உம்மைத் தாங்கிக்கொள்வர்” இவ்வாக்கியம் புதிய ஏற்பாட்டில் ஒரு முறை உச்சரிக்கப்படுகிறது. யாரால்? யாருக்கு? எப்போது? எங்கே?
7. ஸெனோன் நாடு எந்த மரத்துக்கு பேர் பெற்றது?
08. ஆண்டவரின் இல்லத்தை என்றென்றும் அழகு செய்வது எது? 09. என் அடி சறுக்குகின்றது என்று நான் சொன்னபோது என்னைத் தாங்கியது எது?
10. நாற்பது ஆண்டளவாய் அந்தத் தலைமுறை இறைவனுக்கு வெறுப்பூட்டியதால் கடவுள் சொல்வது என்ன?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 108 இற்கான கேள்விகளுக்கு 20 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

மா. மேரி பவுஸ்ரீனா, வட்டுப்பித்தான்மடு, உயிலங்குளம்.

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. பி. நிதுஷா, தோட்டவெளி, தாராபுரம்.
2. யோ. மி. டர்ஷிக்கா, நானாட்டான்.
3. எஸ். பிரான்சிஸ் பீரிஸ், அரிப்பு, சிலாபத்துறை.
4. ஜே. ஐ. கிஷோலா ரொட்ரிகோ.
5. எஸ். நிஷாந்தினி, தோட்டவெளி, தாராபுரம்.
6. எ. மேரி டயானா லெம்பேட், வங்காலை, மன்னார்.
7. அ. டெஸ்மன் வெற்றிராஜ், ஆவணம், நானாட்டான்.
8. வி. ஜீன் சுஜாட், மடுமாதா சிறியகுருமடம், மன்னார்.
9. ச. சகாய றாஜினி, அரிப்பு, சிலாவத்துறை.
10. வி. டெயான்சி, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.

## அதிர்வுகள் ........ 10ஆம் பக்கத் தொடர்ச்சி

இவ்வாறு பேசுகின்ற வார்த்தைகளை ஒருசில அகராதிகளில் தேடியும் கிடைக்கவில்லை. அதனால் யாழ். நூலகம் சென்று இன்னும் சில பென்னம் பெரிய அகராதிகளைப் புரட்டிப் பார்க்கவேண்டி இருந்தது. அவற்றில்கூட இவற்றைக் காணமுடியாமல் போனது ஆச்சரியத்தை அளித்தது. அதனால் அச்சொற்கள் சொல் ஆய்வாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. இச்சொற்களை இனி வரவிருக்கும் அகராதிகளில் சேர்ப்பதற்கான திட்டங்களை கலாசார திணைக்களத்தில் கையளிக்கும் முயற்சி எந்தளவிற்கு கைகூடுமோ தெரியவில்லை! எப்படிப் பார்த்தாலும், அர்த்தங்கள் பிறந்த பிறகுதானே அகராதிகள் பிறந்தன. அந்த வகையில் நம் ‘கோபக்கனல் செந்தமிழ் பழஞ்சொற்கள்’ அகராதியில் இடம்பிடிப்பது நல்லது! அவ்வாறு அகராதிகளில் இடம்பிடிக்காமல் போனாலும் நம்மவர்கள், ‘வாய்மொழி மரபில்’ இதன் ‘மகிமை’ குன்றாமல் கட்டிக்காப்பார்கள் என்பதை அறுதியிட்டுக் கூறலாம்.

**‘புகைந்துகொண்டு திரியும் மனிதர்கள்’**

இன்னும், கோபத்தினால் ‘புகைந்துகொண்டு திரியும் மனிதர்கள்’ இருக்கிறார்கள் (‘கோபக்கனல் செந்தமிழ் பழஞ்சொற்கள்’, ‘புகைந்துகொண்டு திரியும் மனிதர்கள்’ போன்ற இச்சொற்றொடர்கள் நம் தயாரிப்புக்கள்தான். பிடித்திருக்கிறதா?) உறவுகளை முடித்துக்கொண்டு கோபப்பட்டவருடன் முகத்தில் முளிக்க முடியாமல், மறைந்து, பதுங்கித் திரிகின்ற மனிதர்கள் இவர்கள்! கோபம் வருகிறது, அது வரத்தான் வேண்டும், அதனை வெளியேற்றத்தான் வேண்டும். ஆனால், அதனை ஆரோக்கியமாக வெளியேற்ற – வெளிப்படுத்தக் கற்றுக்கொள்ளுங்களேன்!

**நல்ல மனிதனின் கோபம்!**

என்ன கோப உணர்வு சில வேளைகளில் ஈடுசெய்ய முடியாத அளவுக்கு இழப்பை ஏற்படுத்துகிறது என்பதுதான் கவலைக்குரியது. சொல்லுகிறார்கள் ஆத்திரம் (கோபம்) ‘அசிற்’ போன்றது. அது வைக்கப்படும் பாத்திரத்தையும் பாதிப்பதுடன் அது ஊற்றப்படும்போது எதன்மீது ஊற்றப்படுகிறதோ அதனையும் பாதித்து ஊற்றப்படும் இடத்தினையும் அழித்துவிடுகிறது.

அந்த வகையில், “ஒரு நல்ல மனிதனுடைய கோபம் ஒருசில கணங்களே நீடிக்கிறது; சராசரி மனிதனுடைய கோபம் ஒருநாள் நீடிக்கிறது; மிகச் சாதாரண மனிதனுடைய கோபம் ஒருகிழமை நீடிக்கிறது. ஒரு தீயவனுடைய கோபம் அவன் இறக்கும்வரை நீடிக்கிறது” என்றான் ஒரு மகான்.

அல்பெட் ஐன்ஸ்டின் என்பவர் ஓர் அறிவியல் மேதை என்பதுடன் வயலின் மீட்டுவதில் வல்லவர். ஒருமுறை விருந்தொன்றில் அல்பெட் ஐன்ஸ்டின் வயலின் இசைத்துக் கொண்டிருந்தார். அவ்வேளையில் கங்கேரி நாட்டைச் சேர்ந்த மிகப் பிரசித்திபெற்ற நகைச்சுவை நடிகர் பெரங்கமோல் நார் வந்தமர்ந்தார். அல்பெட் ஐன்ஸ்டின் மிகவும் உணர்வுபூர்வமாக வயலின் வாசித்துக்கொண்டிருந்தார். நகைச்சுவை நடிகரான பெரங்கமோல் நார் வயலின் இசையை இரசிக்காமல் தன் நண்பர்களுடன் அரட்டை அரங்கம் செய்துகொண்டிருந்தார். இதனைப் பார்த்த அல்பெட் ஐன்ஸ்டினுக்கு கடும் கோபம் வந்தது. வயலின் வாசிப்பதை நிறுத்திவிட்டு எழுந்து சென்று பெரங்கமோல் நாரிடம், “நான் வயலின் வாசிக்கும்போது நீங்கள் இப்படிச் சிரித்து இரசிப்பதைக் குழப்புகிறீர்களே... நீங்கள் நகைச்சுவையாய் நடிக்கும்போது நான் என்றைக்காவது சிரித்திருக்கிறேனா?” என ஒரு போடுபோட்டாராம். சும்மா கோபப்பட்டுக் கடுப்பாகி மற்றவர்கள் மீது எரிந்து, சீறிச் சினந்து விழாமல் அறிவினால் - அன்பினால் ஆத்திரத்தின்மீது ஆதிக்கம் செலுத்துங்கள். தொடரட்டும் உங்கள் போராட்டம்

(தொடர்ந்து அ...தி....ரு.....ம்......).

## தர்மம் தலை காக்கும்.......

12 ஆம் பக்கத் தொடர்ச்சி

காரைத் துடைத்து கல்யாணத்திற்கு வேண்டிய பொருட்களையும், உடுப்பையும் அவன் வைத்தான். இரவு உணவை முடித்துவிட்டு தூங்கிக்கொண்டிருக்கும் மகளையும் எழுப்பி அவசரமாக உடுப்புக்களை மாற்றினார்கள். இரவு பத்து மணியைத் தாண்டிக்கொண்டிருந்தது. அடை மழை தொடங்கியது. அந்தச்சமயம் நடைபாதையில் தூங்கிக் கொண்டிருந்த அந்தப்பிச்சைக்காரன் தனது காலடிக்குச் சமீபமாக சிலர் பேசிக்கொண்டுபோன சத்தத்தைக் கேட்டு விழித்தான். “தேசத்துரோகிகளடா இவன்கள். இவர்களின் கையை வெட்டினால்தான் சரி. இப்படியா பாதாளச் சாக்கடை மூடியை திருடுவது. மனிதர்கள் அல்லது வாகனங்கள் வந்தால் அதோ கதிதான்” என்று பேசியது அவன் காதில் விழுந்தது. ஓடிப்போய்ப் பார்த்தான் அந்தப் பிச்சைக்காரன். ரோட்டு தன் வாயை ஆவென திறந்தபடி அகன்றிருந்தது. உடனே அவன் சற்றுத் தொலைவில் போய் ரோட்டோரத்தில் தெரிந்த செடிகளின் கிளைகளைப் பிடுங்கி அக்கிடங்கிற்குள் போட்டு நட்டான். போதாதற்கு நீண்ட தடியையும் அதனுள் புதைத்துவிட்டுச் சென்றான்.

அதேநேரம் மனைவியையும், தன் மகள் ரோகினியையும் காரில் ஏற்றி கதவைச் சாத்திவிட்டு அமீர் காரை இயக்கினான். ராதாவின் சொந்த ஊருக்குப் போயாக வேண்டும். ஆறு மணித்தியால ஓட்டம். அந்தக் கார் புறப்பட்டு நெடுஞ் சாலையைத் தொட்டதும் அமீரின் கார் வேகத்தை பிடிக்கத் தொடங்கினான். ஒரு கார் வேகமாக வருவதை அவதானித்த அந்தப் பிச்சைக்காரன் நடைபாதையிலிருந்து சாலையின் நடுவே ஓடி வந்து நின்று தன் கையை அசைத்தான். ரோட்டின் நடுவே நின்று கையசைத்த அவனை அமீர் கண்டுவிட்டு பிரேக்கை அழுத்தி நிறுத்திவிட்டு, கதவின் கண்ணாடியை இறக்கிவிட்டு, “உனக்கு அவ்வளவு அவசரமா? கார் போனபின் ரோட்டை கடந்தாலென்ன?” என்று கோபித்தபடி ஏசினான். ராதாவும் எட்டிப் பார்த்தாள். ‘ஐயா! நீங்களா?’ என்றபடி அமீரை அடையாளம் கண்டுகொண்டான் பிச்சைக்காரன். ராதாவும் அவனை இனம் கண்டதும் கணவனை ஏசினாள். இப்படி நடுவீதியிலும் நிறுத்திப் பிச்சை கேட்கின்றான் என்று பொரிந்து தள்ளினாள்.

“அம்மா நான் பிச்சை கேட்க வரவில்லை. நீங்கள் போகும் பாதையில் பெரிய கிடங்கு இருக்கு. அதோ பாருங்கள் யாரோ சாக்கடை மூடியைத் திருடி விட்டார்கள்” என்றதும் அமீரும் ராதாவும் இறங்கிப் போய் பாரார்த்தார்கள். மூன்றடி நீளமும் அகலத்திலும் இருந்த அந்தப் பாரிய கிடங்கை பார்த்துத் திகைத்தார்கள். மரக்கிளைகளும், தடியும் கிடங்கின்மேல் தோற்றமளிப்பதைக் கண்ட அமீரும் ராதாவும் செய்வதறியாது அவனைப் பார்த்தனர். இதுவரை பிச்சைக்காரக் கோலத்தில் அவர்கள் கண்ணுக்கு தெரிந்த அவன் இப்போது தங்கள் உயிரைக் காக்க வந்த தெய்வத்தின் கோலத்தில் அவனைப் பார்த்தபடி நின்றார்கள். தான் செய்த தருமமே அவன் கோலத்தில் தன்னையும் தன் குடும்பத்தையும் காத்தது என்று அமீர் எண்ணிக்கொண்டான். தான் செய்தது தவறு என்று ராதா மனம் வருந்தி அவனிடம் மன்னிப்புக் கேட்டாள்.

## நீங்காத நினைவுகள்

### 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு — உதிர்வு



05 — 14

05 — 10

1953 **அருளானந்தம் அன்ரன்** 2010

**(சின்னக்கடை, மன்னார்.)**

அன்பின் வழிநின்று இறையன்பின் துணைகொண்டு
துன்பங்கள் பல தாங்கி எம் துயர் நீக்கப் போராடி - இன்று
தாகமாய் யாம் தேட நீ கானலாய் போனதேனோ.....!
எம் வாழ்வின் வறுமைக்காய் வருஷம் பல பாடுபட்டாய்
விடியலும் வரும் முன்பே நீ விடைபெற்றுச் சென்றுவிட்டாய்.
நெஞ்சம் வலிக்கிறது உன் நினைவில் ஈராண்டும் கடக்கிறது.
உன் கனவுக்கு உருக்கொடுக்க பிள்ளைகள் யாம் இருக்க
உன் தேடலுக்கு விடை கொடுக்க மனைவியும் இங்கிருக்க
ஏனப்பா விட்டுப்போனாய் ஏங்கி நாம் தவித்து நிற்க.....!
போன உயிர் திரும்பாது தெரிந்தும் நெஞ்சம் திருந்தாது
உம் உரு மறக்காது உம் நினைவு போகாது.

*உங்கள் நினைவில்:- மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.123

## இணைச்சட்டம் அதிகாரம் 12 முதல் 24 முடிய

உங்கள் விடைகளை நவம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 02 | | | | ★ | | 26 | | |
| | 08 | | ★ | | 29 | 04 | | | 28 |
| 06 | | 19 | | 14 | | | 07 | 17 | |
| | ★ | 36 | 33 | | 24 | | | | |
| | 16 | 27 | | ★ | 11 | | | | ★ |
| ★ | 25 | | | 03 | | 21 | ★ | | ★ |
| | | 15 | | 31 | | 10 | ★ | | 35 |
| 05 | | ★ | 23 | | | | 18 | | 32 |
| | | 09 | | ★ | 34 | 30 | | 22 | |
| | 12 | | | | 01 | 20 | ★ | | 13 |

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

2. அதைத் ................ விட அவனுக்கு உதவி செய்
3. பாளையத்திற்குள்ளே .......................க் கூடாது.
4. அவர்கள் உன்னை அழித்தொழிக்கும் மட்டும் .............. நுகத்தடியை உன் கழுத்தில் வைப்பர்.
5. உன் கடவுளாகிய ஆண்டவர்___பாளையத்துக்குள்ளே ................ வருகிறார்.
8. நான் அவனுக்கு ............ப் பொறுப்புத் தரவேண்டும் என்றார்.
12. அந்த இனம் கொடிய ................ கொண்டது.
18. உன் கடவுளாகிய ஆண்டவரே உன் ............... செல்வார்.
19. நீ உன் ................ மரத்தை அடித்து உதிர்க்கும்போது உதிராததைப் பறிக்காதே.
23. என் வார்த்தைகளை அவனுடைய .................. வைப்பேன்.
25. நீ மேற்கொள்ளும்___நீ ............... பெறும்படி உன் கடவுளாகிய ஆண்டவர் செய்வார்.
26. ஆனால் ................. அரிவாளை உனக்கு அடுத்திருப்பவனின் கதிர்களில் வைக்காதே.
30. அவர் உன்னைவிட்டு ................ மாட்டார்.
31. ..................யானதும் நீரில் குளித்து கதிரவன் மறைந்ததும் அவன் பாளையத்துக்குள் வரட்டும்.

### வலமிருந்து இடம்

1. அவனது ...................... ஆண்டவரால் ஆசி பெற்றது.
2. நீர் உமது ......... உறைவிடமாகிய ___ ஆசி வழங்குவீராக.
8. கற்களால் உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குப் ................ பீடம் கட்டுங்கள்.
9. இரத்தப்பழிக்காக அவன் ..................
10. ..................... செய்தவன் எவனும் அங்கே தப்பி ஓடும்படி சாலைகளை அமை.
13. உன் திராட்சைத் தோட்டத்தில் ................. விதைகளை விதைக்காதே
15. எனவே இப்பொழுது நீ இந்தப் .................. எழுது
16. போர் அடிக்கும் மாட்டின் ..................க் கட்டாதே.
21. நீதிபதிகள் ................. விசாரிப்பர்.
24. .................. வீட்டைக்கட்டி___ திரும்பிப் போகட்டும்.
35. என் சொற்கள் ................. யென இறங்கிடுக.

### மேலிருந்து கீழ்

2. உமது முன்னிலையில் ................ காட்டுபவன்.
4. உங்கள் .................. சோர்ந்து போக வேண்டாம்.
5. ஆண்டவர் ................... முதல்வனாக ஆக்குவாரே அன்றி கடையனாக ஆக்கமாட்டார்.
6. அவரது .................. அந்தந்த நாளில் கொடுத்து விடு.
7. இதனால் அவன் .................. இஸ்ராயேலிலிருந்து அற்றுப்போகாது.
10. உனக்கு அடுத்திருப்பவன்___ திரும்பக் ................
11. ஆண்டவர் எங்கள் ...............க் கேட்டார்.
17. ஏனெனில் அவனே தன் தந்தையின் ஆற்றலது ...............
23. உன் தலைக்கு மேலுள்ள.......... வெண்கலமாகவும்___ இருக்கும்.
27. தீ அவர்களை ................ப் பிடிப்பாய்.
28. என்றுமுள அவரது ............... உனக்கு அடித்தளம்.
29. உன் கடவுளாகிய ஆண்டவர்மீது ............... பாராட்டு
32. அவர்கள் சகோதரர்கள் ..................... அவர்களுக்கு___ இல்லாதிருக்கட்டும்.
33. அந்த மக்களினங்களிடையே உனக்கு ............... இராது.
36. அவர் தம் மேலாடையை ___உனக்கு ........... வழங்குவார்.

### கீழிருந்து மேல்

4. தொழுநோயைக் குறித்து எச்சரிக்கையாய் ..................
7. உனக்கு நன்மைகள் ஈந்து ___ உன்னைப் ...................ச் செய்வார்.
14. .................... வெளியிலும் ஆசி பெற்றிடுவாய்.
15. அவரே .......................! அவர் செயல் நிறைவானது.
20. நீ அவருக்குச் ................. கொடு
22. ஏனெனில் இஸ்ரயேலின் .................. ஒருத்தியின் மேல்___கூறியுள்ளான்.
23. அப்போது நீயும் ................. பெறுவாய்.
30. உன் கடவுளாகிய ஆண்டவர்___ கொன்று ..................
34. தமக்கு அடுத்திருப்பவரின் எல்லைக் ................. அப்புறப்படுத்துபவர் சபிக்கப்படட்டும்.

## புனிதர்களின் பாதையில்.....

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

முதல் வத்திக்கான் சங்கத்தில் திருத்தந்தையின் தவறாவரம் பற்றித் திறமையுடன் எடுத்துரைத்து, அனைவரின் பாராட்டுகளையும் பெற்றார். ஆனால் இறுதியில் இவர் நாடு கடத்தப்பட்டு ஸ்பெயின் நாட்டின் எல்லைக் கோடியில் 63 வயதில் காலமானார்.

**சிந்தனைக்கு**

அவருடைய திவ்விய நற்கருனைப் பக்தி, மரியாயின் மாசற்ற இதயத்திற்குரிய பக்தி, செபமாலை பக்தி, கத்தோலிக்க வெளியீடுகளைப் பரப்புவதில் இவருக்கிருந்த ஆர்வத்தை நாமும் பின்பற்றினால் இன்றுள்ள இடையூறுகளுக்கு இடையிலும் இயேசுவின திருமறை எங்கும் பரவுமே!

## திருக்குடும்ப சபையின் .....

11ஆம் பக்கத் தொடர்ச்சி

உலகின் மத்தியில் புளிக்காரமாக மறைந்த வாழ்வில் எமது நல்ல பிதா பீற்றர் பியன்வெனு நோஆயின் **“இறைவன் மாத்திரமே”** என்ற மனப்போக்குடன் நாம் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இன்றைய கலாசாரச் சீர்கேடுகளினால் உலகில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவும், மக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், இறையன்பை - இறை பராமரிப்பை மக்கள் விளங்கிக்கொண்டு அனுபவிக்கச் செய்யவும் நலிவுற்ற மக்கள் மத்தியில் இறை விசுவாசத்தை உறுதிப்படுத்தி இறைவனின் பிரசன்னத்தை அவர்கள் அனுபவிக்கத் தூண்டுவதும், வழிகாட்டுவதும் எமது பணியாகின்றது.

நாம் வாழும் சமூகத்தில் நலிவுற்றோர், துன்புறுவோர் மட்டில் பணி புரியவும், இறைவல்லமையும் ஆசியும் பெற்றவர்களாக வாழவும் இறைபலம் எமக்கு கிடைக்கின்றது. ஆகவே இக்கொடைகளைப் பெற்று பீற்றர் பியன்வெனு நோஆயின் ‘இறைவன் மாத்திரமே’ என்ற அருங்கொடையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவும், திருக்குடும்ப சபையின் திருமடசார்பற்ற குழுவில் இணைந்து செயற்படவும், நல் உள்ளம் கொண்ட தனித்து வாழும் பெண்களை அழைத்து நிற்கின்றோம்.

**யூபிலி விழா அமைப்பாளர்,**
**யாழ் மாகாண இல்லம், யாழ்ப்பாணம்**

## மனிதன் இறை உருவிலே .........

1ஆம் பக்கத் தொடர்ச்சி

கிறிஸ்தவ விசுவாசத்தின்படி மனிதன் இறை உருவிலேயே படைக்கப்பட்டிருக்கின்றான் (தொ.நூ 1:27). ஆதலால் மனிதன் எப்போதும் மரியாதையுடனும், மாண்புடனும் நடத்தப்பட வேண்டும். ஆகவே சிறைக்கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டியதும், தேசிய சட்ட விதிகளுக்கமைய அவர்களின் மாண்பைப் பேணவேண்டியதும் அரசாங்கத்தின் பொறுப்பாக உள்ளது.

நாட்டின் கல்விநிலை பற்றியும் நாம் ஆட்சேபனையைத் தெரிவித்துக்கொள்கிறோம். பரீட்சை நடாத்தப்படும் விதத்தில் கடும் அதிருப்தி நிலவுகிறது. எமது பல்கலைக்கழகங்கள் அடிக்கடி மூடப்படுவதனால் மாணவர்கள் அதைரியம் அடைகிறார்கள். பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

இந்தப் பிரச்சினைகளால் பாதிக்கப்படும் மாணவர்களின் நிலையைக் கருதி இதுபற்றிய அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்தையும், சம்மந்தப்பட்டவர்களையும் கத்தோலிக்க ஆயர் பேரவை வேண்டிக்கொள்கிறது. எமது பிள்ளைகளின் நலன் கருதி நாட்டில் சுமூகநிலை ஏற்பட வேண்டும்.

வடமத்திய மாகாண விவசாயிகளும் அனைத்து விவசாயிகளும் நாட்டுக்குத் தேவையான அளவு அரிசியை விளைவிப்பதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள். இவர்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

இறுதியாக அரசியல் தீர்வும் முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. நீடிய யுத்தத்தால் துன்பப்பட்ட நாட்டு மக்கள் நிலையான அமைதியை விரும்புகிறார்கள். ஆகவே இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை நாட்டு பிரச்சினைகளைத் தீர்த்து இலங்கை மக்களுக்கு உண்மையான அமைதியையும், நீதியையும் தரும் அரசியல் தீர்வுக்காக உழைக்குமாறு அரசாங்கத்தையும் சம்மந்தப்பட்டவர்களையும் கேட்டுக் கொள்கிறது.

## உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர்களே

உங்களுக்கு அனுப்பப்படும் பத்திரிகையின் முகவரிக்குக் கீழே உங்கள் சந்தாக் காலம் குறிக்கப்பட்டுள்ளது. அதைப் பார்த்து உரிய காலத்தில் உங்கள் சந்தாவைப் புதிப்பித்துக் -கொள்ளுங்கள். சந்தாவை புதிப்பிக்காதவர்களுக்கான பத்திரிகையை எதுவித முன்னறிவித்தலும் இன்றி நிறுத்திவிடுவோம் என்பதை வருத்தத்தோடு அறியத் தருகின்றோம்.

மன்னா நிர்வாகம்

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 121ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:




**முதலாம் பரிசு:**
அமல்ராஜ் விதுஷா,
மடுக்கரை, நானாட்டான்.

**இரண்டாம் பரிசு:**
தி. மேரி டயானா,
இல-49/83m, கோவில் வீதி,
குருமன்காடு, வவுனியா.

**மூன்றாம் பரிசு:**
ம. தர்மிகா,
இல-109,பெ.பண்டிவிரிச்சான்,
மடுக்கோவில்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 65 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 60 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 121ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

## பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. இ. சுஜேன்சி பறுனாந்து, முத்தரிப்புத்துறை.
2. ஜே. ஐ. கிஷோலா றொட்ரிகோ, 1ம் வட்டாரம், வங்காலை.
3. எஸ். பிரான்சிஸ் ரமா, தலைமன்னார்.
4. எம். டி. மரிய டிலானி, பள்ளக்கமம், முருங்கன்.
5. எஸ். நிர்மலி, பிரா.கன்னியர் இல்லம், சின்னக்கடை, மன்னார்.
6. எ. மேரி டயானா லெம்பேட், 8ம் வட்டாரம், வங்காலை, மன்னார்.
7. டொ. மெக்சிகார்மேலா சோசை, 8ம் வட்.ரம், வங்காலை, மன்னார்.
8. வெ. திரேஸ் லெம்பேட், 9ம் வட்டாரம், வங்காலை, மன்னார்.
9. எஸ். றொனால்ட் றீகன் (சதீஸ்), இல.240 வீரபுரம், நேரியகுளம்.
10. ச. ஸ்ரைனி வாஸ், 5ம் வட்டாரம், வங்காலை, மன்னார்.
11. சி. மில்றோய் பீரிஸ், முத்தரிப்புத்துறை.
12. எஸ். பெனடிக்ற் தயாளன், இலுப்பைக்குளம், நேரியகுளம்.
13. கே. டினேஸ், அரிப்பு, சிலாவத்துறை.
14. எஸ். பிரான்சிஸ் பீரிஸ், முத்தரிப்புத்துறை.
15. கி. தனுஷாந்த், வீரபுரம், நேரியகுளம்.
16. சிபோன் மரியகாணிக்கை பீரிஸ், முத்தரிப்புத்துறை.
17. அ. சகாயநாயகி, ஆவணம், நானாட்டான்.
18. பி. டானியேல் றோச், முதலியார்குளம், செட்டிகுளம்.
19. யே. யூக்கலிஸ்ரா, இத்திக்கண்டல், அடம்பன்.
20. செ. ஜொவ்ளின் சுகானுஜா, ஆவணம், நானாட்டான்.
21. என். டேமியன் கூஞ்ஞ, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
22. எஸ். சகாயஸ்ரெலா பீரிஸ், அரிப்பு, சிலாவத்துறை.
23. செ. ஜொய்ஸ்ரன் மெறினோ, ஆவணம், நானாட்டான்.
24. ப. மேரி ஜீவிதா துரம், பறப்பாங்கண்டல், சிறுக்குளம்.
25. சி. நோயல் கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
26. டிறோன், பனக்கட்டுக்கொட்டு, மன்னார்.
27. ஜே. சஞ்சிவன், பனக்கட்டுக்கொட்டு, மன்னார்.
28. எஸ். சாள்ஸ் அன்ரனி, தாமரைக்குளம், அடம்பன்.
29. எம். செபமாலை, இல-240, வீரபுரம், நேரியகுளம்.
30. செ. சுரேக்கா, இத்திக்கண்டல், அடம்பன்.
31. ம. மத்தியூஸ் குரூஸ், அரிப்பு சிலாவத்துறை.
32. யே. கிறிஸ்தம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
33. யோ. றொசிற்றா (சுமி), பெரிய பண்டிவிரிச்சான்.
24. என். தேன் மொழி, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
35. யே. சுமணா பிகிறாடோ, இல-201/17, பள்ளிமுனை, மன்னார்.
36. என்.சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னர்.
37. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
38. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.
39. ஏ. மார்கிறேட், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
40. அருட்சகோதரி நிஷானி, பம்பைமடு, வவுனியா.
41. டெபோறா யோகன்ராஜ், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
42. பி. மரியதாஸ், சென் மேரீஸ் வீதி, அடம்பன்.
43. எ. அனஸ்ரீனா, தாமரைக்குளம், வவுனியா.
44. ம. றீசா ராசமலர் குரூஸ், அரிப்பு, சிலாவத்துறை.
45. மே.பி.றோ. கிறிஸ்ரோப்பர், 18, கோவில் வீ.ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
46. ச. யேசு றெக்ஸ் வாஸ், 5ம் வட்டாரம், வங்காலை, மன்னார்.
47. எஸ். ஜெரோம், தாமரைக்குளம், அடம்பன்.
48. அஜித்தா, முத்தரிப்புத்துறை.
49. டிலக்ஷன், குழந்தை யேசுபுரம், மன்னார்.
50. இ. டிறோமி, குழந்தை யேசுபுரம், மன்னார்.

## இல.121 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ[04] | ன் | நா[19] | வு | இ[02] | ட | க் | கை[26] | க | ள் |
| வி[35] | ✻ | ய் | ர | ✻ | பெ[12] | ண் | ழ் | ✻ | ஊ[18] |
| டை | தா[31] | யூ[27] | இ[5] | னி | ன் | ✻ | க[32] | த் | தி |
| ஆ[20] | ண் | ட | வ | ரே | மோ[17] | வா | பு[36] | லூ[8] | ✻ |
| று | ✻ | லை | ர் | ✻ | ம் | பீ[1] | ன் | சு | ர் |
| நி[28] | கொ[22] | ல் | ல | போ[7] | ரி[13] | டு | அ[16] | ✻ | யி |
| ணை | றை | க[3] | ✻ | ர் | வி | ✻ | ணி | னி | த[9] |
| வு | பா[6] | கா | ல் | பூ[29] | செ[34] | கா[21] | சா[10] | ப[25] | ம் |
| ற | டி | ல் | ழி | ரா | ✻ | மை | தீ[15] | ✻ | ன |
| உ[23] | ✻ | பா[11] | வ[14] | ம் | ம[30] | க | ள் | வா[24] | சி[33] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.122ற்கான முடிவுகளை 2012ம் ஆண்டு நவம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**

கறுப்பு வெள்ளை ரூபா4,500/= கலர் ரூபா7,500/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 06ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு — உதிர்வு

17 — 28

05 — 10



1958 — 2006

### ஞானப்பிரகாசம் அமிர்தநாதன்

(இல. 114. மில்வீதி. வவுனியா)

*"கடவுளே உமது பேரன்பு எத்துணை அருமையானது. மானிடர் உம் இறக்கைகளின் நிழலில் புகலிடம் பெறுகின்றனர் " (தி.பா 36:7).*

ஆண்டுகள் உருண்டோடியும் காலங்கள் மாறியும் - எம் இதய ஓலங்கள் ஓயவில்லை. பிறப்பதும் இறப்பதும் நியதி - ஆனால் உங்கள் இறப்பில் சற்று அவசரம் ஏன்?
முத்துச் சிரிப்பினால் பதிலளிக்கும் - அந்த
அழகிய வதனம் இடையில் மறைந்ததேன்?
உங்கள் கல்லறையில் கண்ணீர்ப் பூக்களால்
வினாதொடுத்து பதில் கேட்கின்றோம்.
விடைகாண எங்கு செல்வோம்?
இறைபதம் அமர்ந்து எமக்காய் வேண்டி அமைதியில் இளைப்பாற இறைவனை வேண்டி நிற்கின்றோம்

***என்றும் உங்கள் நினைவில்:- மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்***

## லெபனான் நாட்டுக்கும் ......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

லெபனான் அரசுத் தலைவர், பிரதம மற்றும் திருஅவைத் தலைவர்கள் திருந்தந்தையை கைலாகு கொடுத்து வரவேற்றனர். தனது மூன்று நாள் திருப்பயணத்தின்போது திருத்தந்தை லெபனானில் உள்ள 18 சமயக் குழுக்களின் தலைவர்கள்ளையும், அரசியல் தலைவர்களையும் சந்தித்தார். 15 வருடங்களிற்குப் பின்னர் திருத்தந்தை ஒருவர் லெபனானுக்கு விஜயம் செய்திருப்பது இதுவே முதல்தடவையாகும்.

## உலகில் மரண தண்டனைகள் .....

9ஆம் பக்கத் தொடர்ச்சி

காம்பியாவிலுள்ள அனைத்து மரணதண்டனை கைதிகளுக்கும் இந்த செப்ரம்பர் பாதிக்குள் அத்தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டுமென அந்நாட்டு அரசுத்தலைவர் அறிவித்த சில நாள்களுக்குள் ஒன்பது கைதிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஈராக்கில் இந்த 2012ம் ஆண்டு தொடங்கியதிலிருந்து 96 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் இந்த ஆகஸ்டில் மட்டும் 26 பேருக்கு இத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

ஐ.நா.வின் 150 நாடுகள் சட்டத்தில் அல்லது நடைமுறையில் மரணதண்டனைகளை இரத்து செய்துள்ளன அல்லது தண்டனைக் காலத்தை மாற்றியுள்ளன என உரைத்த அவர், உலகில் மரணதண்டனைகள் முழுவதுமாக நிறுத்தப்படுமாறு மீண்டும் ஐ. நா கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்தார். உலக அளவில் பார்க்கும்போது இத்தண்டனை வழங்குவது தற்போது குறைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## மன்னார் ஆயர் ஜனாதிபதிக்கு அறிக்கை.....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

1. தமிழர் தேசிய பிரச்சினை, தேசிய இனம், மாகாணசபைத் தேர்தல். 2. காணாமலாக்கப்பட்டவர்கள், 3. அரசியல் கைதிகள், 4. சட்டத்திற்கு புறம்பான கொலைகள், 5. இறந்தோருக்குரிய மரியாதை. கொல்லப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதி, 6. யுத்த வெற்றியை கொண்டாடுவதற்குப் பதிலாக பாதிப்புக்குள்ளானவர்களை நினைவுகூர்தல் 7. தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டோர், தஞ்சக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டோர், 8. கருத்துச்சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் 9. யுத்தத்தில் அங்கவீனமாக்கப்பட்டோர், உழைப்பாளிகளை இழந்தவர்கள், குணமாக்கப்படாத மன அழுத்தத்தில் உள்ளோர், 10. அரசியல் தலையீடுகள், 11. காணிப் பிரச்சினைகள், அரச மற்றும் தனியார் காணிகளை இராணுவம் ஆக்கிரமித்தல், 12. உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களுக்கான மீள்குடியேற்றம், 13. மீன்பிடி, 14. கலாச்சார ஆக்கிரமிப்பு, 15. பொருளாதாரத்தில் இராணுவத் தலையீடு, 16. இராணுவமயப்படுத்தலை இல்லாதொழித்து சுமுக நிலையை ஏற்படுத்தல் ஆகியவையே இந்த 16 விடயங்களாகும். இவ்விடயங்கள் தொடர்பாக ஆயர் சமர்ப்பித்த அறிக்கையின் முழு விபரமும் அடுத்த மாத மன்னாவில் இடம்பெறும்.

## முருங்கன் மற்றும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற

# சலேசிய இறை அழைத்தல் பாசறை – 2012

எல்லா இளையோர்களின் முகங்களில் மகிழ்ச்சி வெள்ளம்! பற்பல எதிர்ப்பார்புக்கள்! பாசறையில் என்னதான் நடக்கப்போகின்றது என்கின்ற கேள்விக்கணையோடு மாதோட்ட மண்ணின் சிறப்புமிக்க முருங்கன் பிரதேசத்தில் உள்ள தொன்போஸ்கோ மாணவர் இல்லம் நோக்கி பல இளைய மாணவர்கள் ஆவணி 16ம் திகதி வருகை தந்திருந்தார்கள். இப்பாசறையை எமது சலேசிய உப மாகாணத்தின் இறையழைத்தல் இயக்குனராக இருக்கும் அருட்பணி. ஜெரால்ட் (ச.ச) அவர்கள் பொறுப்பாக இருந்து வழிநடத்தினார். இவருடன் இணைந்து எமது தொன்போஸ்கோ இல்ல முதல்வர் அருட்பணி போல் (ச.ச), உதவி முதல்வர் அருட்பணி றெஜி (ச.ச), அருட்தந்தை மெல்வின் (ச.ச), அருட்சகோதரர்கள், ஆசிரியர்கள் அனைவரும் தங்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்கியிருந்தார்கள்.

நான்கு நாட்களாக நடந்த இந்தப் பாசறையானது திருப்பலி, இறையழைத்தல் தொடர்பான கருத்தமர்வுகள், ஆங்கில வகுப்புக்கள், வினா - விடைப்போட்டி, ஓவியப்போட்டி என பல்வேறு நிகழ்வுகளால் அலங்கரிக்கப்பட்ட ஓர் அற்புத நிகழ்வாக அமைந்திருத்தது. "ஆன்மீகமே என் தாகம். அதனால் நான் செய்வேன் தியாகம்" என பணி செய்யக் காத்திருக்கும் எமது இளைய மாணவர்களுக்கு ஏற்ப அனைத்து நிகழ்வுகளும் அவர்களை இறையழைத்தல்மேல் ஆர்வத்தை அதிகரிக்கக்கூடியவாறு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. மன்னார் மறைமாவட்டத்திலிருந்து ஏறக்குறைய 60 மாணவர்கள் இந்தப்பாசறையில் பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது. இப்பாசறை சிறப்புடன் நடைபெற உதவிய மன்னார் மறைமாவட்ட அருட்தந்தையர்கள் அனைவருக்கும் எமது இதய நன்றிகள்.

ஆவணி 16ம் திகதி 4.00 மணிக்கு ஆரம்பித்த இப்பாசறையானது 17,18,19ம் திகதிவரை நடாத்தப்பட்டது. 18ம் திகதி இரவு மாணவர்களின் ஆற்றல்களை வளர்க்கும் வகையில் கலை நிகழ்வுகளும், இரவு ஒலிம்பிக் போட்டிகளும் இடம்பெற்றன. இறுதி நாளான 19ம் திகதி விநோத விளையாட்டுப் போட்டிகள் தொன்போஸ்கோ விளையாட்டுத்திடலில் இடம்பெற்றன.

போட்டி முடிவில் பரிசில்களும் வழங்கப்பட்டன. இப்பாசறையானது ஏறத்தாழ பிற்பகல் 2.00 மணியளவில் மதிய போசனத்துடன் நிறைவுபெற்றது. மாணவர்கள் அனைவரும் வாடிய முகத்துடன் தொன்போஸ்கோ இல்லத்தை விட்டுப் பிரிய மனமில்லாதவர்களாக நிற்பதைக் காணமுடிந்தது.

இதைப்போலவே 20ம் திகதி எமது அடுத்த சலேசிய இறையழைத்தல் பாசறையானது யாழ் மாணவர்களுக்காக யாழ்ப்பாண கிளாரட் அகத்தில் இடம்பெற்றது. யாழ் மறைமாவட்டத்தில் உள்ள பல்வேறு பங்குகளிலுமிருந்து ஏறக்குறைய 35 மாணவர்கள் வருகை தந்திருந்தார்கள். இவ் இறையழைத்தல் பாசறையானது யாழ் மறைமாவட்டத்தில் நடைபெறுவதற்கு பக்கபலமாக இருந்த அருட்தந்தை வரதன் குலாஸ் CMF அருட்தந்தை வின்செனட் CMF இவர்களையும் கிளாரட் அக பணியாளர்களையும் நாம் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

அத்தோடு யாழ் மறைமாவட்டத்தில் அருட்பணியாற்றும் அனைத்து பங்குத்தந்தையர்களையும் நாம் நன்றியுடன் நினைவுகூருகின்றோம். அத்துடன் இவ்விரு நிகழ்வுகளும் இனிதே நிறைவேற எமக்கு தோள்கொடுத்து உதவிய எமது இலங்கை சலேசிய உப மாகாண உதவித்தலைவர் அருட்திரு. டிக்சன் பெர்னாண்டோ (ச.ச), அருட்தந்தை போல் ச.ச, அருட்தந்தை றெஜினோல்ட் ச.ச, அருட்தந்தை மெல்வின் றோய் ச.ச அருட்சகோ. விக்டர் ச.ச, அருட்சகோ. ஞானராஜ் ச.ச ஆசிரியர் திரு. யூட், மற்றும் குருமட சிரேஸ்ட மாணவர் மாட்டின் இவர்கள் அனைவரையும் நன்றிப்பெருமிதத்துடன் பார்க்கின்றோம்.

இன்று 135க்கும் மேற்பட்ட நாடுகளில் இளைஞர் பணியாற்றும் நாம் இலங்கையிலும் பணியாற்றுகின்றோம். ஆனாலும் எமது தமிழ் மறைமாவட்டங்களில் சலேசியப்பணியாற்ற பல சலேசியர்கள் தேவை. எனவே உறவிற்காய், அன்பிற்காய் ஏங்கும் இளையோரின் துன்ப துயரங்களை துடைத்து அறிவொளி ஊட்டி உயிர்த்துடிப்புடன் ஆண்டவன் பணி செய்ய எமக்கு பல நல்ல உள்ளங்கள் தேவை? அதற்கு இளையோரே நீங்கள் தயாரா?

ed wp **தகவல்:- தொன் போஸ்கோ சமூகம்.**

## முகமது நபி குறித்த ....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

The Innocence of Muslims என்ற அமெரிக்கத் திரைப்படத்தின் முன்னோட்டம் முகமது நபி அவர்களை பெண் பித்தராகவும், மோசடிக்காரராகவும் காண்பித்ததால் உலகெங்கும் பல அமெரிக்க தூதரகங்கள் முஸ்லிம்களால் தாக்கப்படுகின்றன. 14 நிமிடம் ஓடும் இந்தத் திரைப்படத்தின் முன்னோட்டத்தை பாகிஸ்தான், பங்காளதேஸ் போன்ற சில நாடுகள் தங்கள் இணையத்தளங்களில் தடைசெய்துவிட்டன என்று செய்திகள் கூறுகின்றன.

## சீன மொழியில் விவிலியத்தை .....

9ஆம் பக்கத் தொடர்ச்சி

ஷங்கையில் சீன மொழியைக் கற்ற பின்னர் 1944ம் ஆண்டில் சிலருடன் சேர்ந்து விவிலியத்தின் பழைய ஏற்பாட்டை மொழி பெயர்த்தார். பின்னர் சீனாவில் ஏற்பட்ட கிளர்ச்சியால் 1949ம் ஆண்டில் ஹாங்காங் சென்றார். 1968ம் ஆண்டில் சீன மொழியில் முழு விவிலியத்தையும் மொழிபெயர்த்து வெளியிட்டார். 1971ம் ஆண்டில் சீன மொழியில் விவிலிய அகராதியை வெளியிட்டார். 1976ம் ஆண்டில் ஹாங்காங்கில் உயிர் துறந்தார்.

பிறரன்பு மற்றும் மெய்ஞானத்தின் மாபெரும் மனிதர் என அனைவராலும் போற்றப்படுகிறார். இவர் 1994ம் ஆண்டில் இறையடியார் என அறிவிக்கப்பட்டார்.



## தேசிய ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியில் மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி

16ஆம் பக்கத் தொடர்ச்சி

முதல் பாதி ஆட்டம் ஆரம்பமாகியபோது இரு அணியினரும் தத்தமது அணிக்கான கோலினைப் பெறும் நோக்கோடு பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

இதன்போது மன்னார் சென் சேவியர் கல்லூரி அணிவீரன் விமல் 13 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான முதலாவது கோலினை அடிக்க ஆட்டம் சூடு பிடிக்கத்தொடங்கியது.

மானிப்பாய் இநதுக் கல்லூரி அணியினர் பதிலடி நோக்குடன் முன்னேறியபோதும்கூட, அந்த முன்னேற்றங்கள் யாவும் மன்னார் சென் சேவியர் கல்லூரி பின்கள வீரர்களின் தடுப்பாட்டத்தினால் முறியடிக்கப்பட்டன. இதனால் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினரால் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை. ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது மன்னார் சென் சேவியர் கல்லூரி அணி 1:0 என்ற கோல் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் மன்னார் சென் சேவியர் அணியின் ஆதிக்கமே தொடர்ந்தது. இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகி 7ஆவது நிமிடத்தில் மன்னார் சென் சேவியர் அணி வீரர் ஜோன்சன் தனது அணிக்கு 2 ஆவது கோலினையும், 14வது நிமிடத்தில் யக்ஸன் தனது அணிக்கான 3 ஆவது கோலினையும், மீண்டும் ஜோண்ஸன் 17 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான 4 ஆவது கோலினையும் அடித்து அசத்தினர்.

மன்னார் சென் சேவியர் அணியின் இந்த "ஹட்ரிக்" கோல்களால் நிலைகுலைந்தது மானிப்பாய் இந்துக் கல்லூரி. இந்தச் சரிவில் இருந்து மீண்டெழுந்து பதிலுக்கு தாமும் கோல் அடிக்க மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வீரர்கள் முயன்றபோது, அந்த எண்ணம் ஈடேறுவதற்கு சென் சேவியர் அணியினர் விடுவதாக இல்லை. ஆட்டத்தின் இறுதிக்கட்டத்தில் தமது தோல்வியைத் தவிர்க்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டவர்கள்போல மாணிப்பாய் இந்துக் கல்லூரியினர் ஆக்ரோஷமான ஆட்டத்தைக் கைவிட்டனர்.

ஆட்டநேர முடிவில் மன்னார் சென் சேவியர் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துவை வீழ்த்தி தேசிய மட்ட சம்பியனானது. இரண்டாம் இடத்தை மானிப்பாய் இந்து பெற்றுக்கொண்டது.

இவ்வெற்றிகளுக்குரிய பயிற்றுவிப்பாளராக ஆசிரியர் திரு. பி. ஞானராஜ் அவர்களும், அணித்தலைவராக செல்வன். கே. இல்மன் சொய்சா அவர்களும், நெறிப்படுத்தி வழிப்படுத்திய அதிபர் அருட்சகோ. ஜோசப் அகஸ்ரின் அவர்களையும் நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றோம்.

இக்கல்லூரி இச்சுற்றுப்போட்டியில் 1வது போட்டியில் ஊவா மாகாண லுணுகல ம. வி. ஐ 4:0 என்ற கோல் கணக்கிலும், 2வது போட்டியில் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியை 3:1 என்ற கோல் கணக்கிலும், கால் இறுதிப்போட்டியில் கொழும்பு ஷாகிறா கல்லூரியை 1:0 என்ற கோல் கணக்கிலும் அரையிறுதியில் மாத்தறை சென் தோமஸ் கல்லூரியை 4:0 என்ற கோல் கணக்கிலும் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மாணிப்பாய் இந்துக் கல்லூரியை 4:0என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்று 2012ம் ஆண்டிற்கான சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டியில் ஜக்சன் 9 கோல்களையும் யோண்சன் 3 கோல்களையும், டிலக்சன் 2 கோல்களையும், கிசோர் 1 கோலையும், விமல் 1 கோலையும் அடித்தனர்.

இவ்வீரர்களை 19.09.2012 புதன் கிழமை காலை 9.30 மணிக்கு மன்னார் நகர ரவுண்டபோட் பகுதியில் வைத்து வடமாகாண கௌரவ ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் ஜனாப் டீன், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் ஜனாப் சியான், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மன்னார் நகரபிதா திரு. ஞானப்பிரகாசம், தள்ளாடி படைத்தளபதி டியூ கொமாண்டர் மைத்திரி டயஸ், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தளுவத்தை ஆகியோருடன் அரச அரச சார்பற்ற திணைக்கள அதிகாரிகள், அதிபர்கள் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், நகர மக்கள் என ஆயிரக்கணக்கானோர் ஒன்றுகூடி மாலை அணிவித்து கல்லூரியின் பேண்ட் வாத்திய இசை முழக்கத்துடன் கல்லூரியை நோக்கி ஊர்வலமாக பட்டாசு முழக்கத்துடன் மங்களகரமாக அழைத்துச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா


## மறைக்கல்வி ஆண்டை முன்னிட்டு
## மன்னார் மறைமாவட்ட பங்குகளின் ஒத்துழைப்போடு மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்பட்ட
# விவிலியக் கண்காட்சி



மறைக்கல்வி ஆண்டை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட பங்குகளின் ஒத்துழைப்போடு மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்பட்ட விவிலியக் கண்காட்சி மன்னாரிலும், வனியாவிலும் நடாத்தப்பட்டது. கடந்த செப்ரம்பர் மாதம் 15,16ம் திகதிகளில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் காலை 8.00 - மாலை 5.00 மணிவரை இக்கண்காட்சி இடம்பெற்றது. அதேபோன்று செப்ரம்பர் 22, 23ஆம் திகதிகளில் வவுனியா இறம்பைக்குளம் ம. ம. வி தேசிய பாடசாலையில் காலை. 8.00 - மாலை 5.00 மணிவரை இடம்பெற்றது. இரண்டு இடங்களிலும் ஏராளமான மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் இக்கண்காட்சியைப் பார்வையிட்டு பயன் அடைந்தனர்.

இந்தப் பாரிய முயற்சிக்கு தலைமையேற்று முன்னின்று உழைத்த மன்னார் மறைக்கல்வி நிலையத்தின் இயக்குனர் அருட்திரு. பி. றெஜினோல்ட் அடிகளாரையும், நிலையப் பணியாளர்களையும் மன்னா பாராட்டி மகிழ்கின்றது. அதேபோன்று பங்கு மறையாசிரியர்கள் பலநாள் இதற்காக உழைத்து இம்முயற்சி வெற்றிபெற தமது ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். அவர்களும் எமது வாழ்த்துக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள்.



மறைக்கல்வி இயக்குனர்
அருட்பணி. றெஜினோல்ட்

## தேசிய ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியில் மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மூன்றாவது வருடமாக தொடர்ந்து தேசிய சாதனை!



அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே தேசிய ரீதியில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணி சம்பியனாகியது. கடந்த 18.09.2012 அன்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது. ஆட்டநேர முடிவில் மன்னார் புனித சவோரியர் ஆண்கள் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துவை வீழ்த்தி தேசிய மட்ட சம்பியனானது. தேசிய மட்டப்போட்டி ஒன்றில் வடமாகாணத்தைச் சேர்ந்த இரு அணிகள் முதல் இரு இடங்களையும் கைப்பற்றி சாதனை படைத்துள்ளன.

2010, 2011, 2012 ஆகிய ஆண்டுகளில் மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி தொடர்ந்து தேசிய சம்பியனாகி 'ஹட்றிக்' சாதனையை நிலைநாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(போட்டி பற்றிய முழுமையான விபரத்தை 15ஆம் பக்கத்தில் காணலாம்)

## புதிய இளைஞர் பணி மையக் கட்டிடம் திறந்து வைப்பு

மன்னார் மறைமாவட்ட கததோலிக்க இளைஞர் பணிக்கான புதிய பணியகக் கட்டடத்தை கடந்த 18.09.2012 அன்று குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை ஆசீர்வதித்து திறந்து வைத்தார். அன்று மாலை 6.30 மணிக்கு சேவியர் குரூஸ் அடிகளார் திருப்பலி ஒப்புக்கொடுத்து அங்கே அமைந்துள்ள சிற்றாலயத்தை அபிஷேகம் செய்தார். இளைஞர் பணி இயக்குனர் நெவின்ஸ் அடிகளார் இக்கட்டிடம் புதுப்பொலிவுபெற உதவிய ஆயர் தொடக்கம் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.



## முருங்கன் நாட்டுக்கூத்து நிகழ்வில் கலைஞர்கள் கௌரவிப்பு

மன்னார் கத்தோலிக்க மக்களின் பாரம்பரியக் கலைவடிவமான நாட்டுக்கூத்து நிகழ்வு முருங்கன் புனித இயாகப்பர் ஆலய மக்களால் கடந்த செப்ரம்பர் மாதம் 4ஆம் திகதி (04.09.2012) மேடையேற்றப்பட்டது. இதே ஆலயத்தைச் சேர்ந்த அருட்திரு. தமிழ் நேசன் அடிகளாரின் தந்தையார் அமரர் சந்தான் பாவிலு அவர்கள் எழுதிய தூய சில்வேஸ்திரியார் வாசாப்பு என்னும் நாட்டுக்கூத்து நாடகமே அன்றைய நாளில் மேடையேற்றப்பட்டது. இந்நாடகம் ஒரு இரவு முழுவதும் நடைபெறுகின்ற நிகழ்வாகும். நாடக நெறியாள்ளர்கள், ஒழுங்கமைப்பாளர்கள், நடிகர்கள், வாத்தியக் கருவிகளை இசைப்போர், பிற்பாட்டுக்காரர் என 50 கலைஞர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். கலாபூசணம் செ. மாசில்லாமணி அவர்களின் நெறியாள்கையில் இடம்பெற்ற இந்நாடகத்தின் நிர்வாக ஒருங்கிணைப்பை முருங்கன் புனித இயாகப்பர் ஆலய சபைத்தலைவர் திரு. பா. புனிதராஜ் அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

முருங்கன் பங்குத்தந்தை அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்வரங்க நிகழ்வின் முதன்மை விருந்தினராக மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக நானாட்டான் பிரதேச செயலாளர் திரு. சந்திரஜயா, மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். ஷியான் ஆகியோர் கலந்துகொண்டனர். கௌரவ விருந்தினர்களாக முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு. அகஸ்ரின் புஸ்பராஜ் அடிகளார், முருங்கன் பிரதேச வைத்திய அதிகாரி திரு. ம. ஒஸ்மன் சாள்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)



மேடையில் பிரமுகர்கள் நிற்கின்றனர். மன்னார் ஆயர் அவர்கள் மங்கள விளக்கேற்றுகின்றார். முருங்கன் பாடசாலை அதிபர் திரு. ப. சந்தியோகு அவர்கள் ஆயரினால் கௌரவிக்கப்படுகின்றார். புனித இயாகப்பர் ஆலயசபைத் தலைவர் பா. புனிதராஜ் அவர்கள் வரவேற்புரை வழங்குகிறார். மேடையில் நடிகர்கள் நடிக்கின்றனர்.

## நீங்காத நினைவுகள்

### 31ம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 | | 05 |
| 04 | | 09 |
| 1957 | | 2012 |



### அமரர் லூக்காஸ் மெற்றில்டஸ் புனிதசீலி பீரிஸ் (புனிதா)

(தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.)

நீங்காத உம் நினைவுகள் - எம்
உயிர்வரை தொடுவதினால்
நாங்கள் உம் பெயரை
உயிருள்ளவரை உச்சரித்துக்கொண்டிருப்போம்.
வானத்தின் அந்த நீல நிறம்போல
உம் நேசம் என்றும் நிறம் மாறாமல்
எம்மைச்சுற்றி சூழ்ந்துகொண்டேயிருக்கட்டும்!
உம் பிரிவைத் தாங்காத எம் மனங்கள்
சிறகடித்து தத்தித் தாவித் திரிவதை
பாசம் ஒன்றிற்காக பரிதவிப்பதை அறிவீரோ தாயே....!



பிரிவால் துயருறும்:-
அருமை மகன், அன்புச் சகோதரர்கள், சகோதரிகள், உற்றார் உறவினர்கள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வழங்கைக்கப்பட்டு ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org